
# பொருளியல் நோக்கு

அக்டோபர்
1986



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.




## சீனி - உற்பத்தி நுகர்வு வர்த்தகம்

மக்கள் வங்கி வெளியீடு


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொருளாதார குறிகாட்டிகள்


வெளிநாட்டு வர்த்தகம்
(பெறுமதி பத்து லட்சம் எஸ். டி. ஆர்.)





வர்த்தக நிலுவை
(எஸ். டி. ஆர். பத்து லட்சம்)




ஏற்றுமதி வருமானங்கள்
(எஸ். டி. ஆர். பத்து லட்சம்)





விலைபொருள் விலைகள்




* ஜனவரியிலிருந்து ஜூன் வரை

வர்த்தக குறிகாட்டிகள் (1981 = 100)




எஸ். டி. ஆர். பெறுமதி

| | | | | |
|---|---|---|---|---|
| 1977 | 1 | எஸ். டி. ஆர் | - | ரு. 10.42 |
| 1978 | 1 | ,, | - | 19.58 |
| 1979 | 1 | ,, | - | 20.13 |
| 1980 | 1 | ,, | - | 21.52 |
| 1981 | 1 | ,, | - | 22.57 |
| 1982 | 1 | ,, | - | 22.98 |
| 1983 | 1 | ,, | - | 25.18 |
| 1984 | 1 | ,, | - | 26.05 |
| 1985 | 1 | ,, | - | 27.83 |
| 1985 | (ஜன. – ஜூன்) | | - | 28.42 |
| 1986 | (ஜன. – ஜூன்) | | - | 31.71 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளியல் நோக்கு

மலர் 12 இதழ் 7 அக்டோபர் 1986

மக்கள் வங்கியின்
ஆராய்ச்சிப்பகுதி வெளியீடு:
தலைமைக்காரியாலயம்,
11 வதுமாடி,
கொழும்பு 2,
இலங்கை

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

## நிரல்கள்


| | | |
|---|---|---|
| நிகழ்ச்சிக்குறிப்பேடு | 2 | செப்டம்பர் 1986 |
| நூல் ஆய்வு | 21 | விஞ்ஞானம் - திரிக்கப்பட்ட உண்மைகள் |
| சுகாதாரம் | 24 | நச்சும் பாம்புகளும் பாம்புக்கடி சிகிச்சையும் |
| விவசாயம் | 26 | நெல் அறுவடை வீழ்ச்சி - மகா 1985/1986 |


## விசேஷ அறிக்கை


| | | |
|---|---|---|
| | 3 | சீனி — உற்பத்தி வர்த்தகம், நுகர்வு |
| ரீ. பீ. கருணாரத்ன | 4 | இலங்கையில் சீனி உற்பத்தி-பழைய புதிய உற்பத்தித் திட்டங்களும் தன்னிறைவும் |


## சிறப்புக்கட்டுரைகள்


| | | |
|---|---|---|
| ரீ. கே. ஜி. ரணசிங்க | 27 | இலங்கையின் அபிவிருத்தியில் விவசாய பதனிடல் கைத்தொழிலின் பங்கு |
| ஜில்லஸ் கூட்டர் | 30 | சர்வதேச நிதியளிப்பும் மூன்றாம் உலகமும் |


## அடுத்த இதழில்

- ★ விஞ்ஞானமும், தொழில் நுட்பமும் - இலங்கையில் விஞ்ஞான, தொழில்நுட்ப ஆராய்ச்சி நிலைமை பற்றிய ஒரு பரிசீலனை
- ★ இலங்கையில் போதைப்பொருள் வியாபாரமும், துஷ்பிரயோகமும்
- ★ சவூதி அரேபியா - உலகின் மிகப்பெரிய எண்ணெய் ஏற்றுமதி நாட்டின் பிரச்சினைகள்

பொருளியல் நோக்கு கருத்துக்களையும், அறிக்கைகளையும், புள்ளிவிபரத்தரவுகளையும், உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும், பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதைக் குறிக்கோளாகக் கொண்டது.

பொருளியல் நோக்கு மக்கள் வங்கியின் ஒரு சமூகப் பணித்திட்டமாகும். எனினும் அதன் உள்ளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும், அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோக பூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக்கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக் கருத்துக்களாகும், அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரபலிப்பனவுமாகா. இத்தகைய கட்டுரைகளும், குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.

பொருளியல் நோக்கு மாதந் தோறும் வெளியிடப்படும். அதன் சந்தா செலுத்துவதன் மூலமோ, விற்பனை நிலையங்களிலிருந்தோ பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிகழ்ச்சிக் குறிப்பேடு


செப்டம்பர்


[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.




## சீனி – உற்பத்தி நுகர்வு வர்த்தகம்

இலங்கையின், சகல விதமான நுகர்வுகளுக்கும் தேவைப்படும் சீனியின் மொத்த அளவு 1985ல் 385,000 தொன் மட்டத்தையடைந்தது. 1975ல் 18,000 மெட்ரிக் தொன் நிரம்பலுடன் இது ஒப்பிடத்தக்கது. கடந்த இரு தசாப்த காலமாக இறக்குமதிகளை கட்டுப்படுத்தவும், இலங்கையின் நுகர்வுத் தேவையில் குறைந்தது 15 – 20 சதவீதத்தையாவது உள்நாட்டில் உற்பத்தி செய்வதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. ஆனால், 1978 அளவில் இறக்குமதிகள் உள்நாட்டுத் தேவையின் 85 சதவீதமாக இருந்து, 1985 ஆம் ஆண்டில் 95 சதவீத உச்சமட்டத்தையடைந்தன. உள்நாட்டில் சீனி உற்பத்தியை அதிகரிப்பதற்கு பல்வேறு மட்டங்களில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வந்துள்ளன. உள்நாட்டு சீனி உற்பத்தியில் காணப்பட்ட ஒரு முக்கிய அம்சம் உற்பத்திச் செலவு கணிசமான அளவில் அதிகமாக இருந்ததாகும். எனவே, உள்நாட்டுச் சீனி இறக்குமதி செய்யப்படும் சீனியின் விலையுடன் போட்டியிட முடியாததாக இருந்தது. இறக்குமதிச் சீனியின் விலை உள்நாட்டுச் சீனி கிலோ ஒன்றின் உற்பத்திச் செலவில் அரைவாசியாக இருந்தது. இப்பிரச்சினைகளையும், இது தொடர்பான ஏனைய அம்சங்களையும் இந்த இதழுக்கான விசேட அறிக்கை ஆராய்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் சீனி உற்பத்தி

## பழைய புதிய உற்பத்தித் திட்டங்களும் தன்னிறைவும்

சி. பி. கருணாரத்தன
(ஆராய்ச்சிப் பகுதி, மக்கள் வங்கி)

அறிமுகம்

நிதி - திட்டமிடல் அமைச்சின் தேசிய திட்டமிடல் பகுதி, விவசாய அபிவிருத்தி - ஆராய்ச்சி அமைச்சு, மகாவலி அபிவிருத்தி அமைச்சு ஆகியனவெல்லாம் சீனியில் தன்னிறைவு அடைவதற்கான திட்டத்தின் குறிக்கோளுக்கு உதவுவதில் துரிதப்படுத்திய மகாவலித்திட்டத்தின் உள்ளார்ந்த சக்தியை வலியுறுத்தியுள்ளன. "துரிதப்படுத்திய மகாவலித் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்டுவரும் புதிய காணிகளில் 3,00,000 ஏக்கர் உழப்படும்போது, நாட்டின் அரிசித் தேவைகளை உற்பத்தி செய்யத் தேவைப்படுவதற்கு மேலுள்ள காணிகளை அரிசி தவிர்ந்த மற்றைய பயிர்களைச் சாகுபடி செய்வதற்குத் திருப்பிவிட முடியும்" என விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சு அண்மையில் குறிப்பிட்டது. இந்நிலைமைகளில், மகாவலித் திட்டத்தின் கீழ் புதிய காணிகளில் வெற்றிகரமாகக் கரும்புச் சாகுபடிக்கு ஒதுக்குவது தர்க்கரீதியான நடவடிக்கையாக இருக்கும். "எச்" பகுதியில் ஏற்கெனவே பராதீனப்படுத்திய காணிகளில் சில, நீர்ப்பாசனக் கரும்புப் பயிர்ச் செய்கைக்கு ஏற்றவையாயுள்ளன என்பது பற்றியும், "பி" தொகுதியிலும் "ஸீ" தொகுதியிலும் நல்ல வடிகால் வசதியுள்ள காணிகள் அவற்றில் பெருமளவிலும் பயிர்ச்செய் வரையறுக்கப்பட்டதாக உள்ளனவென்பது பற்றியும் வி. ஆ. ஆ. அமைச்சு மேலும் விமர்சித்துள்ளது. நடைமுறை மதிப்பீடுகளின்படி, மகாவலித்திட்டத்துக்குள் கரும்புச் சாகுபடிக்குரியவாறு உகந்த ஏற்புடைய 9,100 ஹெக்டேர் காணிகளிருப்பதாகக் கருதப்படுகிறது.

மகாவலி "பி" யின் கீழ் சீனித் திட்டம்

மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் "பி" தொகுதி சம்பந்தமாக நடத்தப்பட்ட சாத்தியப் பரிசீலனையின், இத்தொகுதியின் கரும்புச் சாகுபடியும் சீனி உற்பத்தியும் செய்வதற்கு ஏற்ற வாய்ப்புகள் உள்ளனவென்பது கண்டுபிடிக்கப்பட்டது. ஒரு விரிவான திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சீனித் திட்டம் "பி" தொகுதியின் வட பகுதியிலுள்ள 3ம் 4ம் 5ம் வலயங்களில் ஆரம்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் மூன்று கூறுகளைக் கொண்டதாயிருக்கும் — தொழிற்சாலை, ஆதாரமாக ஒரு தோட்டம் (எஸ்டேட்), வீட்டுத்தோட்டம் கொண்ட ஒரு காணிப்பரப்பு. இக் காணிகளில் மகாவலிக் குடியேற்றக்காரர்கள் சாகுபடி செய்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டத்திலே இரு கட்டங்களில் நடைபெறும் அபிவிருத்தி வேலைகள் அடங்கும். நாளொன்றுக்கு 2,500 தொன் கரும்பை நசுக்கிப் பிழிய ஆரம்பத்தில் தொழிற்சாலை அமைக்கப்படும். இரண்டாவது கட்டம் பூர்த்தியானதும் இந்த உற்பத்தித்திறன் நாளொன்றுக்கு 4,000 தொன் கரும்பை நசுக்கும் அளவுக்கு அதிகரிக்கப்படும். இதற்கு ஆதாரமாக உள்ள தோட்டம் 5,300 ஹெக்டேர் பரப்புடையதாயிருக்கும். இதில் 4,000 ஹெக்டேர் எந்த ஆண்டிலும் கழங்கல் வெட்டத்தில் ஆயத்தமாயிருக்கும். பிரதான தோட்டமல்லாத காணிகளின் முதலாவது கட்டம் 4,000 ஹெக்டேர் சாகுபடிக் காணிகளைக் கொண்டிருக்கும். இதில் 3,000 ஹெக்டேர் ஆயத்தமான வழங்கல் நிலையிலிருக்கும். முழுப்பரப்பும் நான்கு வருடகாலத்துக்குள் சாகுபடியின் கீழ் கொண்டுவரப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஆதாரத் தோட்டம் அதிமையப்பட்ட இரு மேட்டு நிலப் பகுதிகளில் அமைக்கப்படும். உல்ஹிட்டி ஓயா, ருடா ஓயா ஆகிய இரு சிற்றாறுகள் வழியாக மகாவலியாற்றுக்குத் தோட்டத்திலிருந்து வடிகால் அமைக்கப்படும்.

குடியேற்றக்காரர்களுக்குக் குடும்பமொன்றுக்கு 0.8 ஹெக்டேர் அல்லது ஏறக்குறைய 2 ஏக்கர் வீதம் கரும்புக்காணி வழங்கப்படும். மகாவலியாறு தேவையான நீரைவழங்கும், காணிகள் கூடியளவான வளமற்ற பிரதேசத்திலுள்ளதாலும் நீரை உட்புக விடும் இயல்பாண்ணுக்கு அதிக அளவில்லாததாலும் மேற்பரப்பு நீர்ப்பாசன முறைகள் உபயோகிக்கப்படும். குடியேற்றக்காரர்கள், 0.2 ஹெக்டேர் தாழ் நிலங்களில் நெற்செய்கையிலிருந்து சேகரிக்கக்கூடிய தானிய அறுவடைக்கு மேல் கரும்பை நடுவதன் மூலம் ரொக்கப் பண வருவாயையும் பெறுவார்கள். இத்திட்டத்தின் கீழ் சுமார் 3,750 குடியேற்றவாசிகள் நன்மையடைவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது. அவர்கள் ஆண்டொன்றுக்கு 2,00,000 மெட்ரிக் தொன் கரும்பை வழங்கக்கூடியவர்களாயிருக்கவேண்டும். திட்டத்தின் இரண்டாவது கட்டம் தங்கள் காணிகளில் பயிரிடும் குடியேற்றக்காரர்களால் விளைவிக்கப்படும் கரும்பைக் கொண்டே முற்றாக நடத்தப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. திட்டத்தின் இரண்டாவது கட்டத்தில் சுமார் 7,500 விவசாயிகள் கரும்பு உற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதியில் ஈடுபடுத்தப்படுவர். இவர்கள் தொழிற்சாலைக்கு ஆண்டொன்றுக்கு ஏறக்குறைய 4,00,000 மெட்ரிக் தொன் கரும்பை வழங்க வேண்டும். ஒரு குடியேற்றக்காரர் தனியொரு கரும்புத் தோட்டத்தில் நான்கு சுழற்சிக் காலத்தில் பல சாகுபடி - அறுவடைச் செலவுகளையும் சமாளித்த பின் 0.8 ஹெக்டேர் காணிப் பரப்பிலிருந்து (1979ம் வருட விலைகளில்) ஆண்டொன்றுக்கு 11,210 ரூபா சராசரி நிகர வருமானத்தைப் பெறுவாரென்று எதிர்பார்க்கப்படுகிறது.

வெள்ளைச் சீனி உற்பத்தி செய்வதில் ''கழுவிய கச்சாச் சீனி முறை''யை உபயோகித்த ஏனைய தொழிற்சாலைகளுக்கு நேர்மாறாக, இத்தொழிற்சாலை நேரடியாக ''அதி வெள்ளைச் சீனி''யை உற்பத்தி செய்யும். முன்னர் தொழிற்சாலை நிர்மாணிக்கும் வேலைகள் 1981ம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்படுமெனவும் 1990களின் முற்பகுதியில் உற்பத்தித்திறனின் உச்ச நிலையை அடைவதாகவும் எதிர்பார்க்கப்பட்டது. தொழிற்சாலை கட்டப்பட்டபின் மூன்றாவது வருடத்தில் உற்பத்தியை வர்த்தக ரீதியில் ஆரம்பிக்குமெனவும், 16,000 மெட்ரிக் தொன் சீனியையும் 6,000 மெட்ரிக் தொன் வெல்லப்பாகையும் உற்பத்தி செய்யுமென்றும் கருதப்பட்டது. தொழிற்சாலை இயங்கத் தொடங்கிய 10ம் வருடத்தில் (அதாவது வர்த்தக உற்பத்தி ஆரம்பித்து 7வது வருடத்தில்) இத்தொழிற்சாலை 70,700 மெட்ரிக் தொன் வெள்ளைச் சீனியையும், 29,100 மெட்ரிக் தொன் வெல்லப்பாகையும் உற்பத்தி செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது. தொழிற்சாலை ஆதாரத் தோட்டத்தின் நடுவே அமைக்கப்படும்.

இத்தொழிற்சாலை 1979ம் வருட செலவுமதிப்பீட்டின்படி 99 கோடி 14 இலட்சம் ரூபா மொத்தச் செலவில் ஸ்தாபிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இதில் வெளிநாட்டு நிதிகளின் பங்கு 77 சதவீதமாக அமைய வேண்டுமென்றும், மீதிப்பணம் உள்நாட்டுத் துறைக்குள் திரட்டப்பட வேண்டுமென்றும் உத்தேசிக்கப்பட்டது.

தங்கள் காணிகளில் பயிரிடும் குடியேற்றக்காரர்களுக்கு மேலதிகமாக இத்திட்டத்தினால் மேலும் ஏறக்குறைய 4,110 பேருக்கு நிரந்தர அடிப்படையிலும் சமயாசமய அடிப்படையிலும் தினச் சம்பள அடிப்படையிலும் வேலை வழங்கவும் முடியும். இந்த ஊழியர்கள் தொகையில் 215 நிரந்தர ஊழியர்களும் 3,923 தினச்சம்பளம்பெறும் ஊழியர்களும் அடங்கியுள்ளனர். தொழிற்சாலையோ மேற்சொன்ன மொத்த ஊழியர்களில் 276 பேருக்கு வேலை வாய்ப்பு வழங்க முடியும்.

இத்திட்டத்துக்குப் புத்துயிரளிக்கும் நடவடிக்கை, இத்தகைய ஒரு முடிவை உருவாக்கக்கூடிய பல முக்கிய காரணிகளில் தங்கியிருக்கிறது. அக்காரணிகளில் ஒன்று சீனியின் உலகளாவிய விலையும், சீனி தொடர்பான உலகளாவிய வழங்கல் நிலைமையுமாகும். இது அடக்கவிலைச் சம்பந்தங்களைச் சற்று முழு அளவிலான சிந்தனையை உண்டாக்கும். உள்நாட்டு மட்டங்களுடன் ஒப்பிடுகையில் இந்த அடக்கவிலைச் சம்பந்தங்கள் அடிப்படையில் உலகளாவியனவாகும். பழைய தொழிற்சாலைகளில் நடைபெற்ற உற்பத்திக்கெதிராகப் புதிய சீனி உற்பத்தியின் பொருளியல் புதிய தொழிற்சாலைகளுக்குத் திட்டமிடலில் சில படிப்பினைகளை வழங்கலாம். இன்னொரு முக்கிய காரணி, ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட தற்போதைய தொழிற்சாலைகள் செயற்படத்தொடங்கியதும், அதிக தொழிற்சாலைகளை அமைப்பதற்கு மேலும் வாய்ப்பு இருக்கக்கூடுமா என்பதாகும். இந்த வாய்ப்பு இலங்கைப் பொருளாதாரத்தில் சீனி உற்பத்திக்கான கோரிக்கை மதிப்பீடுகளைப் பொறுத்திருக்கும். ஒரு மூன்றாவது காரணி, பழைய, புதிய சீனித் திட்டங்கள் உயிர்ப்பிக்கப்பட்டுள்ள பகுதிகளில் எவ்வாறு சமூக பொருளாதார உறவுகள் எழுந்துள்ளன என்பதாம். இந்த ஆராய்ச்சிக் கட்டுரையில், இந்த மூன்று காரணிகளையும் ''பி'' தொகுதியின் கீழுள்ள சீனித் திட்டங்களுடன் எவ்வாறு தொடர்பு கொண்டிருக்குமென்பதை ஆராய்வோம்.

**இலங்கையில் சீனி உற்பத்திக் கைத்தொழிலை ஸ்தாபித்தல்**

1950களில் இரண்டாவது பாதியில் ''திட்டமிடல் செயலகத்''தால் தயாரிக்கப்பட்ட பத்துவருடத்திட்டம், கரும்புச் சாகுபடியையும் சீனி உற்பத்தியையும் அபிவிருத்தி செய்தால், அது வளர்ச்சிவாய்ப்புள்ள ஒரு கைத்தொழிலாக விளங்குமென்று கருதியது. அது கீழ்க் கண்டவற்றுக்கு அநுகூலமானதும் என்றும் கருதப்பட்டது:

(அ) கணிசமான இறக்குமதிப் பிரதியீடுகள்.

(ஆ) வெளிநாட்டு நாணய சேமிப்பு.

(இ) வேலை வாய்ப்புகளை உண்டாக்குதல் - கரும்புச் சாகுபடி, வெட்டுதல், ஒப்படைத்தல் ஆகியன கணிசமான தொழிலாளர் செறிவுக்கு அநுகூலமெனக் கருதப்பட்டன.

(ஈ) நெற் செய்கையை விட மிக உயர்ந்த வருவாய் தரும்.

(உ) ஒப்பீடு ரீதியாகச் சிறு அளவில் நடைபெறும் விவசாயப் பண்ணைகளுக்கு ஏற்றதாயிருக்கும் தன்மை.

அம்பாறையிலும் கந்தளாயிலும் உடவளவையிலுமுள்ள இலங்கையின் உலர் வலயத்தின் சில பகுதிகள் கரும்பு உற்பத்திக்கு உகந்த சீதோஷ்ண நிலைமைகளையும் மண் தன்மைகளையும் கொண்டுள்ளனவென்று கருதப்பட்டது.

ஒரு சீனித் தொழிற்சாலையை ஸ்தாபிப்பதற்கான யோசனைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறப்பட்ட ஆரம்ப காலத்திலிருந்தே அதற்கெதிராக ஆட்சேபனைகள் கிளப்பப்பட்டன. உள்நாட்டு உற்பத்திச் செலவு உலகச் சந்தை விலைகளைவிட மிக அதிகமாயிருக்குமென்று எதிர்ப்புக்குக் காரணங்கள் கூறப்பட்டன. ஆனால், நீண்டகால நன்மைகள் ஆரம்ப பிரதி கூலங்களைவிட அதிகமாயிருக்குமென்ற காரணத்தின் பேரில் அரசாங்கம் இத்தகைய ஒரு திட்டத்தை முன்னேற்றிச் செல்வதென முடிவு செய்ததுடன், இம் முயற்சி அரசாங்கத் துறையில் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் ஒதுக்கி வைத்தது.

1968 ம் ஆண்டளவிலே சீனியில் தன்னிறைவு அடைவதென்ற குறிக்கோளுடன் அரசாங்கம் 1950 களில் சீனி உற்பத்திக் கைத்தொழிலை ஸ்தாபிப்பதில் வழிகாட்டியது. 1943 ம் ஆண்டுக்கும் 1956 ம் ஆண்டுக்குமிடையேயுள்ள காலத்தில் நடைபெற்ற இலங்கையின் சீனி இறக்குமதிகளின் போக்குகளை அடிப்படையாகக் கொண்டே இந்த இலக்கு குறிக்கப்பட்டது.

இந்தத் தன்னிறைவுக் குறிக்கோளை அடைய, 1968 ம் ஆண்டளவில் 2,72,000 தொன் சீனியை உற்பத்தி செய்யவேண்டியிருந்தது. இத்தகைய ஓர் உற்பத்தி மட்டத்தை அடைவதெனின், 68,000 ஏக்கர் (27,500 ஹெக்டேர்) காணிகளைக் கரும்புச் சாகுபடியின் கீழ் கொண்டுவர வேண்டியிருந்தது.

1968 ம் ஆண்டளவில் சீனியில் தன்னிறைவை அடைய முடியுமென முன்னர் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இந்த இலக்கை அடையமுடியவில்லை, உதாரணமாக, 1978 ம் ஆண்டில் கந்தளாய்த் தொழிற்சாலை, ஹிங்குரான தொழிற்சாலை ஆகிய இரு தொழிற்சாலைகளாலும் 25,700 தொன் சீனியை மட்டுமே உற்பத்தி செய்யமுடிந்தது. இந்த உற்பத்தி 1961 ம் வருட உற்பத்தி இலக்கை விடக் கூட குறைவானதாயிருந்தது. 1978 ம் ஆண்டில் நடைபெற்ற உற்பத்தி அம்பாறையிலும் கந்தளாய் முதலாவது கட்டத்திலுமிருந்து மட்டும் 1968 ம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தியில் 50 சதவிகிதம் மாத்திரமேயாகும். கந்தளாய் முதலாவது கட்ட திட்டம், ஹிங்குரான திட்டம் ஆகியவற்றின் கீழ் கரும்புச் சாகுபடி நடைபெறுமென எதிர்பார்க்கப்பட்ட காணிகளின் பரப்பு முறையே 6,170 ஹெக்டேரும் 5,269 ஹெக்டேருமாகும். ஆனால், 1980 ம் ஆண்டளவில் இரு திட்டங்களிலும் மொத்தம் ஏறக்குறைய 6,000 ஹெக்டேர் காணியில் மட்டுமே உண்மையில் கரும்புச் சாகுபடி நடைபெற்றது.

ஹிங்குரான தொழிற்சாலையில் உற்பத்தித்திறன் ஆகக்கூடிய அளவு பயன்படுத்தப்பட்டது 1978 ம் ஆண்டிலாகும். அவ்வாண்டில் அதன் உற்பத்தித்திறன் 69 சதவிகிதத்தை அடைந்தது. கந்தளாய்த் தொழிற்சாலையில் உற்பத்தித்திறன் ஆகக்கூடிய அளவு பயன்படுத்தப்பட்டது 1980 ம் ஆண்டிலாகும். அதன் விகிதம் 73 சதவிகிதமாயிருந்தது. 1985 ம் ஆண்டில் இவ்விரு தொழிற்சாலைகளிலும் உற்பத்தித்திறன் பயன்படுத்தப்பட்ட அளவு முறையே 35.4 சதவிகிதமாகவும், 52.1 சதவிகிதமாகவுமிருந்தது.

உள்நாட்டுத் தொழிற்சாலைகளில் உற்பத்தித்திறன் குறைந்த அளவில் பயன்படுத்தப்பட்டதற்கான காரணங்களுக்குக் கீழ்க்கண்டவை போன்ற பல காரணிகள் பொறுப்பாகும்:

(அ) ஏக்கரொன்றின் குறைவான விளைச்சல்.

(ஆ) குறைவான சீனி மீட்பு விகிதம்.

(இ) குறைவான வெட்டல் மட்டங்கள்.

(ஈ) தனிப்பட்ட கரும்பு உற்பத்தியாளர்களின் வழங்கல்களில் ஏற்பட்ட மாறுதல்கள்.

(உ) கால நிலையில் ஏற்பட்ட மாற்றங்களும் நீர் வழங்கல் பிரச்சினைகளும்.

(ஊ) பழைய இயந்திரங்களும் அடிக்கடி அவை செயற்படாதிருந்தமையும்.

(எ) தொழிலாளர் போதிய அளவில் கிடைக்காமை.

(ஏ) வெளி உற்பத்தியாளர்களாகவும் குடியேற்றக்காரர்களாகவும் சரியான விவசாயிகள் தெரிவு செய்யப்படாமை.

இலங்கைச் சீனிக் கூட்டுத்தாபனத்தின் கீழுள்ள தோட்டங்களில் கரும்பு அறுவடை சாத்தியமான ஆகக்கூடிய மட்டங்களை ஒருபோதும் அடையவில்லை. அதன் விளைவாக, பெருந்தொகையான கரும்புக்காணிகள் பல ஆண்டுகளாக அறுவடை செய்யப்படாமல் விடப்பட்டுள்ளன. உதாரணமாக, 1981 ம் ஆண்டிலும் 1982 ம் ஆண்டிலும் 1983 ம் ஆண்டிலும் முறையே 5,293 ஹெக்டேரிலும், 5,293 ஹெக்டேரிலும், 5,328 ஹெக்டேரிலும் அறுவடை செய்யப்பட்டுள்ளது. 1984 ம் ஆண்டிலும் 1985 ம் ஆண்டிலும் அறுவடை செய்யும் பரப்புகள் முறையே 4,686 ஹெக்டேராகவும், 4,527 ஹெக்டேராகவும் குறைக்கப்பட்டன. இந்தக் குறைப்புக்குத் தொழிலாளர் தட்டுப்பாடு ஒரு முக்கிய காரணமாகக் குறிப்பிடப்பட்டது. மிக அண்மையில் ஏற்பட்ட அறுவடை வீழ்ச்சிக்கும் இனக் கலவரங்கள் முக்கிய காரணமாயிருந்துள்ளது. ஏனென்றால், களத்தொழிலாளர்களில் கணிசமான தொகையினர் கல்முனை, மட்டக்களப்புப் பகுதிகளிலிருந்தே வந்துகொண்டிருந்தனர்.

1985 ம் ஆண்டில் முடிவடைந்த 10 வருடங்களின்போது தனியார் துறையே ஹிங்குரான தொழிற்சாலைக்குக் கரும்பை வழங்கியது. இந்த வழங்கல்களின் ஆகக்கூடிய அளவு 1978 ம் ஆண்டிலும் 1985 ம் ஆண்டிலும் காணப்பட்டது. இவ்விரு வருடங்களில் முறையே ஏறக்குறைய 64,000 தொன்களும், 61,000 தொன்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும் அவர்களைக் கவர்ந்து வழங்கப்பட்டன; ஆறாம் மற்றும் ஆண்டுகளில் வழங்கல் 50,000 தொன்களுக்கும் கீழேயே இருந்துவந்துள்ளது. 1985 ம் ஆண்டில் தனிப்பட்ட கரும்பு உற்பத்தியாளர்கள் பெரும் அளவில் வழங்கியதற்கு முக்கிய காரணம் சீனி ஆலைக்காரர்களின் கோரிக்கை வீழ்ச்சியடைந்து விட்டதாகும். ஹிங்குரான தொழிற்சாலை தனிப்பட்ட கரும்பு உற்பத்தியாளர்களிடமிருந்து மேலும் அதிக அளவில் கரும்பைப் பெறுவதற்கான எதிர்பார்க்கையில்லை. எனினும், புதிதாகத் தோன்றியுள்ள தொழிற்சாலைகள் இத்தகைய வழங்கல்களைப் பெறப் போட்டியிடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

கந்தளாய்த் தொழிற்சாலைக்குத் தனியார் துறையின் கரும்பு வழங்கல் எப்பொழுதும் மிக அவசியமானதாகவே இருந்து வந்துள்ளது. தனியார் துறை பங்குபற்றுவதைப் பொறுத்தவரை, ஒப்பீட்டளவில் சிறிய தோட்டக்காரர்களின் பங்காற்றலே அதிக அளவில் இருந்தது. எனினும், அவர்களுடைய பழங்கால தொழிற்சாலையின் கொள்ளவுக்கும் தனியார்துறையினரின் கொள்வனவுக்குமிடையே ஒரு போராட்டத்தையே எப்பொழுதும் எதிர்நோக்கினர். உரங்கள் குறைந்த அளவில் பிரயோகிக்கப்பட்டதாலும், நல்ல ரகங்களைக் கரும்பு உபயோகிக்கப்படாததாலும் தனிப்பட்ட உற்பத்தியாளர்களின் உற்பத்தி அண்மையில் வீழ்ச்சியடைந்துள்ளது.

சீதோஷ்ண நிலைமைகளும் காலநிலைகளும் அனுகூலமாக இருந்தபோதெல்லாம் உற்பத்தி அதிகரித்தது. உதாரணமாக, 1979 ம் ஆண்டில் ஹெக்டேருக்கு சராசரி விளைச்சலான 41 மெட்ரிக் தொன் 1980 ம் ஆண்டில் குறிப்பிடத்தக்களவு 51 தொன்னுக்கு அதிகரித்ததற்கு நல்ல காலநிலை நிலைமைகளும், அம்பாறையிலும் கந்தளாயிலும் அதிக அளவில் கிடைத்த நீரும் தான் நேரடியான காரணங்களாகும். கந்தளாயில் நிகழ்ந்த சிறந்த செயற்பாட்டுக்கு மகாவலியாற்று நீர் அதிக அளவில் கிடைத்ததும், விருத்தி செய்யப்பட்ட வளர்ப்பு முறைகள் கையாளப்பட்டதும் காரணங்களாகும். ஹிங்குரானையிலுள்ள பிரச்சினை நீர் அமைவாகும். இங்குள்ள கரும்பின் தரச் சிறப்பும் சீனி அடக்கமும் அடியோடு குறைந்து விடுகின்றன. விவசாயிகள் நீரை வாய்க்கால்கள் மூலம் கரும்புத் தோட்டங்கள் வழியாகத் தம்முடைய நெல் வயல்களுக்குக் கொண்டு செல்வது வழக்கம். இதன் விளைவாக மேலதிக நீர் கரும்புக்குள் உறிஞ்சப்பட்டுவிடுகிறது. இது கரும்பின் முதிர்வுக்கு மிகவும் பாதகமானது. இதனால் முதிர்வுகாலம் தாமதமாகி, சீனி அடக்கம் வீழ்ச்சியடைவதுடன் பெருந்தொகையான நீர் - அங்குரங்கள் வளரத் தொடங்கிவிடுகின்றன. எனவே, ஹிங்குரானைப் பகுதியில் ஒரு சரியான வடிகால் முறை இன்னும் அமையாத குறை இருந்து வருகிறது. இதன் விளைவாகக் கரும்பின் வெல்ல அடக்கம் குறைந்துவிடுகிறது. ஹிங்குரானைப் பகுதியில் 1984 ம் ஆண்டிலே கரும்பின் வெல்ல அடக்கம் 6.5 சதவீதம் போன்று அவ்வளவு குறைவாயிருந்தது. இதனுடன் ஒப்பிடுகையில் கந்தளாயில் இது ஏறக்குறைய 8 சதவீதமாயிருந்தது.

உள்நாட்டு நுகர்வுக்கான சீனி உற்பத்தியில் தனியார்துறை பங்கு பற்றுதல்

ஏறக்குறைய மூன்று தசாப்தங்களாக இலங்கையில் உள்நாட்டுச் சீனி உற்பத்தி அரசாங்கத்தின் ஏகபோக உரிமையாக இருந்து வந்துள்ளதால், சீனியில் தன்னிறைவை அடையும் எண்ணங்களின் நம்பிக்கைகளற்றுவிட்டன. கரும்புச் சாகுபடி, அறுவடை செய்தல், சீனி உற்பத்தி முதலியன போன்ற சகல நடவடிக்கைகளிலும் எதிர்பார்த்தது போல் வளர்க்க முடியவில்லை

[illegible] நோக்கம்
[illegible]பட்டனர்.

1970 களின் முடிவிலும் 1980 களின் முற்பகுதியிலும் சீனிக் கூட்டுத்தாபனத்தில் உற்பத்தி பிரதானமாகப் பழைய இயந்திரங்கள் உபயோகிக்கப்பட்டதாலும், கரும்புப் பிரச்சினைகளாலும் வீழ்ச்சியடைந்து வந்தது. போதுமான அளவு விளைதிறனையும் உற்பத்தியையும் கூட்டுத்தாபனத்தினால் அடைய முடியவில்லை. உற்பத்தித்திறன் குறைந்த அளவில் பயன்படுத்தப்பட்டதால் உற்பத்திச் செலவு மேலும் அதிகரித்தது. ஆதலால் சீனி நஷ்டத்தில் உற்பத்தி செய்யப்பட்டு வந்தது.

தனியார்துறை முயற்சிகளை ஊக்குவித்தலும், சர்வதேச முயற்சிகளை வரவேற்றலும் அடங்கிய தாராளமயமாக்கிய பொருளாதாரக் கொள்கையின் கீழ் அரசாங்கம் இலங்கையில் சீனி உற்பத்தியை மேற்கொள்ள வெளிநாட்டு நிறுவனங்களின் மூலதனத்தைப் பெறுவதென முடிவு செய்தது. இந் நோக்கத்தைக் கருத்திற் கொண்டு அரசாங்கம் சீனி உற்பத்தியில் வெளிநாட்டு தனியார்துறை பங்குபற்றுவதற்காகப் பல ஊக்குவிப்புகளை வழங்கியது. உள்நாட்டுச் சந்தைக்காகச் சீனியை உற்பத்தி செய்வதற்குத் தொழிற்சாலைகளையும், தோட்டங்களையும் அமைப்பதில் பிரபல சர்வதேச கரும்புச் சீனி உற்பத்தி நிறுவனங்கள் சிரத்தை காட்டுவதற்கான அறிகுறிகள் 1982ம் ஆண்டளவில் தென்பட்டன. அதே சமயத்தில், முன்பு திட்டமிடப்பட்ட உடவளவை கரும்புச் சாகுபடித்திட்டத்தை ''செவனகல சீனி உற்பத்தித் திட்டம்'' என்ற பெயரில் மீண்டும் தொடங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

முந்திய காலத்தில் சராசரி வருடாந்த உற்பத்தியும் இறக்குமதிகளும் முறையே 19,404 தொன்களாகவும், 1,25,000 தொன்களாகவும் இருந்தன. அதாவது உள்நாட்டு உற்பத்தியும் வெளிநாட்டு இறக்குமதிகளும் முறையே 13.4 சதவீத


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகவும் 86 சதவிகிதமாகவுமிருந்தன. பிந்திய காலத்தில் சராசரி வருடாந்த உற்பத்தியும் இறக்குமதிகளும் முறையே 23,247 தொன்களாகவும் 2,82,000 தொன்களாகவும் அல்லது முறையே 9.2 சதவிகிதமாகவும் 90.8 சதவிகிதமாகவும் இருந்தன. இலங்கைச் சீனிக் கூட்டுத்தாபனம் 1970 களின் பிற்பகுதியிலிருந்து சீனிக்கான கோரிக்கையை மதிப்பிட்டுள்ளது. இந்த மதிப்பீடுகள் 1990ம் ஆண்டு வரைக்கும் செய்யப்பட்டுள்ளன. இந்த மதிப்பீடுகளின் அடிப்படை பின்வருமாறு: (1) ஆண்டொன்றுக்கு ஆளொருவருக்குச் சிபார்சு செய்யப்பட்ட சராசரி சீனி நுகர்வுத் தொகையை குடித்தொகை மதிப்பு - புள்ளி விபர திணைக்களத்தின் குடிமக்கள் தொகைபற்றிய மதிப்பீடுகளால் பெருக்குதல்; இந்த மதிப்பீடுகள் குறைவான மதிப்பீடுகளென்று கருதப்படுகின்றன. (2) 1968ம் ஆண்டிலிருந்து 1978ம் ஆண்டு வரையுள்ள காலத்தில் கிடைக்கக் கூடியதாயிருந்த சராசரி சீனி அளவைக் கொண்டு, செய்யப்படும் உயர்மட்ட மதிப்பீடுகள். எங்களுடைய அவதானிப்புகளின்படி இந்தக் காலப்பிரிவு சமீப கட்டுப்பாடற்ற சந்தைக் காலத்தின் உண்மையான நிலையைப் பிரதிபலிக்காததால், நாமும் சமீப ஆண்டுகளில் (அதாவது 1980ம் ஆண்டிலிருந்து 1985ம் ஆண்டு வரை) காணப்பட்ட சராசரி ஆள்வீத நுகர்வை அடிப்படையாகக் கொண்டு சில மதிப்பீடுகளைச் செய்து, 1986ம் ஆண்டிலிருந்து 1990ம் ஆண்டு வரையுள்ள காலத்துக்கான குடித்தொகை பற்றிய மதிப்பீடுகளுக்கேற்பச் சரிக்கட்டியுள்ளோம்.

புதிய திட்டங்களும் சுயவேற்றுப் பதநிகளும்

1980களின் முற்பகுதியிலும் 1990களின் ஆரம்பத்திலும் உள்நாட்டில் வழங்கப்படும் சீனி கந்தளாய், ஹிங்குரான திட்டங்களிலும், செவனகல, பெல்வத்த, மொனறாகலை, நக்கல ஆகிய இடங்களிலுள்ள புதிய திட்டங்களிலும் உற்பத்தி செய்யப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டங்கள் யாவும் 1986ம் ஆண்டில் 1,19,600 தொன் சீனியும், 1990ம் ஆண்டளவில் 1,81,700 தொன் சீனியும் உற்பத்தி செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்குறித்த திட்டங்களைச் செயற்படுத்த முன்வந்துள்ள கம்பெனிகளில் பெரிய பங்குதாரராக இலங்கை அரசாங்கமே இருந்து வரும். மற்றும் பங்குகளில் பெரும்பாலானவை வெளிநாட்டு வங்கிகள், பொதுநலவாய அபிவிருத்தி ஸ்தாபனங்கள், வெளிநாட்டுக் கம்பெனிகள், (ஒத்துழைப்பாளர்கள், இலங்கைப் பொதுமக்கள் உட்பட) ஆகியோரின் வசமிருக்கும். திட்டங்களை ஸ்தாபித்தல், அபிவிருத்தி செய்தல், முகாமை செய்தல் ஆகிய காரியங்களில் வெளிநாட்டுக் கம்பெனிகள் பொறுப்பேற்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், இந்த வெளிநாட்டு ஒத்துழைப்பாளர்கள், கம்பெனிகள் வசமுள்ள பங்குகள் ஒப்பீட்டளவில் சிறு தொகையாகவே இருக்கும். திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கான மற்றும் நிதிகள், வெளிநாட்டு வங்கிகளிடமிருந்தும் உள்நாட்டு வங்கிகளிடமிருந்தும் வழங்குநர் கொடுகடன் முறைகளிலிருந்தும் பெறப்படுமென்று தெரிகிறது.

பெல்வத்த திட்டத்தின் முகாமையும் செயற்படுத்தலும் பிரிட்டனைச் சேர்ந்த "புக்கர் இண்டர் நேஷனல்" என்னும் நிறுவனத்தின் பொறுப்பின் கீழுள்ளன. மொனறாகலைத் திட்டம் பெர்முடாவைச் சேர்ந்த "மேத்தா இண்டர் நேஷனல்" என்னும் நிறுவனத்தின் பொறுப்பிலும், நக்கல திட்டம் தெதர்லாந்தைச் சேர்ந்த" எச். வி. ஏ - ஹொலண்ட் அக்ரோ இண்டஸ்ரீஸ் பி. வி." என்னும் நிறுவனத்தின் பொறுப்பிலுமிருக்கும். ஒத்துழைப்புக் கம்பெனிகள் சீனியில் மட்டும் விசேட ஈடுபாடு கொண்ட கம்பெனிகளல்ல; அவை வேறுவேறு உற்பத்தி, முதலீட்டு நடவடிக்கைகளில் ஈடுபடும் பல்தேசியக் கைத்தொழில் கூட்டு நிறுவனங்களாகும்.

தொழிற்சாலைகளின் தேவைகளை வழங்குவதற்காக, ஒவ்வொரு தொழிற்சாலையும் ஓர்

அட்டவணை 1

எதிர்பார்க்கப்படும் சீனி உற்பத்தி 1986 - 1990
('000 மெட்ரிக் தொன்)

| வருடம் | கந்தளாய் | ஹிங்குரானா | செவனகல | பெல்வத்தை | மொனறாகலை | நக்கல | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1986 | 27.3 | 26.3 | 22.6 | 42.3 | — | — | 118.5 |
| 1987 | 27.3 | 26.3 | 28.0 | 43.2 | — | — | 124.8 |
| 1988 | 27.3 | 26.3 | 27.2 | 47.3 | 17.8 | — | 145.9 |
| 1989 | 27.3 | 26.3 | 26.8 | 47.3 | 30.8 | — | 158.5 |
| 1990 | 27.3 | 26.3 | 27.6 | 47.3 | 44.0 | 10.2 | 181.7 |

மூலம்: இலங்கை சீனிக் கூட்டுத்தாபனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதாரத் தோட்டத்தையும் பல குடியேற்றப் பகுதிகளையும் கொண்டிருக்கும். ஆதாரத் தோட்டங்களின் அபிவிருத்தியும் முகாமையும் அந்தந்தக் கம்பெனியின் பொறுப்பிலிருக்கும். உதாரணமாக, பெல்வத்தையில் குடியேற்றப் பகுதிகள் அங்கு குடியேறியுள்ளவர்களால் அபிவிருத்தி செய்யப்படும்; அவர்களுடைய முகாமையில் இருந்து வரும். ஆனால், குடியேற்றப் பகுதிகளின் நடவடிக்கைகள் கம்பெனியின் நியமங்களுக் கேற்ப அமைவதற்காக, ஒழுங்கமைப்பு நடவடிக்கைகள், சாகுபடி அறிவுறுத்தல்கள், விஸ்தரிப்புச் சேவைகள் ஆகியவற்றிற்குக் கம்பெனி அதிகாரிகள் பொறுப்பாயிருப்பர். குடியேற்றக்காரர்களின் ஆரம்ப வீடமைப்புச் செலவுகளையும் கம்பெனி ஏற்கும். இதற்காக, கம்பெனி குடியேற்றக்காரர்களுக்கு ஒரு தற்காலிக வீட்டைக் கட்டிக் கொள்ள 1,200 ரூபா வழங்கும். கம்பெனியின் நோக்கங்களுக்காகச் சுவீகரிக்கப்படும் காணிகளில் தற்போது நடைபெறும் சாகுபடி முதலியன இழக்கப்படுவதை ஈடு செய்வதற்காகக் கம்பெனி நஷ்ட ஈடும் வழங்கும்.

குடியேற்றப் பகுதிகளின் உள்ளமைப்பு வசதிகள் அரசாங்க நிதியுதவியுடன் அந்தந்தக் கம்பெனியால் செய்து கொடுக்கப்படும். இவ்வசதிகளில் போதிய ளவு அகலமான, நல்ல மேற்பரப்புள்ள பாதைகள், குடியேற்றப் பகுதிகளை நெடுஞ்சாலைகள், தொழிற்சாலை, மற்றும் நடவடிக்கைகள் நிகழும் இடங்கள் ஆகியவற்றுடன் இணைக்கும் உபபாதைகள் ஆகியனவெல்லாம் அடங்கும். குடியேற்றக்காரர்களைக் கொண்ட ஒவ்வொரு கிராமத்திலும் ஓர் ஆரம்ப பாடசாலை, ஒரு கூட்டுறவுச் சங்கக்கடை, ஒரு சந்தை நிலையம், ஒரு சுகாதார நிலையம், ஒரு ஜன சமூக நிலையம், பொழுது போக்கு நிலையம், வழிபாட்டு ஸ்தலம் ஆகியன அமைந்திருக்கும். சகல குடியேற்றப் பகுதிகளுக்கும் பொதுவான வசதிகளாக ஒரு கிராம ஆஸ்பத்திரி, ஓர் இடைநிலை (செகண்டரி)ப் பாடசாலை, சகல குடியேற்றப் பகுதிகளுக்கும் சம தூரத்திலுள்ள ஒரு நிர்வாக நிலையம் ஆகியன அமைந்திருக்கும். இவற்றுடன் குடியேற்றப்பகுதிகளுக்கு வெகு அருகில் கரும்பு சேகரிப்பு நிலையங்களைக் கம்பெனிகள் ஏற்படுத்தும்.

முன்பு ஹிங்குராண திட்டத்தில் எந்தக் குடியேற்றப் பகுதிகளுமிருக்கவில்லை. ஆனால் 1980ம் ஆண்டுக்குப் பின்னர், கரும்பைச் சாகுபடி செய்தல், இலங்கைச் சீனிக் கூட்டுத்தாபனத்திலிருந்து ஓய்வு பெறும் ஊழியர்களுக்குச் சேமநல முறையொன்றை ஏற்படுத்தல் ஆகிய சுமைகளிலிருந்து தொழிற்சாலை முகாமையை விடுவிக்கும் நோக்கத்துடன் பல குடியேற்றப் பகுதிகளை உண்டாக்குவதென இ. சீ. கூட்டுத்தாபனம் முடிவு செய்தது. ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபையைச் சேர்ந்த ஆட்குறைப்பு செய்யப்பட்ட ஊழியர்களும், அம்பாறை அரசாங்க அதிபரால் தெரிவு செய்யப்பட்ட வேறும் சிலரும் கூட ஹிங்குராண திட்டத்தின் கீழ் குடியேற்றக்காரர்களாக்கப்பட்டனர்.

ஒவ்வொரு திட்டமும் 4 இலிருந்து 6 வரையான குடியேற்றக் கிராமங்களை அல்லது குக்கிராமங்களைக் கொண்டிருக்கலாம். ஒவ்வொரு கிராமமும் அல்லது குக்கிராமமும் 75 இருந்து 300 வரையான குடியேற்றக் குடும்பங்களைக் கொண்டிருக்கும்.

குடியேறும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் கரும்பைச் சாகுபடி செய்யக் காணியும், வீடு கட்டிக் கொள்வதற்குக் காணியும் ஏனைய பயிர்களைச் சாகுபடி செய்யக் காணியும் வழங்கப்படுகின்றன. இப்படிக் கொடுக்கப்படும் காணிகளின் பரப்பு 1.10 ஹெக்டேரிலிருந்து 3.03 ஹெக்டேர் வரை. குடியேற்றக்காரருக்கு ஒதுக்கப்பட்ட காணிகளின் பெரும்பாலானவை 1.10 ஹெக்டேரிலிருந்து 2.1 ஹெக்டேர் வரை. செவனகலவில் ஒதுக்கப்பட்ட காணிகளில் கரும்பு உற்பத்திக்கு 0.75 ஹெக்டேரும் நெல்லுக்கும் மற்றும் பயிர்களுக்கும் 0.75 ஹெக்டேரும் வீடு கட்டிக்கொள்வதற்கு 0.10 ஹெக்டேருமாகும்; மொனறாகலைத் திட்டத்தின் கீழ் இம் மூன்று நோக்கங்களுக்கும் முறையே 1.6 ஹெக்டேரும், 0.40 ஹெக்டேரும், 0.10 ஹெக்டேரும் வழங்கப்பட்டன; பெல்வத்தை திட்டத்தின் கீழ் கரும்புக்கு 1.6 ஹெக்டேரும், வீட்டுக்கு 0.40 ஹெக்டேரும் வழங்கப்பட்டன. நெல்லுக்கும் மற்றும் பயிர்களுக்கும் எக்காணியும் ஒதுக்கப்படவில்லை.

அட்டவணை 3

கரும்புச்சீனி செய்திட்டங்களில் குடியமர்த்துதல்

| செய்திட்டம் | குடியேற்றப்பட்ட குடும்பங்கள் | காணிப்பரப்பு ஹெக்டயர் |
|---|---|---|
| ஹிங்குராண | 1,735 | 1,903 |
| செவனகல | 2,600 | 2,750 |
| பெல்வத்தை | 1,800 | 3,360 |
| மொனறாகலை | 1,800 | 3,360 |
| நக்கல | கிடைக்கவில்லை | கிடைக்கவில்லை |

* தனியார்த் துறைச் செய்திட்டங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியேற்றக் காரர்களுக்குக் காணி ஒதுக்கீடுகள், மானியப்படிகள் போன்ற மற்றும் வசதிகளுடன் 16,000 ரூபாவிலிருந்து 20,000 ரூபா வரையான வீடமைப்புக் கடனும் வழங்கப்படுகிறது. இக்கடன் இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகிய வங்கிகள் வாயிலாக 10 வருடங்களுக்கும் 15 வருடங்களுக்குமிடையே திருப்பிச் செலுத்தப்படவேண்டும்.

ஆதாரத் தோட்டங்களிலிருந்தும் குடியேற்றப் பகுதிகளிலிருந்தும் சேகரிக்கப்படும் கரும்புக்குப் புறம்பாக, ஒவ்வொரு திட்டமும் தனியார்துறை உற்பத்தியாளர்களிடமிருந்தும் கணிசமான வழங்கல்களைப் பெறவும் எதிர்பார்க்கிறது. கடந்த சில வருடங்களில் ஹிங்குரான தொழிற்சாலை தனியார்துறை வழங்கிய கரும்பையே பெருமளவுக்கு நம்பியிருந்தது. ஒவ்வொரு புதிய தொழிற்சாலையும் தனியார் துறையிலிருந்து 50,000க்கும் 75,000க்குமிடைப்பட்ட மெட்ரிக் தொன் கரும்பைக் கொள்வனவு செய்ய எதிர்பார்க்கிறது. பெல்வத்தை திட்டம் போன்ற சில திட்டங்கள் நெருக்கமாக அமைந்த நீர்ப்பாசனப் பகுதியில் உதாரணமாகத் தொழிற்சாலையிலிருந்து 15 மைல் விட்டாரத்துக்குள் வசிக்கும் வெளி விவசாயிகளை இனங்கண்டு பதிவு செய்துள்ளன.

## இலங்கையில் சீனிக்கான கோரிக்கையும் வழங்கலும் பற்றிய குறிப்புகள்

1984களில் முடிவடைந்த வருடங்களுக்கு இரண்டு தசாப்தங்களாக உள்நாட்டில் நுகரப்பட்ட சீனிக்கான கோரிக்கைகள் நாட்டு உற்பத்தியை விட மிக அதிகமாயிருந்தது. அதன் விளைவாக, வருடாந்த உள்நாட்டு நுகர்வுக்கான தேவைகளில் ஏறக்குறைய 85 சதவீதத்திலிருந்து 90 சதவீதம் வரையானவற்றை இறக்குமதி செய்யவேண்டியிருந்தது. இந்த இறக்குமதிகளுக்காக வெளிநாட்டு நாணய வளங்களைக் கணிசமான அளவில் செலவிடவேண்டியிருந்தது. ஆதலால், கொள்கைகளில் பெரும்பாலானவை சீனிக்கான கோரிக்கையைச் சுற்றியே தோன்றியுள்ளன.

கடந்த பத்தாண்டுகளில் (1975ம் ஆண்டிலிருந்து 1985ம் ஆண்டுவரை) உள்நாட்டு உற்பத்தி ஆகக்குறைந்த அளவான 13,431 மெட்ரிக் தொன்களுக்கும் ஆகக்கூடிய அளவான 26,289 மெட்ரிக் தொன்களுக்குமிடையே ஏறியிறங்கி வந்துள்ளது. உள்நாட்டு உற்பத்தி மொத்த வழங்கலில் ஆகக்கூடிய அளவான 34.1 சதவீதத்துக்கும் மொத்த உள்நாட்டு வழங்கலில் ஆகக்குறைந்த அளவான 6.5 சதவீதத்துக்கும் இடையேயிருந்தது.

* நாளொன்றுக்கு ஆள் ஒருவர் - 25 கிராம் அல்லது ஆண்டொன்றுக்கு 10.35 கிலோ.

** முன் கொண்டுசென்ற கையிருப்பையும் முன்கொணர்ந்த கையிருப்பையும் கணக்கில் எடுக்காவிடின், இக்காலத்தில் சராசரி ஆள்வீத நுகர்வு ஆண்டொன்றுக்கு 17.8 கிலோவாயிருந்தது.

அட்டவணை 3

சீனி இறக்குமதியும் உள்நாட்டு உற்பத்தியும்

| வருடம் | இறக்குமதி மெட். தொன் | தேவையில் இறக்குமதி% | உள்நாட்டு உற்பத்தி மெட். தொன் | தேவையில் உள்நாட்டு உற்பத்தி% | மொத்தவழங்கல் மெட். தொன் |
|---|---|---|---|---|---|
| 1975 | 61,000 | 82.0 | 13,431 | 18.0 | 74,431 |
| 1976 | 45,000 | 65.9 | 23,275 | 34.1 | 68,275 |
| 1977 | 101,000 | 81.2 | 23,316 | 18.[illegible] | 124,316 |
| 1978 | 176,000 | 91.0 | 17,376 | 9.0 | 193,376 |
| 1979 | 246,000 | 92.6 | 19,624 | 7.4 | 265,624 |
| 1980 | 209,000 | 88.8 | 26,269 | 11.2 | 235,269 |
| 1981 | 241,000 | 90.5 | 25,291 | 9.5 | 266,291 |
| 1982 | 133,000 | 85.2 | 23,060 | 14.[illegible] | 156,060 |
| 1983 | 315,000 | 93.5 | 21,833 | 6.5 | 336,833 |
| 1984 | 237,000 | 92.3 | 19,765 | 7.7 | 256,765 |
| 1985 | 365,400 | 94.9 | 19,501 | 5.1 | 384,90[illegible] |

மூலம்: இலங்கை சீனிக் கூட்டுத்தாபனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுடைய முற்கணிப்புகள் இலங்கைச் சீனிக் கூட்டுத்தாபனம் செய்த உயர் மதிப்பீடுகளைவிட மிகக் குறைவாயிருப்பதாகத் தோன்றுகிறது.

இந்தப் புதிய திட்டங்களுடன் தன்னிறைவு அடைய முடியுமா என்பதை ஆராய்வதற்காக, இத்தொழிற்சாலைகள் உற்பத்தி செய்யக்கூடிய தொகைகள் 1986ம் ஆண்டிலிருந்து 1990ம் ஆண்டுவரையுள்ள காலத்துக்குக் கணக்கிடப்பட்டன.

மொனறாகலை சீனிக் கம்பெனியில் உற்பத்தி தாமதமாகிவிட்டது. அதன் உற்பத்தி 1980களின் பிற்பகுதியில் மட்டுமே உள்நாட்டு வழங்கலுடன் சேர்க்கப்படும். மொனறாகலை தொழிற்சாலை 1990ம் ஆண்டளவில் உள்நாட்டு வழங்கலுக்கு 44,000 மெட்ரிக் தொன் சீனியைச் சேர்க்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. 1986ம் ஆண்டளவில் இத் தொழிற்சாலை அதன் உற்பத்தித்திறனில் 40 சதவீதத்தை எட்டுமென்றும், 1989ம் ஆண்டளவில் அதன் உற்பத்தித்திறன் 70 சதவீதத்துக்கு அதிகரிக்குமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. பெல்வத்தைத் தொழிற்சாலை ஏற்கெனவே வர்த்தக உற்பத்தியை ஆரம்பித்துவிட்டது. உள்நாட்டு வழங்கலுக்கு அதன் பங்களிப்பு 43,000, 43,200, 47,300 மெட்ரிக் தொன்களாயிருக்கும். இந்த உற்பத்தி அளவு 1988ம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலத்தில் அடையப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆரம்ப சாத்தியவள அறிக்கை திட்டத்தால் 1990ம் ஆண்டளவில் மட்டுமே மொத்த உள்நாட்டு வழங்கலுக்கு 10,200 மெட்ரிக் தொன்களைச் சேர்க்க முடியும். 'ஹிங்குரான' என்னும் இன்னொரு ஒருங்கிணைப்பு நிறுவனம் தொழிற்சாலையொன்றை அமைப்பதற்கு அனுமதி கோரி இலங்கை வெளிநாட்டு முதலீட்டு ஆணைக்குழுவிடம் விண்ணப்பித்துள்ளது. இத் தொழிற்சாலையினால் 1980களின் தசாப்தத்தின் உள்நாட்டு வழங்கலுக்கு எதையும் சேர்க்கமுடியாதிருக்கலாம். கந்தளாய், ஹிங்குரான தொழிற்சாலைகள் அவற்றின் புனரமைப்புத் திட்டங்களின் கீழ் 1986ம் ஆண்டிலிருந்து 1990ம் ஆண்டு வரையுள்ள காலத்துக்கும் முறையே 27,300 மெட்ரிக் தொன்களையும் 26,300 மெட்ரிக் தொன்களையும் வழங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. கந்தளாய், ஹிங்குரான ஆலைகளுக்கு ஒப்பான உற்பத்தித் திறனைக் கொண்ட செவனகல திட்டம் 1986ம் ஆண்டில் வர்த்தக உற்பத்தியை ஆரம்பித்தது. இத்தொழிற்சாலை 1986ம் ஆண்டிலும் 1987ம் ஆண்டிலும் உள்நாட்டு வழங்கலுக்கு முறையே 22,600 தொன்களையும், 23,000 தொன்களையும் வழங்கும். இத்தொழிற்சாலையின் வழங்கல் 1988ம் ஆண்டிலும் 1989ம் ஆண்டிலும் 1990ம் ஆண்டிலும் முறையே 27,100 மெட்ரிக் தொன்களாகவும், 26,700 தொன்களாகவும், 26,600 தொன்களாகவும் குறைக்கப்படும்.

உள்நாட்டுச் சீனி நுகர்வு மதிப்பீடுகள் மேலே செய்யப்பட்ட மட்டங்களுக்கு வரையறுக்கப்பட்டால், 1990ம் ஆண்டளவில் நாடு முழுத் தன்னிறைவு அடைந்துவிட முடியுமென்பதை, கூடுதலாக 2,700 மெட்ரிக் தொன்களைக் கூட வழங்கமுடியுமென்றும் கேள்விக்கைகளும் வழங்கலும் ஒன்றுக்கொன்று சமநிலையான சாத்தியங்கள் எடுத்துக் காட்டுகின்றன. குறைவான மதிப்பீடுகளின் கீழ் 1986, 1987, 1988, 1989, 1990ம் ஆண்டுகளுக்கான தன்னிறைவுச் சதவீதங்களின் வளர்ச்சி முறையே 70.9, 73.4, 81.2, 90.1, 102.1 ஆகவிருக்கும். உயர் மதிப்பீடுகளின் கீழ் தன்னிறைவை அண்மிய காலத்தில் ஒருபோதும் சாதிக்க முடியாது போகலாம். எனினும், கேள்விக்கான உயர்ந்த முற்கணிப்புகளின் கீழ் 1986ம் ஆண்டிலிருந்து 1990ம் ஆண்டுவரையுள்ள காலத்தில் உள்நாட்டு வழங்கல் முறையே 36.8 சதவீதத்திலிருந்து 38.0, 43.6, 48.7, 53.6 சதவீதங்களுக்கு அதிகரிக்கவிருக்கின்றன. இந்த முற்கணிப்புகளின் கீழ் 1990ம் ஆண்டளவில் இலங்கை 50 சதவீதத்துக்கு மேற்பட்ட தன்னிறைவை அடைந்துவிடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. எங்களுடைய மிதமான மதிப்பீடுகள் 50 சதவீதத் தன்னிறைவைக் குறித்தன. இந்த முற்கணிப்புகளின் கீழ் தன்னிறைவுச் சதவீதங்கள் 1986லிருந்து 1990 வரையுள்ள வருடங்களுக்கு முறையே 41.1, 42.8, 49.0, 57.7, 59.4 சதவீதங்களாக இருக்கும்.

பொருளாதாரத் தாக்கம்

சீனியின் நுகர்வை வரையறுக்கும் சுதந்திர பொருளாதாரத்தில் தற்போதைய கொள்கை என்ன காரணங்களுக்காயினும் நிலைக்கப்படுமா என்பது சந்தேகம். எனினும், அதுவே மருத்துவ நிபுணர்கள் சிபார்சு செய்துள்ள நுகர்வு மட்டம். இலங்கையில் குறைந்த வருமானமும் மத்திய வருமானமும் பெறுவோரில் பெரும்பாலோர் சக்தியைப் பாதுகாக்கவும் இழந்த சக்தியை மீண்டும் பெறவும் சீனியை உட்கொள்கிறார்கள். எனினும், சீனி போஷாக்குச் சக்தியல்லாத கலோரியை உற்பத்தி செய்வதொன்றாகும். ஆனால், சர்வதேச சந்தை விலைகள் துரிதமாக உயர்ந்து, வெளிநாட்டு நாணய மட்டங்கள் நெருக்கடியான நிலைக்கு வீழ்ச்சியடையுமானால், குறைவான மதிப்பீடுகள் நுகர்வோருக்கான வழங்கலுக்குப் பாதுகாப்பான மட்டங்களாகும்; உள்நாட்டு வழங்கல்களுடன் நிலைமையைச் சமாளிக்கலாம்.

சீனியின் உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிப்பதால் ஏற்படக்கூடிய மிக முக்கியமான நன்மைகளில் ஒன்று, வெளிநாட்டு நாணயச் செலாவணியைப் பாதுகாப்பதாகும். 1985ம் ஆண்டுடன் முடிவடைந்த ஐந்து வருடங்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின்போது இலங்கை 166 கோடி 28 இலட்சம் ரூபா வருடாந்த சராசரிப் பெறுமதியில் 2,14,000 மெட்ரிக் தொன் சீனியை வருடாந்த சராசரியாக இறக்குமதி செய்துள்ளது.

இலங்கையில் சீனி, சீனிப் பொருள் இறக்குமதிகளில் சுத்திகரிக்கப்பட்ட கரும்புச் சீனி, சுத்திகரிக்கப்பட்ட பீட் சீனி, சுத்திகரிக்காத சீனி, டெக்ஸ்ரோஸ், செயற்கைச் சீனி, சீனிக்கட்டிகள், மற்றும் வகைப்படுத்தாத சீனிப் பொருள்கள் ஆகியன அடங்கியுள்ளன. இவற்றில் முக்கிய இடம் வகிப்பன சுத்திகரிக்கப்பட்ட சீனியும் கரும்புச் சீனியுமாகும்.

பெறுமதி அடிப்படையில் 1980ம் ஆண்டில் நடைபெற்ற இறக்குமதிகள் 1970ம் ஆண்டின் இறக்குமதிகளைப் போல் ஏறக்குறைய 11 மடங்கும், 1975ம் ஆண்டின் இறக்குமதிகளைப் போல் ஏறக்குறைய 8 மடங்குமாகும்.

செவனகல, பெல்வத்தை, மொனறாகலை ஆகிய மூன்று திட்டங்களும் 570 கோடி ரூபா வரையான முதலீடுகளைப் பொறுப்பேற்க எதிர்பார்க்கின்றன. செவனகல திட்டத்தின் ஏறக்குறைய 65 சதவீதமும், பெல்வத்தை திட்டத்தின் 83 சதவீதமுமாக, மொனறாகலைத் திட்டத்தின் 82 சதவீதமும் பங்கு முதலானது, கடன்களுடன் வெளிநாட்டு நிதிகளாயிருக்கும். நக்கல திட்டம் ஒப்பீட்டளவில் ஒரு சிறிய திட்டமாகும். இவைகளிலொரு ஆதன் மொத்த முதலீடு 50 கோடி ரூபாவுக்கு மேல் போகத் தேவையில்லை. இத்திட்டங்களின் மொத்தச் செலவு ஏறக்குறைய 620 கோடி ரூபாவைக் இருக்குமென்று மதிப்பிடலாம். இத்திட்டங்களில் போடப்படும் முதலீடுகள் இலங்கைக்குள் சீனியை இறக்குமதி செய்ய ஏறக்குறைய மூன்று வருடங்களுக்கு ஆகும் செலவாயிருக்கும். இத்திட்டங்கள் இலங்கையின் உள்நாட்டுத் தேவைகளில் 60 சதவீதத்தை உற்பத்தி செய்ய முடியுமானால், திட்டமுதலைச் செலவுகள், உள்நாட்டு உற்பத்தி செய்யக்கூடிய சீனியின் அந்நியச் செலாவணி இறக்குமதி செலவை 10 வருடங்களில் நாடு செலவழிக்கும் பணத்துக்குச் சமமாயிருக்கும்.

இலங்கைச் சீனிக் கூட்டுத்தாபனம் ஒரு கஷ்டமான நிலைமையில் இருக்கிறது. அண்மையில், சீனியின் உற்பத்திச் செலவு 1985ம் ஆண்டில் முடிவுற்ற கடந்த பத்து வருடங்களில் துரிதமாக அதிகரித்துள்ளது.

அட்டவணை 5

கிலோ ஒன்றுக்கான உற்பத்திச் செலவு 1977 – 1985

| வருடம் | பயிர்ச்செய்கை (ரூபா) | சுத்திகரிப்பு (ரூபா) |
|---|---|---|
| 1977 | 2.70 | 2.40 |
| 1978 | 3.47 | 3.09 |
| 1979 | 8.52 | 3.69 |
| 1980 | 7.92 | 4.16 |
| 1981 | 8.87 | 5.32 |
| 1982 | 9.87 | 6.49 |
| 1983 | 12.72 | 8.88 |
| 1984 | 12.06 | 10.96 |
| 1985 | 14.42 | 9.63 |

மூலம்: இலங்கைச் சீனிக் கூட்டுத்தாபனம்

அட்டவணை 4

சுத்திகரிக்கப்படாத, சுத்திகரிக்கப்பட்ட சீனி இறக்குமதி 1970 - 1984

| வருடம் | அளவு (ஆயிரம் மெட்ரிக் தொன்) | சத வீதம் | பெறுமதி (ரூ. பத்து லட்சம்) | சத வீதம் |
|---|---|---|---|---|
| 1970 | 2.5 | – | 189.6 | – |
| 1975 | 0.5 | – | 247.6 | – |
| 1980 | 260.5 | – | 1,914.8 | – |
| 1981 | 207.8 | 14.0 | 2,662.8 | 39.0 |
| 1982 | 120.7 | 48.2 | 912.[illegible] | – 65.7 |
| 1983 | 265.4 | 119.9 | 1,676.0 | 83.8 |
| 1984 | 166.3 | –41.5 | 779.2 | – 53.5 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி புள்ளி விபரங்கள்

(14 - ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 6

உற்பத்திச் செலவு விற்பனை வருமான மதிப்பீடுகள்

(ரூ. பத்து லட்சம்)

| வருடம் | உள்நாட்டு உற்பத்தியை கிலோ ஒன்று ரூ. 19.50 க்கு வாங்குவதற்கு ஆகும் செலவு | கிலோ ரூ. 14 க்கு விற்பதனால் கிடைக்கும் தொகை | உணவு ஆணையாளர் அடையும் நட்டம் |
|---|---|---|---|
| 1986 | 2,310.7 | 1,659.0 | 651.7 |
| 1987 | 2,435.5 | 1,746.6 | 688.9 |
| 1988 | 2,899.2 | 2,098.4 | 800.8 |
| 1989 | 3,092.7 | 2,220.4 | 872.3 |
| 1990 | 3,543.1 | 2,543.9 | 999.2 |

ஆதாரம்: தவிர்த்தல் திட்டங்கள்: உணவு ஆணையாளர்.

கிலோ ஒன்று 19 ரூபா 50 சதம் என்பது ஒரு பொது விதியாகக் கொள்ளப்படுமானால், உணவு ஆணையாளர் உள்நாட்டுச் சீனியைக் கொள்வனவு செய்ய, கணிசமான பணம் செலவு செய்ய வேண்டும். இதுவரை உணவு ஆணையாளர் தமது திணைக்களத்துக்குள் சீனியின் விலையைச் சமநிலைப்படுத்தி வந்துள்ளார். உள்நாட்டுச் சீனியை வாங்குவதில் எந்த மேலதிக செலவும் ஏற்படுமானால், அப்பணம் இறக்குமதிகளிலிருந்து பெறப்படும் இலாபமாகும். தற்போது சகல சீனி இறக்குமதிகள் மீதும் அரசாங்கம் கிலோ ஒன்றுக்கு 7 ரூபா தீர்வையை அறவிட்டு வருகிறது. உணவு ஆணையாளர் சகல சீனியையும் கிலோ ஒன்று 14 ரூபா மொத்த விற்பனை விலையில் விற்பதாக வைத்துக்கொள்வோம். அப்பொழுது சீனியின் மீதான செலவையும் சீனியிலிருந்து கிடைக்கும் வருமானத்தையும் அவரால் தமது திணைக்களத்துக்குள் சமநிலைப்படுத்த முடியுமா?

மேற்கண்ட மதிப்பீடுகளின்படி உணவு ஆணையாளரின் திணைக்களத்துக்குள் நடைபெறும் கொடுப்பனவுகள் 1986ம் ஆண்டில் 65 கோடி 17 இலட்சம் ரூபாப் பற்றாக்குறையுடன் நடைபெறும். இது அடுத்த காலப்பகுதியில் ஏறக்குறைய 100 கோடி ரூபாவாக அதிகரித்துவிடும்.

உணவு ஆணையாளர் இந்தப் பற்றாக்குறையைத் தமது திணைக்களத்துக்குள் ஈடுசெய்ய வேண்டுமானால், இறக்குமதிகளைச் சமநிலைப்படுத்துவதிலிருந்து பெறப்படும் மேலதிகப் பணத்தைப் பயன்படுத்த வேண்டியிருக்கும்.

மருத்துவ நிபுணர்கள் சிபாரிசு செய்யும் நுகர்வுப் பாங்கை அனுசரிக்காவிடினுங்கூட, உள்நாட்டுச் சீனியை வாங்குவதனால் ஏற்படும் நஷ்டங்களை இறக்குமதிகளின் விற்பனையிலிருந்து கிடைக்கும் வருமானத்தின் மூலம் மட்டும் ஈடுசெய்வதைக் கொண்டு உணவு ஆணையாளரால் ஈடுசெய்ய முடியாது. எனினும், இது மற்றைய மதிப்பீடுகளின் மீது சாத்தியமான மிதமான மதிப்பீடுகளில் ஒன்று. உள்நாட்டுச் சீனியை வாங்கி விற்பதற்கும் இறக்குமதிச் சீனியை வாங்கி விற்பதற்குமிடையேயுள்ள வித்தியாசம் 1990ம் ஆண்டில் ஒரு சிறிய வித்தியாசமாகவுள்ளது.

கரும்புத் தொழிற்சாலை தற்போது, பிழிந்தெடுக்கப்படும் வெல்ல அடக்கத்தைப் பொறுத்து, மெட்ரிக் தொன் ஒன்று 430 ரூபா வீதம் கரும்பை வாங்கி வருகிறது. இத்தொகையைக் கொடுக்க, கரும்பிலுள்ள வெல்ல அடக்கம் 7.5 சதவீதமாயிருக்க வேண்டும். இதற்கு மேலுள்ள ஒவ்வொரு புள்ளி (சதவீதத்து)க்கும் தொன் ஒன்றுக்கு 8 ரூபா மேலதிகமாகக் கொடுக்கப்படுகிறது. இதேபோல வெல்ல அடக்கம் அளவிடப்பட்ட குறைவாயிருந்தால், அதற்கேற்றவாறு பணக் கொடுப்பனவு குறைக்கப்படுகிறது. … தொழிற்சாலையில் ஒப்படைக்கப்படும் கரும்புக்கு தொன்-வயல் அடிப்படையில் மேலதிகப் பணம் வழங்கப்படுகிறது. ஆனால், … கொண்டுவந்து தொழிற்சாலையில் ஒப்படைக்கப்படும் கரும்புக்குத் தொன் ஒன்றுக்குக் கொடுக்கப்படும் ஆகக்கூடிய தொகை 425 ரூபா.

பெல்வத்தை தொழிற்சாலை அதன் சொந்த சேகரிப்பு நிலையங்களுக்குக் கொண்டுவந்து ஒப்படைக்கப்படும் கரும்புக்குத் தொன் ஒன்றுக்கு 500 ரூபா வீதமும், வாகன பாவனையாகத் தொன் ஒன்றுக்கு 120 ரூபாவும் வழங்குகிறது. தற்போது இத்தொழிற்சாலை வெல்ல அடக்கத்தின் அடிப்படையில் கரும்புக்கான வேறுபடுத்தலில்லை. இக்காரணத்தினால் உயர்ந்த விலை கொடுக்கப்படுவதுடன் விலைகளையும், அண்மைக்காலத்திலுள்ள இலங்கைச் சீனிக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்சாலைக்கும் மற்றும் தனியார் துறை தொழிற்சாலைகளுக்கும் கரும்பு வழங்கல் பாதிக்கப்பட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுள்ளது. அம்பாறைக்கும் மொனறாகலைக்குமிடையிலுள்ள எல்லைப் பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் ஏனைய கரும்புகளும் பெல்வத்தையை நோக்கியே செல்கின்றன.

கரும்பைப் [illegible] சாற்றைப் பிழிந்தெடுத்து வெல்லப்பாகை அல்லது பாணியைப் பின்னர் பதப்படுத்தி வந்த தனிப்பட்டவர்கள் இப்பொழுது தங்கள் நடவடிக்கைகளைக் குறைத்துக் கொண்டதுடன் கரும்பு சேகரிக்கும் தொழிலுக்கும் மாறிவிட்டனர். சர்க்கரைப் பாணிக்குக் குறைவான விலை கிடைப்பதன் விளைவாக, கரும்பைப் பிழிந்து சாறெடுக்கும் பெருந்தொகையான தனிப்பட்டோர் தங்கள் செயற்பாடுகளை நிறுத்திக் கொண்டனர். வாகனம் உள்ளவர்கள், இவர்களில் சொந்த வாகனம் வைத்திருப்போரை, கரும்பைச் சேகரித்து தொழிற்சாலையில் கொண்டுபோய் ஒப்படைப்பதற்கு ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்துள்ளது.

தொழிற்சாலைகளின் கரும்புக்கு நல்ல விலைகள் கொடுத்து வந்துள்ள போதிலும், சிறு அளவில் கரும்பை விளைவிப்போர் புதிய தொழிற்சாலைகளிலிருந்து கணிசமான நன்மையடையவில்லை. ஏனென்றால், அவர்களால் தங்களுடைய அறுவடைகளைத் தொழிற்சாலைகளுக்கு நேரடியாகக் கொண்டுவந்து கொடுக்க முடியவில்லை. வழங்குநர்கள் பதிவு செய்யப்படுகிறார்களென்றாலும், பெரும் அளவில் வழங்கக் கூடியவர்கள் மட்டுமே பதிவு செய்யப்படுகிறார்கள். ஆதலால் சிறு தோட்டக்காரர்கள் தங்கள் கரும்பு அறுவடைகளைத் தரகர்கள் மூலமே அனுப்ப வேண்டியிருக்கிறது. இத்தரகர்கள் அவர்களுக்குத் தொழிற்சாலை கொடுக்கும் விலையை விடக் குறைவான விலையையே தருகிறார்கள். அதுவும் தவணைகளில் சிறு சிறு தொகைகளாகக் கொடுக்கிறார்கள். மேலும், நிறுப்பதிலும் அவர்கள் பெரும் இல்லுமுல்லுகளைச் செய்கிறார்கள். மற்றும் விவசாயப் பயிர்களின் விருத்தி போலவே, கரும்பின் விஷயத்திலும் பணம் உள்ளவர்கள் பயிர் முதிர்ச்சியடைவதற்குமுன் தோட்டங்களுக்குச் சென்று விலைபேசி வாங்கிவிடுகிறார்கள். தங்கள் சொந்த ஏற்பாட்டில் தங்கள் சொந்த வண்டிகளில் கரும்பு அறுவடையைக் கொள்வனவு செய்து விடுகிறார்கள். கரும்பின் முதல் விளைச்சலுக்கு 15 மாதங்கள் ஆகின்றன. பின்னர், கட்டைக்கரும்புப் பயிரானது இது மறு விளைச்சலுக்கு 12 மாத காலத்தை எடுக்கின்றது. இதனால் கரும்புச் செய்கையில் ஈடுபடுவோர் கடன்பட்டு, அதன் பளுவால் திண்டாடுகிறார்கள்.

அம்பாறை, மொனறாகலை ஆகிய இரு மாவட்டங்களிலும் கரும்பு சம்பந்தமாக ஒருவகைச் சட்ட ரீதியற்ற பேரம் (சாகச பேரம்) தலைதூக்கி வருகிறது. தற்போது மேட்டு நில நெல்லையும் மேட்டு நில மரக்கறிகளையும் பயிர் செய்ய உபயோகிக்கப்படும் காணிகள் கரும்புச் செய்கைக்கு மாற்றப்பட்டு வருகின்றன. கரும்பை விளைவிப்பதற்காகக் காணிகளைச் சட்ட விரோதமாக ஆக்கிரமிக்கும் செயல்களும் நடைபெற்று வருகின்றன. இக்காணிகளில் சில சிறு சிறு குன்றுகளில் அமைந்துள்ளன. இங்கு காடுகளும் புதர்களும் வெட்டப்பட்டு விடுவதால், காணிகள் அரிப்புக்கு உட்படுகின்றன. தனிப் பயிர்ச்செய்கையைச் சார்ந்திருக்கும் நடவடிக்கைகள் அதிகரித்து வருவதாகத் தோன்றுகிறது. புதிய தொழிற்சாலைகள் கூட்டுழைப்புத் தொழிலாளர்களுக்கான தேவையைக் கணிசமான அளவுக்குச் சிருஷ்டித்திருப்பதால், மற்றும் விவசாயத் துறைகளில் தொழிலாளர் பற்றாக்குறை தோன்றியுள்ளது. குறிப்பாக நெல் நடுகைக்கும் அறுவடைக்கும் தொழிலாளர்கள் கிடைப்பது குதிரைக் கொம்பாயிருக்கிறது. நெல் அறுவடையும் கரும்பு அறுவடையும் ஒரே சமயத்தில் நடைபெறுவது ஒரு பிரச்சினையாயுள்ளது. இதன் விளைவாக இப்பகுதிகளில் பெண் கூட்டுழைப்புத் தொழிலாளருக்கான கோரிக்கை எழுந்துள்ளது. பெண்கள் தங்களுடைய இல்லங்களைப் புறக்கணித்துவிட்டே இவ்வேலைகளுக்கு வரவேண்டியுள்ளது. எனினும், இது பெண்களின் வருமானத்தைப் பெருக்கியுள்ளதாகத் தோன்றுகிறது.

சகல கம்பெனிகளுக்கும் காணியும் நீர்ப்பாசன வசதிகளும் வழங்கப்படும் என்று அரசாங்கம் உறுதி கூறியுள்ளது. எனவே, மாற்றப்படும் இக்காணிகளில், பரம்பரை இறையிலி நிலங்கள், அனுமதிப்பத்திரங்களின் (பெர்மிட்) கீழுள்ள காணிகள், குத்தகையின் கீழுள்ள காணிகள், அப்பகுதியில் குடியிருப்போரால் சாகுபடி செய்யப்படும் காணிகள் ஆகியனவும் அடங்கும். ஆதலால், இக்காணி மாற்றங்களுக்குக் கணிசமான எதிர்ப்பு காட்டப்பட்டுள்ளது. குடியேற்றக்காரர்களைத் தெரிவு செய்வதில் தற்போது அப்பகுதியில் வசிப்போருக்கு முதலிடம் அளிக்கப்படுமென்று கம்பெனி அதிகாரிகளும் அரசாங்க அதிகாரிகளும் அளித்துள்ள வாக்குறுதியும் நிதி உதவியும் மற்றும் வசதிகளும் அளிக்கப்படுமென்ற உறுதிமொழியும் இந்த எதிர்ப்பைப் பெருமளவு தணித்துள்ளது. என்றாலும், அவ்வப்பொழுது ஆட்சேபனைகளைக் காணக்கூடியதாயிருக்கிறது. சில சமயங்களில் மக்கள் கம்பெனிகளுக்குச் சொந்தமான கரும்புத் தோட்டங்களின் பகுதிகளை எரிக்கிறார்கள்.

எந்த உற்பத்தி அபிவிருத்தி முயற்சியிலும் சிறுதோட்ட உற்பத்தியாளர்களுக்கு முக்கியத்துவமளிக்கப்படல் வேண்டும். சிறு கரும்புத்தோட்டங்கள் வர்த்தக ரீதியில் இலாபகரமாக இயங்கச் செய்வதற்கு தேவையான விஸ்தரிப்புச் சேவை வசதிகள் செய்து கொடுக்கப்படுதல் வேண்டும். பொருத்தமான சாகுபடி வழிகாட்டுதல்களும், திறமையான சந்தைப்படுத்தல் உத்திகளும் இதில் மிக முக்கியமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1980 - 1985 ம் ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலத்தில் ஏற்பட்ட உலக சீனி விலை வீழ்ச்சி, 20 ம் நூற்றாண்டில் ஏற்பட்ட மிக மோசமான விலை வீழ்ச்சியாகும். பிலிப்பைன்ஸில் சீனி மிக முக்கியமான ஒரு பயிராகும். அந்நாட்டின் சீனிக் களஞ்சியமான நெக்ரோஸ் தீவில் அக்டோபர் நடுப்பகுதியில், சீனிக்கைத்தொழிலுக்கு மீண்டும் புத்துயிரளிக்கலாம் என்ற நம்பிக்கையே இல்லை என்று ஜனாதிபதி அக்யுனோ கூறினார். சீனி உற்பத்தியாளர்களுக்கு மத்தியில் பேசிய அவர் சீனிச் சந்தை திரும்பாது என்றும், அதற்குத் தேவையான அளவை விட அதிகமாக உற்பத்தி செய்யப்படுவதாகவும் கூறினார், ''முழுமையான ஒரு மாற்றம் தேவை'' என்றும் அவர் சொன்னார்.

சீனிக் கைத்தொழில் பிழைப்பதற்குரிய ஒரே நம்பிக்கை, 1984ல் காலாவதியான சர்வதேச சீனி ஒப்பந்தம் போன்ற விலை நிலைப்பாட்டு ஒப்பந்தமாகும் என்று தோன்றுகிறது. ஏற்றுமதி செய்யும் உறுப்பு நாடுகளின் ஆற்றில் விற்பனையை வரையறுத்தும் இருப்பில் மேலதிக சீனியை வைத்திருப்பதனாலும் நிர்ணயிக்க அவ்வொப்பந்தத்தின் மூலம் அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தது. அது, சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட இறாத்தலொன்றுக்கு 18 - 23 அமெரிக்க சதம் என்ற வரம்புக்குள் விலையை வைத்திருக்கத் தவறியபொழுதிலும் சந்தை விலை 1984 ல் அவ்விலையைவிட மிகத் தாழ்ந்திருந்தது. தற்போதைய நிலவர ஒப்பந்தமானது சந்தையைக் கட்டுப்படுத்துவதற்குரிய அதிகாரமற்றதாகும். அது சீனி வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள நாடுகளுக்கு பரஸ்பரம் அக்கறையுள்ள விடயங்களை ஆராய்வதற்கு மட்டும் வாய்ப்பு ஏற்படுத்தித் தருகிறது. இதற்கிடையில், உலகில் காணப்படும் மிகை வழங்கலும் தற்போதைய பருவகால உற்பத்தி சிறந்து விளங்கும் என்பதனாலும் விலைகள் மேலும் வீழ்ச்சியடையும் என்று சர்வதேச வர்த்தகர்கள் உறுதியாக நம்புகின்றனர். சர்வதேச விலைகள் நிலையானவையாக ஆக்கப்பட வேண்டுமா என்பது குறிப்பாக பெரும் ஏற்றுமதி நாடுகளான கியூபா, பிரேசில், ஐரோப்பிய பொருளாதார சமூகம், அவுஸ்திரேலியா ஆகியவற்றிலேயே தங்கியுள்ளது. ஒரு புது உடன்படிக்கையின் அடிப்படையில் ஒவ்வொரு நாட்டுக்குமான சந்தைப் பங்கு பற்றி அவை 1984 ஜூலையில் இணங்க மறுத்தமையினாலேயே மற்றச் சர்வதேச ஒப்பந்தமும் செயலற்ற முடிவானமையாகும். உலக சீனி நுகர்வில் 20 சதவீதத்திற்கும் குறைந்த அளவே திறந்த அல்லது ''சுதந்திர'' சந்தையில் விற்கப்பட்டாலும், சந்தை விற்பனையிலிருந்தும் வருமானத்தில் பெரிதும் தங்கியுள்ள சீனி உற்பத்தி செய்யும் வளர்முக நாடுகளுக்கு சந்தை விலைகள் மிக முக்கியமானவையாகும்.

சுதந்திரச் சந்தை சிறிதளவினதாக இருப்பதாலும், தட மாற்றங்கள் விசேடமாக இருத்தலினாலும் முன்னறிந்து கூற முடியாத விலைகளில் பாரதூரமான ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுகின்றன, உதாரணமாக, 1980 - 86 க்கு இடைப்பட்ட 6 மாத காலத்தில் சுதந்திர சந்தையில் விலைகளில் ஒரு இறாத்தலுக்கு 6 சதம் முதல் 39 சதம் வரை தளம்பல்கள் காணப்பட்டன. (1986 அக்டோபரில் வெளியிடப்பட்ட ஓர் அறிக்கையில் பிரேசில் நாட்டு வர்த்தக அமைச்சர், சமீபத்தில் ஏற்கனவே வீழ்ச்சியுற்றிருந்த விலை மட்டத்தைவிடக் குறைந்த விலையில் அமெரிக்கா, ஜெர்மனிக்குச் சீனி விற்றதனால் சீனியின் விலை இறாத்தலொன்றுக்கு 1.5 சதத்தை விடக் குறைந்து விட்டது என்று கூறியதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது). 1980 முதல் சந்தை விலைகள் தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வந்துள்ளன. 1980 ல் சராசரி விலை 29 அமெரிக்க சதத்திலிருந்து 1985 ல் 4 சதமாகக் குறைந்தது.

சர்வதேச சந்தையில் மாதாந்தச் சீனி விலைகள் 1980 ல் இறாத்தலொன்றுக்கு 69 அமெரிக்க சதத்திற்கும் 33 சதத்துக்கும் இடையிலேயே இருந்தது. 1981 ல் இது 53 சதத்துக்கும் 28 சதத்திற்கும் இடையில் ஏற்றமும் வீழ்ச்சியும் அடைந்தது. 1982 ல் மிகக்கூடிய விலை 29 சதமாகவும் மிகக்குறைந்த விலை 18 சதமாகவும் இருந்தது. 1983 ல் மிகக் கூடியது 24 சதமாகவும் மிகக் குறைந்தது 18 சதமாகவும் இருந்தது. 1984 ல் மிகக்கூடிய விலை 15 சதமாக இறங்க மிகக்குறைந்தது 8 சதத்துக்கு இறங்கியது. 1985 ல் விலை 10 சதத்துக்கும் 6 சதத்திற்கும் இடைப்பட்டதாக வீழ்ச்சியுற்று மிக மோசமான நிலையை அடைந்தது.

1900 முதல் 1960 வரையான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் சராசரி ஆண்டு விலைகளும் கடுமையான ஏற்றத்தாழ்வுகளுக்கு உட்பட்டன. 1975 ம் ஆண்டிலேயே சர்வதேச சந்தையில் சீனியின் விலை மிக உயர்ந்த நிலையை அடைந்தது. எனினும், 1980 ல் விலைகள் சரியத் தொடங்கின. 1985ல் ஏற்பட்ட விலை வீழ்ச்சி, அதற்குமுன் 1965ல் ஏற்பட்ட மிகப்பெரிய வீழ்ச்சியை விட மோசமானதாகும். 1986 ம் ஆண்டுக்கு முந்திய ஐந்தாண்டுகளில் ஏற்பட்ட வீழ்ச்சி, உலகில் கரும்புச் சீனியும் பீற் சீனியும் அதிக அளவில் உற்பத்தியானதன் விளைவாகும். உலகின் சீனி நுகர்வு மெதுவாகவே அதிகரிக்கிறது. இதற்குக்காரணம் வேறு இனிப்பாக்கிகள் அதிகமாக நுகரப்படுவதும் சீனியின் உயர்ந்த விலையுமாகும்.

வேறு பல காரணிகளும் இந்நிலையை உக்கிரமாக்கின, உதாரணமாக:

(அ) முன்னர் தேறிய இறக்குமதி நாடுகளாக இருந்த பல நாடுகள், பெருநாடுகளில் தங்கி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிருக்கும் நிலையைத் தவிர்ப்பதற்கு முயற்சி செய்துள்ளன அல்லது தெரிவு ஏற்றுமதி நாடுகளாக மாறியுள்ளன. மாறும் இப்பாங்கு அனேகமாக அபிவிருத்தியடைந்த நாடுகளில் இடம்பெற்றுள்ளது. அவற்றில் ஏற்கனவே அதிக அளவில் சீனி நுகரப்படுகிறது. ஐரோப்பிய பொருளாதார சமூகம் இதற்கு நல்லதோர் உதாரணம்.

(ஆ) சர்வதேச சீனி ஒப்பந்தத்திலும் சர்வதேச வர்த்தகம் கட்டுப்படுத்தப்பட்டுள்ள பாரிய உற்பத்திநாடுகள் சில, பொருளாதார கஷ்டங்களை எதிர்நோக்காமலும், அரசியல், சமூக பிரச்சினைத் தோற்றுவிக்காமலும் உற்பத்தியைக் குறைக்க இயலவில்லை.

இந்நாடுகள், ஒழுங்குபடுத்தப்படாத, மறைவாக கணிசமான கொடுக்கல் வாங்கல்கள் நடைபெறும் சந்தையின் கட்டுப்படுத்தப்படாத பக்கத்தை நாட நிர்ப்பந்திக்கப்பட்டன.

(இ) சீனி இறக்குமதி செய்யும் நாடுகள் (அமெரிக்காவும் ரஷ்யாவும் உலகின் மிகப்பெரிய சீனி இறக்குமதி நாடுகளாகும்) ஏற்றுமதி நாடுகளைத் தெரிவு செய்து அவற்றுக்கு உயர்ந்த விலைகளை வழங்குகின்றன. இதனால் இறக்குமதி நாட்டின்மீது இந்நாடுகள் தொடர்ந்து தங்கியிருக்க வேண்டிய அவசியத்தைத் தோற்றுவிக்கிறது. 1982-83ல் அமெரிக்கா ஏழு லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கும் திறந்த சந்தைகளின் விலையைவிடப் பன்மடங்கு உயர்ந்த விலைகளில் கோட்டாக்களை வழங்கி அதன் இறக்குமதித் தேவையில் மூன்றிலிரண்டு பங்கை நிறைவு செய்தது. 1960 முதல் கியூபா, ரஷ்யாவுடன் நீண்டகால வழங்கல் ஒப்பந்தங்களைச் செய்துகொண்டு 1982ல் உலக சந்தை விலைகளைவிட ஆறுமடங்கு கூடுதலான விலைக்கு சீனி ஏற்றுமதி செய்தது. தமக்கு விருப்பமான நாடுகளின் இக்கொள்கையானது, பாரபட்சமான சந்தைப் போக்கினையும் உருவாக்குகின்றது.

(ஈ) நாடுகளுக்கிடையே செய்துகொள்ளப்பட்டுள்ள நீண்டகால ஒப்பந்தங்கள் உற்பத்தியாளர்கள் மீதும் பெரிய கொள்வனவு நாடுகள் மீதும் வரையறைகளை ஏற்படுத்தியுள்ளன.

(உ) உலக சீனிச் சந்தையில் பொதுவான ஒரு மெல்லிய சூழல் நிலை தோன்றியுள்ளது.

(ஊ) கோட்டாக்களும் பிற இரு நாடுகளுக்கிடையிலான ஒப்பந்தங்களும் செயலிழந்துபோதும், சர்வதேச சுதந்திர சீனிச் சந்தை கலக்கத்திலுள்ளது. சுங்கக் கட்டுப்பாடுகள் போன்ற தடைகளையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது.

(எ) அமெரிக்க விஞ்ஞானிகள் இருவகை உயர் சோளச் சீனியை உற்பத்தி செய்வதற்கான வழியைக் கண்டுபிடித்துள்ளனர். இது, கரும்பு, பீற் சீனி வகைகளுக்கு ஒரு பெரும் சவாலாக அமைந்துள்ளது. திரவ உருவத்திலுள்ள இப்பொருள் எடுத்துச் செல்வதில் கஷ்டங்களை ஏற்படுத்துவதனாலும், கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இது கிடைக்காததனாலும் இது பரவலாக உபயோகிக்கப்படுவது தடைப்பட்டுள்ளது. இருப்பினும் பாரிய பெப்ஸி, கொக்காகோலா உற்பத்தியாளர்கள் இவ்வினிப்புப் பொருளை உபயோகிப்பதனால் இது, கரும்பு, பீற் சீனி வகைகளுக்கு ஒரு பெரும் பயமுறுத்தலாகவுள்ளது.

(ஏ) சக்ரோஸ் கொண்ட சீனியைவிட பெருமளவில் பிரக்ரோஸ் கொண்ட திரவச் சீனி மற்றும் இயற்கை, செயற்கை சீனிப் பகரப் பொருட்களினால் ஏற்படும் நன்மை பற்றியும், சக்ரோஸ் கொண்ட இனிப்பாக்கிகள் சுகாதாரத்துக்குக் கேடு விளைவிப்பவை எனப் பிரசாரம் செய்தல்.

உலக சீனி உற்பத்தி

ஐ. நா. புள்ளிவிபர நூலின் படி நூற்றிப்பத்துக்கு மேற்பட்ட நாடுகள் சீனி உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. அவற்றின் மொத்த உற்பத்தி 1982ல் 10 கோடி 70 இலட்சம் மெட்றிக் தொன்கள். இது 1970ல் உற்பத்தி செய்யப்பட்ட 7 கோடி 11 இலட்சம் மெட்றிக் தொன்களைவிட 41.6 சதவீதம் கூடியதாகும். உணவு விவசாய தாபனத்தின் மாதாந்த விவசாயப் புள்ளிவிபர வெளியீட்டின்படி 1982 அளவில் உலகில் உற்பத்தியான சீனி 10 கோடி 24 இலட்சம் மெட்ரிக் தொன்களாகும். ஆனால், இது 1983ல் 9 கோடி 81 இலட்சம் மெ. தொன்களாகக் குறைந்தது. 1984ல் 10.03 கோடி தொன்களாக அதிகரித்தபோதிலும் அது 1982 மட்டத்தைவிடக் குறைந்ததாகும். எனவே, 1970 முதல் 1985 வரையிலான காலப்பிரிவில் 1982ம் ஆண்டிலேயே மிகக் கூடியளவு சீனி உற்பத்தியாயிற்று எனக் கொள்ளலாம். இவ்வுற்பத்தியில் கரும்புச் சீனி முன்னிலையிலிருந்தது. அத்துடன் உலக உற்பத்தியில் அதன் முக்கியத்துவம் அதிகரித்து வந்துள்ளது. உதாரணமாக, 1971 - 75 காலப்பிரிவில் உலக சீனி உற்பத்தியில் 81.7 சதவீதம் கரும்புச் சீனியாகும். பீற் சீனி 28.3 சதவீதமாகும். 1981ல் மொத்த உற்பத்தியில் 86.6 சதவீதம் கரும்புச் சீனியாகும். அதன் நிலை 1983ல் 91.5 சதவீதமாகவும், 1984ல் 93.2 சதவீதமாகவும் மேலும் உயர்ந்தது. இக்காலப்பிரிவின் மிக உயர்ந்த வளர்ச்சி வீதம் 1977ல் இடம்பெற்றது.

1978 முதல் 1980 வரை உலக சீனி உற்பத்தி இருள் சூழ்ந்த ஒரு நிலையை அடைந்தது. 1978 உற்பத்தி வீதம் 1977ல் உற்பத்தியை விட 0.5 சதவீதம் மட்டுமே உயர்ந்திருந்தது. அடுத்த இரண்டாண்டுகளிலும் உற்பத்தி 1.7 சதவீதத்தாலும், 5.3 சதவீதத்தாலும் வீழ்ச்சியுற்றது. 1981 அளவில் சீனி உற்பத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் உற்பத்தியின் பெருக்கம் தொடங்கியது. அவ்வாண்டில் 0.86 கோடி மெட்ரிக் தொன் உற்பத்தி செய்யப்பட்டது. இது 1970 உற்பத்தி செய்யப்பட்ட 0.08 கோடி தொன்னிலும் 2 சதவிகிதத்தால் உயர்ந்ததாகும். 1981ல் உற்பத்தி 1980ன் உற்பத்தியைவிட 9.6 சதவிகிதத்தால் கூடியதாகும். 1982ல் உலக உற்பத்தி மேலும் 8.8 சதவிகிதத்தால் உயர்ந்தது. அதன்பின் ஒப்பீட்டளவில் 1983ல் உற்பத்தி 4.3 சதவிகிதத்தால் வீழ்ச்சியுற்றது. 1984ல் உற்பத்தி அதிகரித்திருந்தபோதிலும், அது 1982 ஐ விட 3.1 சதவிகிதத்தால் குறைந்ததாகவே இருந்தது.

ஏறத்தாழ 112 நாடுகள் சீனி உற்பத்தி செய்தபோதும் உலக உற்பத்தியில் ஒரு சில பெரிய நாடுகளே ஆதிக்கம் செலுத்துகின்றன. 1970க்கும் 1980க்கும் இடையில் ஐந்து நாடுகளில் ஒவ்வொன்றும் உலகத் தேவையில் 5 சதவிகிதத்தை உற்பத்தி செய்தன. அக்காலப்பிரிவில் பிரேஸில், கியூபா, ரஷ்யா, அமெரிக்கா ஆகிய நாடுகளே உற்பத்தியில் முன்னணியில் நின்றன. 1982ல் பிரான்ஸும் இக்குழுவில் சேர்ந்து கொண்டது. இக்குழுவின் உற்பத்தி 1970ல் உலக உற்பத்தியில் 44.1 சதவீதமாக இருந்தது. 1980ல் இது 37.9 சதவிகிதமாகக் குறைந்தது. பிரான்ஸ் சேர்ந்து கொண்டதும் இந்நான்கு நாடுகளுக்குமான உற்பத்தி வீதம் 43.3 சதவிகிதமாக இருந்தது. 1984ல் இது 45.6 சதவீதமாக அதிகரித்தது.

இரண்டாவது குழுவில் அடங்கிய நாடுகள் அவுஸ்திரேலியா, பிரான்ஸ், ஜேர்மன் குடியரசு, மெக்ஸிகோ, பிலிப்பைன்ஸ் ஆகியன. 1980 அளவில் சீனாவும் இக்குழுவில் சேர்ந்தது. 1970ல் இக்குழுவின் மொத்த உற்பத்தி உலக உற்பத்தியில் 16.3 சதவிகிதமாகும். இது 1980ல் 21.4 சதவிகிதமாக அதிகரித்தது. மூன்று/4 வது குழுவிலிருந்த தாய்லாந்து இரண்டாவது குழுவில் பிரவேசிக்க, பிரான்ஸ் முதலாவது குழுவில் சேர்ந்து கொண்டது.

1982 முதல் இரண்டாம் குழுவிலிருந்த நாடுகளின் எண்ணிக்கை குறைந்தது. 1970ல் உலக உற்பத்தியில் ஏறக்குறைய 10 சதவிகிதத்தை உற்பத்தி செய்தன. ஆயினும் முக்கியத்துவம் 1970 அளவில் சிறிது அதிகரித்தது. இக்குழுவைச் சார்ந்த நாடுகளின் எண்ணிக்கையும் 1980ல் 14 ஆக அதிகரித்தது.

மிகுதியாயிருந்த குழுவைச் சார்ந்த 60 நாடுகள் 1970ல் உலக உற்பத்தியில் 10.1 சதவிகிதத்தை உற்பத்தி செய்தன. இக்குழுவின் எண்ணிக்கையும் முக்கியத்துவமும் 1982 வரை அதிகரித்துக்கொண்டே சென்றன. எவ்வாறாயினும், 1983 ஆம் 1984 ஆம் ஆண்டுகளில் அவற்றின் பங்களிப்பு 1980 - 1982ன் பங்களிப்பை விடக் குறைந்து காணப்பட்டது.

இறக்குமதியாளர்கள்

1973 - 1983 ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலத்தை நோக்குகையில், அபிவிருத்தியடைந்த சந்தைப் பொருளாதார நாடுகள் 1982 வரை தேறிய இறக்குமதி நாடுகளாக இயங்கியிருப்பதை அவதானிக்க முடிகிறது. தேறிய இறக்குமதியாளர் என்ற நாடுகளின் நிலை, 1973க்கு முன் உறுதியானதாக இருந்தது. 1974ல் ஒரு மாற்றம் ஏற்பட்டு, தேறிய சீனி இறக்குமதியாளர்கள் என்ற அபிவிருத்தியடைந்த நாடுகளின் நிலை 1978 வரை தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வந்தது. 1979ல் மீண்டும் அதிகரிப்பு ஏற்பட்டது. ஆயினும் அவற்றின் நிலை 1980ல் தற்காலிய ஆண்டின் நிலையில் ஏறத்தாழ சமநிலை ஒன்றாக இறங்கியது. மீண்டும் 1981, 1982, 1983ம் ஆண்டுகளில் அபிவிருத்தியடைந்த நாடுகளின் தேறிய ஏற்றுமதியாளர் என்ற நிலை உயர்ந்தது. 1984ல் மீண்டும் நிலைமையில் மாற்றம் ஏற்பட்டது. இந்நாடுகளின் பொதுவான போக்கு, தம் சீனித் தேவைக்கு வெளிநாடுகளை எதிர்பார்த்திருக்கும் நிலையை குறைப்பது மட்டுமன்றி, உலகச் சந்தையில் வளர்முக நாடுகளோடு போட்டியிடுவதுமாக இருந்தது.

ஆய்வுக்குரிய காலப்பகுதி முழுவதிலும் அபிவிருத்தியடைந்துள்ள சந்தைப் பொருளாதாரம் முழுமையாக இரண்டு ஆண்டு, மூன்றாவது சந்தை காலத்துக்கு உட்பட்டிருந்தது. ஏற்றுமதி மிகைகள் 1.37 கோடி மெ. தொன்னாகவும் 71 லட்சம் மெ. தொன்னாகவும் இடம்பெற்றிருந்தது. மிகக்குறைவான அபிவிருத்தியடைந்த நாடுகளின் இறக்குமதி மிகக்குறைவாக இருந்தபோதும் இக்காலப்பகுதி முழுவதிலும் தேறிய இறக்குமதி நாடுகளாகவே இருந்தன. கிழக்கு ஐரோப்பிய நாடுகள் இவ்வாறாக இருந்து 1978 முதல் 1982 வரை அவற்றின் இறக்குமதியை அதிகரித்து வந்திருந்தன. ஆனால், 1983, 1984ம் ஆண்டுகளில் இந்நாடுகளின் தேறிய இறக்குமதி நிலை கணிசமாக வீழ்ச்சியுற்றது. ஆசியாவின் சோசலிச நாடுகள், குறிப்பாக 1980க்குப் பிறகு தேறிய இறக்குமதி நாடுகளாக இருந்து வந்துள்ளன. அத்துடன் 1978 முதல் 1982 வரை அவை தம் இறக்குமதி அளவுகளையும் அதிகரித்தன. ஆனால், 1983ம் 1984ம் ஆண்டுகளில் இந்நாடுகளின் தேறிய இறக்குமதி மட்டம் குறைந்தது. குறிப்பாக 1980க்குப்பின் ஆசிய சோசலிச நாடுகளும் தேறிய இறக்குமதி நாடுகளாக இருந்தன. வளர்முக நாடுகளில் சில ஆபிரிக்க நாடுகள் அனைத்தும் தேறிய இறக்குமதி நாடுகளாக இருந்தன. அதே வேளையில் தென்னமெரிக்க நாடுகள் தேறிய ஏற்றுமதி நாடுகளாக விளங்கின. 1974 முதல் 1977 வரை ஆசிய வளர்முக நாடுகள் தேறிய ஏற்றுமதி நாடுகளாக இருந்தன. அவை 1978 முதல் 1981 வரை தேறிய இறக்குமதி நாடுகளாயின. ஆனால், 1982ல் இப்பிராந்தியம் சிறிய அளவிலான தேறிய ஏற்றுமதி நாடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

என்று நிலையை மீண்டும் அடைந்தன.

சீனி நுகரும், வர்த்தகம் செய்யும் பெரிய நாடுகளுள் அமெரிக்காவும் ஒன்று. அது 1978 முதல் 1984 வரை தேறிய இறக்குமதி நாடாக இருந்தது. தேறிய இறக்குமதி நாடுகளாக இருந்த ஏனைய நாடுகள் ஐக்கிய இராச்சியம், யப்பான், ரஷ்யா ஆகியவை. எவ்வாறாயினும், 1980ல் இருந்த அவற்றின் நிலையுடன் ஒப்பிடுகையில் இறக்குமதி நாடுகள் என்ற வகையில் அவற்றின் முக்கியத்துவம் 1980ல் குறைந்துவிட்டது. ரஷ்யா 1972ல் இருந்துதான் தேறிய இறக்குமதி நாடாக மாறியது. பிரான்சும் மேற்கு ஜேர்மனியும் தொடர்ந்து ஏற்றுமதி நாடுகளாக இருந்து வந்துள்ளன. பெல்ஜியம், டென்மார்க், கிறீஸ், அயர்லாந்து, நெதர்லாந்து ஆகிய நாடுகள் ஐரோப்பிய கைத்தொழில் நாடுகளுள் முற்றிலும் ஏற்றுமதி நாடுகளாக இருந்து வந்துள்ளன.

சீனி இறக்குமதி - உலக நிலைமை

அபிவிருத்தியடைந்த சந்தைப் பொருளாதார நாடுகள் 1970ம் ஆண்டுத் தொடரின் தொடக்கத்தில் பெருமளவிலான கொள்வனவு நாடுகளாக இருந்துள்ளன. உதாரணமாக, அவை 1970 முதல் 1975 வரை உலக சீனி ஏற்றுமதியில் 67 சதவீதத்தைக் கொள்வனவு செய்தன. 1980 அளவில் அவற்றின் கொள்வனவு 38 சதவீதமாகவும், 1981ல் 31 சதவீதமாகவும் குறைந்தது. அது 1983லும் 1984லும் உலக இறக்குமதியில் முறையே 33 சதவீதமாகவும், 37 சதவீதமாகவும் இருந்தது. அபிவிருத்தியடைந்த நாடுகளின் இறக்குமதி 1970ம் ஆண்டு தொடங்கிய தசாப்தத்தில் கணிசமாக அதிகரித்தது. இந்நாடுகள் 1970 ஆண்டில் இறக்குமதி செய்த அளவுக்கு 1980ம் ஆண்டிலும் இறக்குமதி செய்தன. 1981 முதல் கொள்வனவு செய்யப்பட்ட சீனியின் அளவு குறைந்தது. 1982ல் 96 லட்சம் மெ. தொன் இறக்குமதி செய்யப்பட 1984ல் 86 லட்சம் மெ. தொன் சீனியே இறக்குமதி செய்யப்பட்டது. உலகச் சீனி இறக்குமதியிலும் இந்நாடுகளின் இறக்குமதிப் பங்கு 1981ல் 36.8 சதவீதத்திலிருந்து 1984ல் 32.4 சதவீதமாக குறைந்தது.

குறிப்பிட்ட பிராந்தியங்களில் இறக்குமதியை நோக்குகையில், கொள்வனவைப் பொறுத்தவரை, வட அமெரிக்கா (அமெரிக்காவும் கனடாவும்) வின் நிலை 1970ல் இருந்ததை விட 1982ல் தாழ்வுற்றது என்பதை அவதானிக்க முடிகிறது. இந்நிலை 1983, 1984ம் ஆண்டுகளில் சற்று உயர்ந்தது. இவ்விரு நாடுகளும் 1970ல் முழு உலக சீனி இறக்குமதியிலும் 25.6 சதவீதத்தைக் கொள்வனவு செய்தன. அதன் பின்னர் அவற்றின் கொள்வனவு 1975ல் 20.2 சதவீதமாகக்குறைந்தது, 1980ல் 16.6 சதவீதமாகவும் 1982ல் 11.7 சதவீதமாகவும் குறைந்தது. எவ்வாறாயினும் இது 1983ல் 13.2 சதவீதமாகவும், 1984ல் 15.4 சதவீதமாகவும் உயர்ந்தது. 1970ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1982ன் பாரிய வீழ்ச்சி 39.4 சதவீதமாக இருந்தது. ஆபிரிக்காவில் இறக்குமதி குறிப்பிடத்தக்க அளவில் குறைந்தது.

அபிவிருத்தியடைந்த எல்லாப் பிராந்தியங்களதும் இறக்குமதிகள் வீழ்ச்சியுறும்போது, உலகில் உற்பத்தியாகும் சீனி எவ்வாறு நுகரப்படுகிறது என்ற பிரச்சினை எழுகிறது. புள்ளிவிவரங்களில் பகுப்பாய்வொன்றிலிருந்து வளர்முக நாடுகளும் ஐரோப்பிய, ஆசிய சோசலிச நாடுகளும் மேலதிகச் சீனியை அதிகமதிகமாகக் கொள்வனவு செய்தன என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

1970ல் 40 இலட்சம் மெ. தொன்னாகவிருந்த வளர்முக நாடுகளின் இறக்குமதிகள் 1980 அளவில் இருமடங்காகி 99 இலட்சம் மெ. தொன்களாகின. உலக இறக்குமதியில் இது 17.8 சதவீதத்திலிருந்து 35.1 சதவீதமாக ஏற்பட்ட அதிகரிப்பாகும். 1982, 1983, 1984ம் ஆண்டுகளில் சிறிது வீழ்ச்சி ஏற்பட்டது. கொள்வனவுகள் 96 இலட்சம், 94 இலட்சம், 86 இலட்சம் தொன்களாக அம்மூன்று ஆண்டுகளிலும் இறக்குமதி வீழ்ச்சியடைந்தது. மேற்கு ஐரோப்பிய சோசலிச நாடுகளின் கொள்வனவுகளும் 1975க்குப் பின்னர் அதிகரித்துவந்தன. 1982ல் 85 இல. மெ. தொன்கள் கொள்வனவு செய்யப்பட்டன. இது 1975ல் கொள்வனவைவிட இருமடங்கும் 1970ன் கொள்வனவுகளைவிட இருமடங்கும் கூடியதாகும். 1982 முதல் இறக்குமதிகள் 1983லும் 1984லும் குறைந்தன.

அபிவிருத்தியடைந்த சந்தைப் பொருளாதார நாடுகள் சீனி ஏற்றுமதியாளர்கள் என்ற வகையில் வகிக்கும் பங்கு, வளரும் சந்தைப் பொருளாதார நாடுகளின் பங்குக்கு மிகச்சிறியதாகவே இருந்து வந்துள்ளது. எவ்வாறாயினும் 1980ல் முடிவுற்ற பத்தாண்டுகளில் ஏற்றுமதிப் போக்குகளை நுணுக்கமாக ஆராயும்பொழுது, 1980ல் அந்நாடுகளின் முக்கியத்துவம் ஓரளவு குறைந்ததெனினும், அவற்றின் முக்கியத்துவம் அக்காலப் பிரிவில் அதிகரித்து வந்தது என்பது புலனாகிறது. மாறாக, வளர்முக நாடுகளின் முக்கியத்துவம் அருகி வந்துள்ளது. உதாரணமாக 1970ல் அபிவிருத்தியடைந்த சந்தைப் பொருளாதார நாடுகளின் ஏற்றுமதி, உலகின் ஏற்றுமதியில் 18.3 சதவீதமாக இருந்தது.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் பங்கு 72 சதவீதமாக இருக்க 1976ல் அபிவிருத்தியடைந்த நாடுகளின் பங்கு கணிசமாக அதிகரித்தது. இந்நிலை தொடர்ந்ததோடு 1978ல் 29.5 சதவீதமாக அதிகரித்தது. 1979ல் சிறிது வீழ்ச்சியடைந்தது. 1978க்குப் பின்னர், அபிவிருத்தியடைந்த நாடுகளின் பங்குகள் குறிப்பிடத்தக்க அளவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு இல்லாதிருந்தது.

அபிவிருத்தியடையும் நாடுகளின் உலக ஏற்றுமதிப்பங்கு 1950ம் ஆண்டுத் தொடரில், 1970ம் ஆண்டுத் தொடரில் இருந்ததைவிட மிகக் குறைந்து காணப்பட்டது. இந்நிலை, அபிவிருத்தியடையும் நாடுகளின் சீனி ஏற்றுமதி, அபிவிருத்தியடைந்த நாடுகளின் உற்பத்திக்கு இடமளித்துள்ளது என்பதை எடுத்துக் காட்டுகிறது.

## வளர்முக ஏற்றுமதி நாடுகளின் முக்கியத்துவம்

1984ல் முடிவுற்ற 15 ஆண்டுகளில் ஏறக்குறைய 73 வளர்முக நாடுகள் சீனி ஏற்றுமதியில் ஈடுபட்டிருந்தன. இவற்றில் 24 ஆபிரிக்க நாடுகளும் 32 அமெரிக்க, கரிபிய நாடுகளும், 16 ஆசிய நாடுகளும், ஒரு ஓசானிக் நாடும் அடங்கும். ஆய்வுக்குரிய காலப்பிரிவில் அமெரிக்க வளர்முக நாடுகளே மிகப் பெருந்தொகையான சீனியை ஏற்றுமதி செய்தன. 1973ல் அவை உலகச் சந்தைப் பங்கில் 51.5 சதவீதத்தையும், வளர்முக நாடுகளின் மொத்தத் தொகையில் 78 சதவீதத்தையும் ஏற்றுமதி செய்தன. 1982 அளவில் இவ்விரு நிலைகளும் அருகத் தொடங்கின. உலக சந்தைப் பங்கில் அவற்றின் ஏற்றுமதி 42 சதவீதமாகக் குறைந்தது. அபிவிருத்தியடையும் நாடுகளின் ஏற்றுமதிப் பங்கு 65.8 சதவீதமாகக் குறைந்தது. 1983, 1984ம் ஆண்டுகளில் இப்பங்கு சற்று அதிகரித்து முறையே 44.2 சதவீதமாகவும், 45.7 சதவீதமாகவுமிருந்தது. அதேவேளையில் வளர்முக நாடுகளின் பங்கு 68.5 ஆகவும் 72.5 சதவீதமாகவுமிருந்தது.

ஆபிரிக்க வளர்முக நாடுகள் 1973ல் உலக ஏற்றுமதியில் 7 சதவீதத்தையும், வளர்முக நாடுகளின் ஏற்றுமதியில் 10 சதவீதத்தையும் ஏற்றுமதி செய்தன. இவ்விகிதங்களும் 1983, 1984ம் ஆண்டுகளில் முறையே 5.5 சதவீதமாகவும் 8.6 சதவீதமாகவும் குறைந்தன. 1983ல் இவை உலக ஏற்றுமதியில் 6.9 சதவீதமாகவும் 5.4 சதவீதமாகவும் வளர்முக நாடுகளின் ஏற்றுமதியில் முறையே 9.1, 8.6 சதவீதமாகவும் இருந்தன. ஆசிய வளர்முக நாடுகளின் ஏற்றுமதி நிலை வேறுவிதமாக இருந்தது. உலக ஏற்றுமதியிலும் வளர்முக நாடுகளின் ஏற்றுமதியிலும் அந்நாடுகளின் நிலை உயர்ந்து காணப்பட்டது.

## சர்வதேச சீனி சந்தைப்படுத்தல்

உலக சீனிச் சந்தை ஓர் எச்சச் சந்தையாகக் கருதப்படுகிறது. உற்பத்தி செய்யப்படும் சீனியில் 70 சதவீதம் உற்பத்தி செய்யும் நாடுகளாலேயே நுகரப்படுகிறது. எவ்வாறு 112 நாடுகள் உற்பத்தி செய்கின்றன என்பதையும், 107 நாடுகள் ஏற்றுமதி செய்தன என்பதையும் ஏற்கனவே கண்டோம். இன்றைய உலகின் சர்வதேசச் சீனிச் சந்தை இரு முறையில் சந்தையாக விளங்குகிறது. இது அரசாங்கக் கட்டுப்பாட்டிலுள்ள சந்தை சர்வதேச சீனி ஒப்பந்தத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தை மற்றும் கட்டுப்பாடற்ற எச்சச் சந்தை என்பவற்றை உள்ளடக்கியது.

## இருநாட்டு ஒப்பந்தங்கள்

இதன் கீழ், வழங்கல், வாங்கல் நாடுகளிடையே ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன. விலைகள் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் பொழுது தீர்மானிக்கப்படுகின்றன.

ஒப்பந்தங்களில் விலைகள் மட்டுமன்றி குறிப்பிட்ட தொகைகள் ஏற்றுமதி செய்யப்படும் நிலைகளும் குறிப்பிடப்படலாம். இவ்வொப்பந்தங்கள், உலகச் சந்தையில் ஏற்படும் விலை ஏற்றத் தாழ்வுகள் எதிர்கால ஏற்றத் தாழ்வுகள் என்பவற்றைப் பொருட்படுத்தாமல் ஏற்றுமதி நாட்டுக்கும் இறக்குமதி நாட்டுக்கும் உறுதியான சந்தை வழங்கலை உத்தரவாதப்படுத்துகிறது. ஐரோப்பாவிலிருந்து பல்கேரியா, செக்கோசிலோவகியா, ஜெர்மனி, ஹங்கேரி, மொங்கோலியா, போலாந்து, ருமேனியா, ரஷ்யா, சீன, வடகொரியா, வியட்நாம், யூகோஸ்லேவியா, ஆகிய நாடுகளுக்குச் செய்யப்படும் ஏற்றுமதி இதற்குச் சிறந்த உதாரணமாகும். ரஷ்யாவிலிருந்து அரசகட்டுப்பாட்டுப் பொருளாதார நாடுகளுக்கும் இத்தகைய ஒப்பந்தங்களின் கீழேயே ஏற்றுமதி நடைபெறுகிறது. ரஷ்யா, பிற சோஷலிச நாடுகளுடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தங்களில் தொகை குறிப்பிடப்படவில்லை. "கோம்" யாநாட்டு ஒப்பந்தங்களிலும் சீன, வடகொரியா, வியட்நாம், யூகோஸ்லேவியா, ஆகிய நாடுகளுடன் செய்துள்ள ஒப்பந்தங்களில் ஏற்றுமதியின் அளவு குறிப்பிடப்பட்டுள்ளது.

## நீண்டகால சீனி ஒப்பந்தங்கள்

சீனி தொடர்பான இருநாட்டு ஒப்பந்தங்களில் சில மட்டுமே வெளியிடப்படுவதனால் அவை எவ்வாறு செயற்படுகின்றன என்பது பற்றிய தகவல்கள் கிடைக்கத்தக்கதாக இல்லை. எவ்வாறெனினும் அவற்றின் எண்ணிக்கை அபரிமிதமானதாகும். இந்நீண்டகால இருநாட்டு ஒப்பந்தங்கள் சீனியை விற்கும் நாடுகளுக்கும் வாங்கும் நாடுகளுக்கும் இடையேயான வழங்கலுக்கும் விலைகளுக்கும் உத்தரவாதமளிக்கின்றன.

## சர்வதேச சீனி ஒப்பந்தம்

சர்வதேச சீனி ஒப்பந்தத்தின் கீழ் வரும் சந்தையானது "சுதந்திரச் சந்தையாக" கருதப்படுகிறது. இதில் விலைகள் வழங்கல், தேவை என்பவற்றால் நிர்ணயிக்கப்படுகின்றன. எனினும், குறிப்பிட்ட எல்லையை மீறி விலை வீழ்ச்சியடையுமிடத்து ஏற்றுமதி நாடுகள் சீனியை ஏற்றுமதி செய்யாமல் வைத்திருக்க எதிர்பார்க்கப்படுகின்றன. இதன் மூலம் உலக வழங்கல் மட்டுப்படுத்தப்படுகிறது. குறிப்பிட்ட எல்லையை மீறி விலைகள் ஏறும்போது, வழங்கல் பங்குமுறை அகற்றப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் ஆய்வு

# விஞ்ஞானம்-நீக்கப்பட்ட உண்மைகள்

**(Aborted Discovery**
by Susantha Goonatilake: Zed Books, London.)

மூன்றாம் உலகில் காலனித்துவ ஆதிக்கத்துக்கு முன்பிருந்த விஞ்ஞானத்தையும், ஐரோப்பிய விஞ்ஞானத்தையும், விஞ்ஞானத்தின் சமூக அமைவையும் விஞ்ஞானத்திலும் தொழில்நுட்பவியலிலும் தற்போதுள்ள சர்வதேச உறவுகளின் அதிகாரச் சமன்பாடுகளையும் சுசந்த குணதிலகா இந்நூலில் தெளிவாக எடுத்துக்காட்டுகிறார். இந்தப் பிரிவுகளில் ஐரோப்பிய விஞ்ஞானத்தையும், சமூகத்தையும் படிக்கும் பெரும்பாலான மாணவர்களுக்குப் பரிச்சயமான அனேகமான புத்தகங்களின் சுருக்கமாகும். ஆதலால், இந்நூலின் பொருளடக்கத்தில் வெகு புதிதாகவோ அல்லது நாடகபாணியில் பரபரப்பூட்டக் கூடியதாகவோ ஒன்றுமில்லை. ஆனால் இந்நூல் ஒரு துணிவான முயற்சி. துணிவானது என்பதற்குக் காரணம், குணதிலகா மேற்கொள்ளும் நிலைப்பாட்டைச் சுற்றிப் பின்னப்பட்ட ஒன்று. இரட்டைய தகவல்கள் மிகக்குறைவானவையே உள்ளன. மூன்றாம் உலகம் மேற்கின் விஞ்ஞான, தொழில்நுட்பவியல் கலாசாரத்தினால் அடக்கியொடுக்கப்படுகிறது என்பதும், மூன்றாம் உலகிலுள்ள விஞ்ஞானிகள் அவர்களுடைய சொந்த நன்மைக்காக, அவர்களுடைய சொந்தச் சமூக, உளவியல் தேவைகளைப் பூர்த்திசெய்ய அவர்களைப் பிணைத்துள்ள தளைகளிலிருந்து விடுவித்துக்கொள்ள வேண்டும் என்பதுமே அவருடைய நிலை. அவருடைய செய்தி ஒரு சர்வகாலச் செய்தி. அவர் தமது சம்பாஷணைகளில் கூறுவது போல, இந்நாடுகளின் "குறை காண்பதிலிருந்து ஆக்கப் பணிக்குப்போக, சமயம் வந்து விட்டது". இச் செய்தியை அவர் "பூர்த்தியுறாத கண்டுபிடிப்பு" நூலில் அடிக்கடி திரும்பத் திரும்பக் கூறுகிறார். அப்புத்தகம் முக்கியமானதென்று நான் கருதுவதற்கு இதுவே காரணம்.

இரண்டாவது உலகமகாயுத்தத்துக்குப் பின்பு அரசியல் காலனி ஆதிக்கமுறை விஞ்ஞான ரீதியான காலனி ஆதிக்க முறைக்கு வழிவிட்டபோது, மூன்றாம் உலகிலுள்ள அறிவாளிகள் (விஞ்ஞானிகள் உட்பட) இரண்டாவது தரமாக தாம் அடிமையாக்கப் படுவதற்கு இடங்கொடுத்துவிட்டனர். வேறெந்தக் கலாச்சாரமான உதாரணங்களும், மாதிரிகளும் இல்லாமை இதற்கு ஒரு காரணமாகும். இதனால் "ஒரே ஓர் உண்மை மட்டுமே இருக்குமானால், கண்டுபிடிக்க உலகெங்குமுள்ள விஞ்ஞானிகளுக்கு அதே உண்மை மட்டுமே இருக்கும்" என்பது சுலோகமாகிவிட்டது.

சக்தி மிக்கவர்களும் ஆளும் இயல்புள்ளவர்களும் தங்கள் சொந்தச் சமுதாயங்களுக்குள்ளிருக்கும் சக்திகுறைந்த சமுதாயங்களையும், பெண்களைக் குழுக்களையும் கையாள்வதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் இந்த உபாயத்தையே எப்பொழுதும் உபயோகித்து வந்திருக்கிறார்கள். ஆளும் இயல்புள்ளவர்களின் பண்பு எப்பொழுதும் புறவயமானதென்றும், சுதந்திரப் பெறுமதியுடையதென்றும் அல்லது சர்வதேசத் தன்மை வாய்ந்ததென்றும் நாமகரணஞ் சூட்டப்படுகிறது.

தங்கள் சொந்த முறைகளும் வழிகளும் தாழ்ந்தவை அல்லது அதைவிட, தாங்களோ தாழ்ந்தவர்கள் என்று பலவீனர்களை நம்பவைப்பதிலே இதுவும் வெற்றிபெறுகிறது. விஞ்ஞானத்தின் மேற்கத்திய பாரம்பரியங்களை மறந்து அல்லாவிட்டாலும், கிட்டத்தட்ட அடிப்படையிலே இது செய்யப்பட்டுள்ளதென்பது சுவைய நூல்களால் அம்பலமாகியுள்ளதாகத் தோன்றுகிறது. மேற்கத்திய விஞ்ஞானத்தின் வளர்ச்சிக்கு ஐரோப்பாவைச் சேராத விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் செய்துள்ள பங்களிப்பு ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப்படவேயில்லையென்பதை இந்நூல்கள் எடுத்துக் காட்டுகின்றன. குணதிலகா தமது நூலின் முதற்பகுதியில் இதை மிக நன்றாகச் சுருக்கிக் கூறுகிறார். "விஞ்ஞானத்தினதும் தொழில்நுட்பவியலினதும் முன்னேற்றம் ஏகபரிமாணமுள்ள, ஐரோப்பாவை மையமாகக் கொண்டு நடைபெற்ற ஒரு பயணமல்ல. பண்டைக் கிரேக்கத்தின் வாயிலாகவும், மறுமலர்ச்சியின் வாயிலாகவும் நவீன விஞ்ஞானமாக இது உச்சத்துக்கு வந்ததன் விருத்திக்கு 17ம் நூற்றாண்டிலும் அதற்குப் பின்னரும் ஏற்பட்ட மகத்தான திருப்பங்களே ஆதாரமாகுமென அடிச்சுவடு பிடித்துப் போகையில், ஐரோப்பாவிலுள்ள நவீன விஞ்ஞானப் பாரம்பரியத்தின் விருத்திமீது பிரயோகமான மிகப்பெரிய குறுக்குச் செல்வாக்குகளை - இவற்றில் பல தென்னாசியாவைச் சேர்ந்தவை - நான் எடுத்துக் காட்டியிருக்கிறேன்" என்று குணதிலகா குறிப்பிடுகிறார்.

மேற்கில் பெருமளவுக்கு கலக்கத்தை உண்டாக்கிய விஞ்ஞான வலியுறுத்தல்களில் இவை, மற்றும் கலாசாரங்களில் எதிர்க்கப்படாதிருந்திருப்பது சாத்தியமென வற்புறுத்தவும் குணதிலகா விரும்புகிறார். உதாரணமாக, இந்தியாவில் பரிணாமக் கோட்பாடு அவ்வளவு பலமாக எதிர்க்கப்பட்டிருக்க மாட்டாதென அவர் நம்புகிறார். ஏனென்றால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளும் மனிதனும் சகலவகையான கருவிகளையும் எடுக்கிறார்கள். ஒரு கலாசாரம் இன்னொரு கலாசாரத்தைவிட உயர்ந்ததென அவர் கூறவில்லை. ஆனால், விஞ்ஞானங்களை நாம் கவனிக்க வேண்டுமென விரும்புகிறார்: ''இன்று விருத்தியடைந்துள்ள குறிப்பிட்ட விஞ்ஞானங்கள் குறிப்பிட்ட வகையான அறிவு சார், சமூக - பொருளாதார விருத்தியின் பெறுபேறாகும்.''

இக்கட்டுரையில் இவ்வாறு அடிக்கடி கூறப்படுகிறது; ஆனால் பெரும்பாலான விஞ்ஞானிகளால் உண்மையில் நம்பப்படுவதில்லை. ஐரோப்பியர்களுடன் நெருங்கிய தொடர்புள்ள விஞ்ஞானிகள் உடனிருந்து ஆராய்ச்சி செய்வார்களேயானால், சுயாதீன நரம்பு மண்டலம் என்னும் கருதுகோள் இவ்வளவு காலமாக இத்தகைய குறைந்தபட்சமான கோட்பாடாக இருந்திருக்காதென்பதை ஒருவர் சுலபமாகக் கற்பனை செய்யலாம். சர்வதேச தகவல் தொடர்புள்ள இந்த நாட்களிலே இந்த அணுகுமுறையின் ஆரம்பம் எப்படி இருக்கவேண்டுமென்றால், விஞ்ஞான ஆராய்ச்சி ஒவ்வொரு விஞ்ஞானியின் சொந்தக் கலாசார, பொருளாதார சூழல் அடிப்படையாகக் கொண்டிருந்தால், அது ஒவ்வொருவருக்கும் சிறந்த நலம் பயப்பதாயிருக்கும், ஏனென்றால், அது ஒரு மத்திய உதாரணத்தின் ஆதிக்கத்திலுள்ள வேலையை விட அதிகமாக ''உண்மை''க்கு இட்டுச் செல்லும்.

குணதிலகா விஞ்ஞான அறிவை ஒரு குழாய்க்கு அல்லது ''அதன் சொந்தப் பிரதேசத்தை ஆராய்ந்து பார்ப்பதும் வெளியேயுள்ள சமூக - பொருளாதார, கருத்தியல் சக்திகளால் தாக்கப்படுவதுமான ஒரு பாம்புக்கு ஒப்பிடுகிறார். இத்தகைய ஓர் 'அரவம்' அறிவின் ஒரு கவளத்தை முகர்ந்து பார்த்தபின், அதை ஒரு புறத்தில் விட்டுவிட்டு, இன்னொரு திசையில் பாய்ந்து விடுகிறது. உள்ளேயும் வெளியேயுமுள்ள சமூக சக்திகளாலும் மற்றும் சக்திகளாலும் உந்தப்படும் அறிவுக் குழாயின் அசைவுகள் இவ்விதம் இயக்கமாக எல்லையிடப்படுகின்றன. (பக்கம் 67) ''முன்னேறி வரும் ஒரு பாம்பின் சுவடுகளை அறிவாகக் குழாய்கள் என்று நன்றாகக் கொள்ளலாம். விஞ்ஞானத்தின் போக்கினை அவர்கள் அமைக்கிறார்கள். ஆனால், அதன் ஆராய்வுத் துறையையும் அவர்கள் கட்டுப்படுத்திவிடுகிறார்கள்.'' எனினும், நாங்கள் எங்களுடைய சொந்தக் குழாய்களைக் கண்டுபிடித்துக்கொள்ள வேண்டுமென அவர் விரும்புகிறார். 'குடியேற்ற நாட்டு ஆதிக்க முறைமைச் சாரத' இந்தக் குழாய்கள் கண்டுபிடிக்கப்படுவதில் அவர் விசேஷ அக்கறை கொண்டுள்ளதாகத் தோன்றுகிறது.

எங்களுடைய சொந்த அறிவுக் குழாய்களை நாம் விருத்தி செய்தாலன்றி மறுமலர்ச்சி மன எழுச்சிக்கு 'வெளி'யிலிருந்து வரும் நகலையே நாம் தொடர்ந்து சார்ந்திருப்போம். இதனுடைய பொருள் என்னவென்றால், ''ஒரு வளர்முக நாட்டிலுள்ள விஞ்ஞானப் போதினை பல சந்தர்ப்பங்களில் விஞ்ஞான அளவு கோல்கள் மீது அமைவதில்லை; ஆனால், சொந்த அரசியல் அளவு கோல்கள் மீதே அமைகின்றன.'' ஆதலால், மத்தியிலுள்ள விஞ்ஞான அறிவு விருத்தி செய்யும் ஆற்றல் கொண்ட அணியாகும். ஏனென்றால், அது சுற்றெல்லையில் ஒரு சிறுத்துக்கக் கூடிய, செயல் முறையில் உண்டாக்கப்படுகிறது. சார்ந்துள்ள அமைப்புகள் அனுகரணம் செய்த அறிவை அல்லது விஞ்ஞானமல்லாத அளவுகோல் ரீதி நியாயப்படுத்திய அறிவைத் தோற்றுவிக்கின்றன. ஆதலால் அறிவு முன்புபோல் மெய்ம்மையைச் சித்திரிப்பதில்லை. அத்துடன், அது இருப்புத் திறனை இழக்கவும் விடுகிறது.

மையத்திலிருந்து வரும் முறைகள் சுற்றெல்லையில் சொந்தமாகப் பதிக்கப்பட்டால், அவை பொருத்தச் செயற்படுவதில்லையென்ற அவதானிப்புரை எத்தனையோ தசாப்தங்களாகத் திரும்பத் திரும்பக் கூறப்பட்டுள்ளது. உதாரணமாக, முதலாளித்துவ ஜனநாயகம் அமெரிக்காவில் தனி நபருக்கு அதிகாரத்தைக் கொடுக்கலாம். ஆனால், வேற்றிடங்களிலுள்ள கோடிக்கணக்கான மக்கள் நெரிக்கும் அடிமைத்தனத்தில் அவதிப்படுகிறார்கள். ஏனென்றால், இத்தகைய முறைகளை மீண்டும் புகுத்தும் முயற்சிகள் சுற்றெல்லையிலுள்ள பல நாடுகளில் தொடர்ந்து பேரபத்தான தோல்விகளாகவே இருந்து வருகின்றன. அதே மாதிரியான சூத்திரங்கள் விஞ்ஞான முயற்சியில் எங்கும் செயற்பட முடியுமென்ற கருத்து பாரதூரமாக ஆட்சேபிக்கப்படவில்லை. மையத்தில் சிறப்பை உண்டாக்கும் அனுகூலமான விளைவுகளும், வித்துவப்போட்டியுமுள்ள அதே சூத்திரங்கள் மட்டும் சரியாக நடைமுறைப்படுத்தப்பட்டால் சுற்றெல்லையிலும் காரியத்தைச் சாதிக்குமென்று தயக்கமின்றி அனுமானிக்கப்படுகிறது. குணதிலகா எங்களைச் சிந்திக்கத் தூண்டியுள்ளார். இந்தியாவிலுள்ள விஞ்ஞானிகளுக்கு இப்பொழுதுள்ளதை விட நல்ல வேலை நிலைமைகளையும் நல்ல முகாமையையும் பெற்றுத்தர நாங்கள் தற்போது செய்யும் முயற்சிகள் உவப்பானதாகத் தோன்றுவதை மட்டுமே உண்டாக்கி, நாங்கள் எதிர்பார்க்கும் புதுவன காண்டல் திறனையும் புதுமை செய்யும் ஆற்றலையும் உண்டாக்காதிருப்பது முற்றிலும் சாத்தியமே. மையத்திலிருந்து தோன்றும் சில மாதிரிகள் சுற்றெல்லையில் நடைமுறைப்படுத்தப்படும்போது தங்கள் நிலைமையை எதிர்மாறாக மாற்றுகின்றனவென்ற ஒரு துணிபுவாதம் ஒருவேளை இருக்கக் கூடும்' இத்தகைய நிலைமைகளில் முயற்சிகளை மட்டும் அதிகரிப்பதால், விஷயங்களைச் செம்மையாக்காமல், பிரச்சினையை மோசமாக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லும் வீணிலே ஏற்படும். இப்படி நேருமென்பதை நாம் உணர வேண்டியதும் நான் ஜாக்கிரதையாக இருக்க வேண்டியதும் அவசியமாகும்.

இத்தகைய ஒரு நிலைமையில் போலி விஞ்ஞானிகள் சமூக மாற்றில் ஏறும் ஒரே நோக்கத்துக்காகத் தங்கள் கள்ளவேலையை நியாயப்படுத்துவது மிகச் சுலபமானது என குணதிலகா தெளிவாகக் கூறுகிறார். இந்தப் பருப்பாயினு மூன்றும் உலக நாடுகளிலுள்ள எங்கள் ?ன்மையான வாழ்க்கை அறுவடைந்தது நிச்சயமாக ஒத்திருக்கிறது. போலி விஞ்ஞானிகளின் தொகை ஆர்வமுள்ள விஞ்ஞானிகளின் தொகையைவிட எவ்வளவோ அதிகமாயுள்ளது. எனவே போலி விஞ்ஞானிகள் வசதியாகப் பரஸ்பரம் முதுகில வையும் ஒரு முறையைச் செயற்படுத்தலாம். இது தொடர்ச்சியான நிதியளிப்புப் பரிசுகளையும் பாராட்டுரைகளையும் உறுதிப்படுத்துகிறது. எந்த உண்மையான நுணுக்கமான மீளாய்வு நடைமுறைகளும் முடியடிக்க, போலி விஞ்ஞானிகள் தவறுத பொறிகளை வைக்கிறார்கள். இது இயங்கியல் சமபாதத்துக்கும் அதன் பயிற்சிய நிறுவனங்களுக்கும் ஏற்றதாயுள்ளது.

குணதிலகா ஒரு பரிகாரத்தைச் சுட்டிக்காட்ட முயல்கிறார். அதைச் செய்வதற்காக, அவர் தொழில் நுட்பவியலை ஒரு சமூக சந்ததிப் படைப்பாக எடுத்துக் காட்ட முயல்கிறார். மிகச் சுருக்கமாகச் சொல்வதாயின், "தொழில் நுட்பவியல் அதனைத் தோற்றுவித்த சமூக - பொருளாதார முறையின் - எனவே வரலாற்றின் வடுக்களை அதன் (தொழில் நுட்பவியல்) முறைக்குள்ளேயே கொண்டிருக்கிறது. அந்த அர்த்தத்தில், தொழில் நுட்பவியல் ஒரு வன்கலை (பொருள்கள்) அல்லது ஒரு மென்கலை (தகவல்) உருவில் உறைந்து வைக்கப்பட்ட வரலாறாகும்" என்று அவர் வலியுறுத்துகிறார். மேலும், 'நவீன' தொழில் நுட்பவியல் பந்தய விளையாட்டுக்குப் பிந்தி வந்தவர்கள் தொழில் நுட்பவியலைக் கிரகித்துக் கொள்வதை ஓர் உலகளாவிய முறை மேற்கொள்ளப்படுவதாகக் கருதலாகாது ஏனென்றால், தொழில் நுட்பவியல் ஒரு சமூக சந்ததிச் சுவடாக அதாவது சமூக உறவுகளை ஒரு சமுதாயத்திலிருந்து மற்றொரு சமுதாயத்துக்குக் கொண்டு செல்லும் ஒரு காவியாகச் செயலாற்றுகிறது.

உற்பத்தி முறையிலுள்ள சமூக உறவுகள் உடைமையின் முறைகளையும் நேரத்தையும் இயக்க ஆய்வுகளையும் முகாமை நடைமுறைகளையும் உபயோகிக்கும் செய்முறையில் மேற்கிலிருந்து சேராத பூமியனுக்கு இடம் மாறிப்போய் விட்டன என்று காட்ட அவர் முயல்கிறார். தொழில் நுட்பவியலை அணிமாற்றத் தன்மைக்கு அவர் தரும் இரண்டாவது உதாரணம், பசுமைப்புரட்சித் தொழில் நுட்பவியலின் இடமாற்றமாகும். இத்தப்பிரிவு இன்னும் மிக விவரமாக இருந்திருக்க வேண்டும்; நாணயத்தின் இருபக்கங்களையும் காட்டியிருக்க வேண்டும். அதாவது, ஒரு தொழில் நுட்பவியல் இடமாற்றப்படும்போது, ஆகக்கூடிய அளவுக்கும் ஆகக் குறைந்த அளவுக்கும் என்ன மாற்றங்கள் ஏற்படக்கூடும்? பசுமைப் புரட்சித் தொழில் நுட்பவியலைப் பற்றி குணதிலக ஆராயும்போது அதன் விளைவுகளும், பணக்காரர்கள் பெரும் பணக்காரர் ஆவதைப் பற்றிய பொதுக்குறிப்புகள், தொழில் நுட்பவியல் பெரிய விவசாயிகளுக்கு மட்டும் நன்மை செய்வது பற்றிய பொதுக் குறிப்புகள் போன்ற மிக வெளிவான பொதுக் குறிப்புகளை மீண்டும் எடுத்துரைப்பதைச் சார்ந்திருக்கின்றன. மேலும் சில கோட்டுப் படங்களையும் அட்டவணைகளையும் உபயோகித்திருந்தால், அவருடைய பகுப்பாய்வு குறிப்பாக வரலாற்றுப் பகுதிகளில் பயனடைந்திருக்கலாம். "ஜப்பானிய"க் கருத்துக்களையும் தொழில் நுட்பவியலின் இடமாற்றப் பிரச்சினைகளையும் விளக்கிய உதாரணங்களுடன் ஆராய்ந்திருக்க குணதிலகாவுக்கு சீனா, ஜப்பான், சோவியத் யூனியன் ஆகிய நாடுகளைப் பற்றிய போதிய தகவல்கள் இப்பொழுது கிடைக்கக் கூடியனவாயிருக்கின்றன.

மத்திய உதாரணத்திலிருந்து ஏதாவதொருவகையில் தொடர்பை அறுத்துக்கொள்ள நிச்சயமாக ஒரு தேவை இருந்து வருகிறது. ஆனால், இது சாத்தியமா? அது சாத்தியமானால், உடன் தகவல் கிடைக்கும் ஒரு யுகத்தில் அதன் செய்முறை என்னவாயிருக்கும்? தகவல்ரகத்தில் ஒருவர் மாற்றுக் கருத்தியலொன்றை எவ்வாறு நிறுவுகிறார் அல்லது செயற்படுத்துகிறார்? குணதிலகா இப்பிரச்சினைகளைப்பற்றி ஆராயவில்லை.

"மூன்றும் உலக விஞ்ஞானிகள் கருத்துகளுடன் விளையாட்டாக ஜாலம் செய்து கொண்டும், பௌதிக யதார்த்தத்தை மறைத்திருக்கும் இழைகளுக்கு பின்னுள்ள பௌதிக மெய்ம்மையின் தங்கள் சொந்தக் காட்சிகளைக் காண முயன்றுகொண்டும், கருதுகோள்களை உருவாக்குவதில் ஈடுபட வேண்டும்" என்று வலியுறுத்தி, குணதிலகா ஒரு நம்பிக்கைக் குறிப்புடன் முடிக்கிறார். அந்த எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் எங்களுக்கு நிச்சயமாகத் தேவை. ஆனால், என்னவகையான அறிவியல் முறைகள் இத்தனை நம்பிக்கைகளை மூட்டிவிட்டு, மூன்றும் உலக குழாய்களில் ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கும் விஞ்ஞானிகளைப் பேண முடியுமென்பதையும் நாம் அறிந்து கொள்வதாகியம். பல தோல்விகளுக்குப் பிறகு, "கண்டுபிடிப்புகளை" எவ்வாறு பூரணமாக்குவது என்பது பற்றி ஆலோசிக்க எங்களுக்கு அதிக குணதிலகாக்கள் தேவைப்படுகின்றனர்.

- நிமேஷ் ரோகன்

# நச்சுப்பாம்புகளும் பாம்புக்கடி சிகிச்சையும்

உலகத்திலேயே மிக வேறுபட்ட பாம்பினங்களின் சிலவற்றைக் கொண்டிருக்கும் பிரதேசம் இலங்கைக்கு நெடுங்காலமாகவே இருந்து வந்துள்ளது. எனினும், பாம்புக்கடிகளால் இலங்கையில் நேரும் உயிரிழப்புகளின் விகிதம் உலகின் மிக உயர்ந்த விகிதங்களில் ஒன்றாக இருப்பதாகவும் மிக அண்மையில் நடத்தப்பட்ட ஆராய்ச்சிகள் எடுத்துக் காட்டியுள்ளன. பாம்புக்கடி விஷம் பற்றிச் சமீபத்தில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில், பேராதனை மருத்துவ பீடத்தைச் சேர்ந்த பாம்பின நிபுணரான அன்ஸ்லெம் டீ. சில்வா பாம்புக்கடி விஷத்தினால் பதிவுசெய்யப்பட்ட மரணவிகிதங்கள் இப்பிராந்தியத்தின் பெரும்பாலான நாடுகளிலுள்ளதைவிட இலங்கையில் உயர்வாயிருப்பதாகத் தமது ஆராய்ச்சிகளிலிருந்து வெளிப்பட்டுள்ளதாகக் கூறினார். இக்கருத்தரங்கில் வெளியிடப்பட்ட ஆராய்ச்சிக் கருத்துக்களிலிருந்து சில முக்கியமான பிரச்சினைகள் எழுந்துள்ளன. அதாவது, இப்பொறுத்தலிலுள்ள அபாயங்களைப் பற்றிக் கிராமிய விவசாயிகளுக்கு அறிவூட்டப்பட்டால், இம் மரணங்களில் அதிக சதவிகிதத்தைத் தவிர்க்கலாம்; நச்சுப்பாம்புகளினால் தீண்டப்பட்டவர்கள், சில பரம்பரை பாம்புக்கடி வைத்தியர்கள் அளிக்கும் சிகிச்சை முழுப் பயனளிப்பதில்லை என்பதையும், தாங்கள் முறையான சிகிச்சையை நாடுவதால் பலரின் உயிர்களைக் காப்பாற்ற முடியும் என்பதையும் உணரவேண்டும்.

கருத்தரங்கில் கிளப்பப்பட்ட இன்னொரு சுவாரஸ்யமான பிரச்சினை என்னவென்றால், பாம்புக்கடிகளுக்குப் பரம்பரை மருத்துவரிடம் மட்டுமே பயனுள்ள பரிகாரம் உண்டென்று கிராமிய மக்கள் இன்னும் நம்புகிறார்களா என்பதுதான். பாம்புக்கடிகளினால் ஏற்பட்ட பல மரணங்களைத் தடுத்திருக்கமுடியும்; அரசாங்க ஆஸ்பத்திரிகளில் அளிக்கப்படும் சிகிச்சையில் மக்களுக்கு நம்பிக்கையில்லையென்று ஒரு முக்கியமான சுகாதார நிர்வாகி விமர்சித்தார். "பத்து வருடங்களாக வைத்தியத் தொழில் செய்துவரும் எனக்குத் தனியொரு பாம்புக்கடி நோயாளிக்குச் சிகிச்சையளிக்கும் சந்தர்ப்பம் கிட்டவில்லை" என்று அவர் கூறினார்.

பரம்பரை வைத்திய முறையில் உள்ள நம்பிக்கையே நவீன மருத்துவ முறையில் நம்பிக்கையில்லாமைக்குக் காரணமாயிருக்கும் பிரச்சினை இது. இதன்விளைவாக, சம்பவங்களின் போக்குச் சக்கரம் சுழன்றுகொண்டேயிருக்கிறது. கிராமப் பகுதிகளில் ஒருவரைச் சர்ப்பம் தீண்டிவிட்டால், அவர் பெரும்பாலும் ஒரு பரம்பரை வைத்தியரிடமே விரைவாகக் கொண்டு போகப்படுகிறார். கவலைக்கிடமான நிலைமைகளில் இந்த வைத்தியரின் சிகிச்சை பூரண பலனளிப்பதில்லை. அளவு மீறிக் காலந்தாழ்த்திய பின் விஷம் உயிராபத்தை ஏற்படுத்தும் கட்டத்தில், நோயாளி ஆஸ்பத்திரியொன்றுக்குக் கொண்டு செல்லப்படுகிறார். அங்கே அவருடைய உயிரைக் காப்பது சுலபமல்ல. இதன்விளைவாக, ஆஸ்பத்திரிகளில் பாம்பு விஷத்துக்கெதிராக அளிக்கப்படும் நவீன சிகிச்சை பயனற்றதென அதிகமான மக்கள் நம்பத்தொடங்கிவிடுகிறார்கள்; பாம்பு தீண்டியவரை விஞ்ஞான அறிவோ அல்லது மருத்துவ தேர்ச்சியோ இல்லாத பரம்பரை வைத்தியர்களே இந்த நம்பிக்கையற்ற நிலைக்குக் கொண்டுவந்தவர் என்பதை அவர்கள் நம்புவதில்லை. இந்நிலைமையே அவர்களை அதிகமாகப் பரம்பரை வைத்தியரிடம் தள்ளுகிறது; கடைசிக்கட்டத்தில், உயிர் பிழைப்பது அரிதெனத்தோன்றும்போது ஆஸ்பத்திரிக்கு வருகிறார்கள்.

நச்சுப்பாம்புகளின் உயிரியலையும் பழக்கங்களையும் பற்றிய அறிவு அவை தீண்டும் முறைகளை நிர்ணயிக்க உதவியுள்ளது. இதற்கு கட்டுவிரியன் குறிப்பான சான்றாக விளங்குகிறது. இது இரவில், பிரதானமாக வீட்டுக்குள்ளே அல்லது காவற் குடிசைக்குள்ளே தூங்குபவர்களையே வழக்கமாகத் தீண்டுகிறது.

சூழல் வாழிடங்களின் அடிப்படையில், இலங்கையிலே 4 வகையான பாம்புகள் இருக்கின்றன. இவை மண்ணிலும், தரைமீதும், மரத்திலும், நீரிலும் உள்ளன. மண்ணிலுள்ள பாம்புகளிடையே 31 இனங்கள் இருக்கின்றன; இவற்றில் 29 இனங்கள் இடப்பற்றுள்ளவை; அதாவது குறிப்பிட்ட பிரதேசங்களிலேயே வாழ்கின்றன. ஆனால், இவற்றில் 10 இனங்களின் வாழிடம் கேள்விக்குரியதாயுள்ளது. இவையாவும் சிறியவை; தீங்கற்றவை. நிலப்பாம்புகளிடையே 27 இனங்களும் உப இனங்களும் இருக்கின்றன. இவற்றில் 16 இனங்கள் பிரதேசப்பற்றுள்ளவை. இந்த நிலப் பாம்புகளில் ஐந்து கொடிய விஷமுள்ளவை; மூன்று மிதமான விஷமுள்ளவையாகவும் ஒன்று இலேசான விஷமுள்ளதாகவும் இருக்கின்றன. இலங்கையில் பதிவு செய்யப்பட்ட 13 மரப் பாம்பினங்களில் 4 மிதமான அல்லது கொடிய விஷமுள்ளவையாக உள்ளன. நீர்ப் பாம்புகளை பரந்த அடிப்படையில் நன்னீர்ப் பாம்புகள் என்றும் கடல் நீர்ப் பாம்புகள் என்றும் பிரிக்கலாம். கடல் பாம்புகளில் பல வகை உண்டு.

விஞ்ஞான ஆராய்ச்சிகளிலிருந்து இலங்கையில், விஷப் பாம்புகளில் 34 இனங்களும் உப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனங்களும் இருப்பதாகத் தெரியவந்துள்ளது. எனினும், இவற்றில் சில இனங்கள் மட்டுமே உயர் விகிதத்தில் இடத்துக்கிடம் சென்று நிலவுவதற்கும், மரணங்களை விளைவிப்பதற்கும் பொறுப்பாயிருக்கின்றன. இவை வருமாறு: விரியன் - பொலொங்கா; நாகம் - நயா; சாதாரண கட்டு விரியன் - தெல் கரவலா; கட்டுவிரியன் - மூது கரவலா; மொங்கிஸ் குழி மூக்குள்ள விரியன் - பொலொன் தெலிஸ; பச்சை நிற குழி விரியன் - பல பொலொங்கா; இரத்தச் செதில் விரியன் - வெலி பொலொங்கா.

ஆனால், இலங்கையில் நடைபெறும் பாம்புக்கடிகளைப்பற்றி நடத்தப்பட்ட ஆராய்ச்சிகளிலிருந்தும் சாட்சிகளிலிருந்தும் மரணங்களில் ஏறக்குறைய 97 சதவிகிதம் விரியன், நாகம், சாதாரண கட்டுவிரியன் ஆகியவற்றினாலேயே உண்டாக்கப்படுகின்றன. இலங்கையிலுள்ள சர்ப்பங்களை வகைப்படுத்தாவிட்டது, 51 சதவிகிதத்திலிருந்து 65 சதவிகிதம் வரையான சர்ப்பங்கள் விஷமற்றவையெனத் தெரிகிறது.

பாம்புகள் மனிதர்களுக்குப் பயன்படுவது குறித்து மக்கள் சரியாக நன்றாகத் தெரியாதிருப்பதால், இதுபற்றி அறிந்து கொள்வது முக்கியமாகும். உதாரணமாக, பாம்புகள் அழிக்கும் பிராணிகளான எலிகளைத் தின்று தீர்ப்பதால், இலங்கை போன்ற ஒரு விவசாயநாட்டுக்கு அவை ஓர் உபயோகமான சொத்தாக விளங்குகின்றன. பாம்புகளைக் கண்டபடி கொல்லக்கூடாது என்பதற்கு இது ஒரு காரணம். எனினும், பாம்புக்கடிகளில் பெரும்பாலானவை (85 சதவிகிதம்வரை) விவசாயப் பணிகள், அவை தொடர்பான நடவடிக்கைகளின்போதே நிகழ்ந்துள்ளனவென்று அவதானிக்கப்பட்டுள்ளது. இந்த அளவுகோலின் கீழ், வயல்களை உழுதல் செய்தல், அறுவடை செய்தல், களை பறித்தல், பூச்சிகொல்லிகளை விசிறல்போன்ற நேரடியான நடவடிக்கைகளும் வயல்களைக் காவல்காத்தல், நிலத்தைத் தயார்செய்வதற்காகப் புதர்களையும் காடுகளையும் வெட்டித் துப்புரவு செய்தல், வயல் நிலைமைகளைச் சோதித்துப்பார்த்தல் போன்ற மறைமுகமான நடவடிக்கைகளும் வருகின்றன.

பாம்புக்கடிக்கு ஆளானோரில் 69 சதவிகிதத்தினர் வயது 10 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்டவர்கள். உலர் வலயத்தில் (குறிப்பாக மகாவலிப் பிரதேசத்தில்) சமீப வருடங்களில் மக்களின் குடியேற்றம் அதிகரித்தது. அநேகமான காட்டு நிலங்கள் திறக்கப்படுவதன் காரணமாக இப்பகுதிகளில் பாம்புக் கடிகள் அதிகரித்துள்ளன. ஏராளமான ஆண்கள் பாம்புக்கடிக்கு ஆளாகும் அபாயத்தை எதிர்நோக்கினர். 1 பெண்ணுக்கு 2 ஆண்கள் வீதம் இந்த அபாயத்துக்குட்பட்டனர். கடந்த சில வருடங்களில் ஆண்பெண் வாரியாக இலங்கையின் தேறிய பாம்புக்கடி மரணங்களின் பதிவு விபரம் வருமாறு:

| வருடம் | ஆண் | பெண் |
|---|---|---|
| 1977 | 482 | 226 |
| 1978 | 601 | 261 |
| 1979 | 575 | 286 |
| 1980 | 480 | 254 |
| 1981 | 407 | 236 |

ஆதாரம்: பதிவாளர்-நாயகத்தின் அலுவலகம்.

இப்புள்ளிவிவரங்கள் இலங்கை சம்பந்தமான மரணங்களின் ஆபத்தான சதவிகிதத்தைக் காட்டுகின்றன. அதாவது ஜனத்தொகையில் ஒவ்வோர் இலட்சம் பேருக்கும் 3.9 சதவிகிதம். அநேகமாக இதுபோல் ஆபத்தான சதவிகிதமான 2.7ம், 2.1ம் முறையே பர்மா, இந்தியா ஆகிய நாடுகள் சம்பந்தமாகக் காட்டப்படுகின்றன. இந்தப் புள்ளிவிவரங்களாவும் 1980ம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட ஆசிய நாடுகள் சம்பந்தமானவை.

விவசாயிகளை விஷப் பாம்புக் கடிகளுக்கு ஆளாகும் அபாயத்திலிருந்து இடையறாது கட்டுப்படுத்த கம்தேவ பிரதேசத்தில் மக்களின் மனோபாவங்களில் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டிருந்தது. மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் பி. ரோசந்த தேவசிக கூறியுள்ளபடி, இப்போது நியில் பாம்புக்கடியால் பாதிக்கப்பட்டோர் ஆஸ்பத்திரிகளில் நவீன சிகிச்சையை, பொதுவாகப் பாம்புவிஷ முறிவு மருந்தைப் பெற முயன்றனர். இதன் பயனாக, பாம்புக்கடியால் மரண விகிதம் புறக்கணிக்கத் தக்கதாயிருந்ததை கீழ்க்கண்ட அட்டவணை எடுத்துக்காட்டுகிறது:

கம்தேவ ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்கு வந்த நோயாளரின் தொகை

| ஆண்டு | 1982 | 1984 | 1985 ஜூன் |
|---|---|---|---|
| நோயாளர் தொகை | 93 | 115 | 155 |
| மரணங்களின் தொகை | 0 | 8 | 5 |

மேற்கண்ட புள்ளிவிவரங்கள், அனுராதபுர மாவட்டத்தில் பாம்புக்கடிக்கு ஆளானோருக்கு ஆஸ்பத்திரிச் சிகிச்சையில் நம்பிக்கை அதிகரித்து வருவதைக் காட்டுகின்றன. இந்தப்போக்கு பாம்புவிஷ முறிவு ஆராய்ச்சி நிலையமொன்றை அமைக்கவும், வெவ்வேறு பாம்பு விஷங்களை இனங்கண்டு வகைப்படுத்தவும் நவீன சிகிச்சை முறைகளுக்கு வைத்தியர்களை ஏற்கவும் சுகாதார அதிகாரிகளுக்கு ஊக்கமூட்டியுள்ளது.

| நாடு | பாம்புக்கடிகளின் தொகை | மரணங்களின் தொகை | ஜனத்தொகையில் ஒவ்வொரு 1,00,000 பேருக்கும் மரணங்களின் சதவிகிதம் |
|---|---|---|---|
| ஜப்பான் | 519 | 26 | 0.52 |
| தாய்லாந்து | 5,985 | 302 | 0.86 |
| பர்மா | 6,508 | 783 | 2.7 |
| மலேசியா | 2,450 | 15 | 0.16 |
| இலங்கை | — | 743 | 3.9 |
| இந்தியா | — | 1,098 | 2.1 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல் அறுவடை வீழ்ச்சி - மகா 1985/86

புள்ளி விவர திணைக்களத்தின் மதிப்பீடுகளின் பிரகாரம் 1985/86 மகா பருவத்துக்கான நெல்லுற்பத்தி 16 லட்சத்து 90 ஆயிரம் மெட்ரிக் தொன்களாக (அல்லது 8.1 கோடி புசல்களாக) இருக்குமென எதிர்பார்க்கப்பட்டது. முன்னைய வருட மகா பருவத்தின் அறுவடையுடன் ஒப்பிடும்போது இம்முறை ஏற்பட்டுள்ள உற்பத்தி வீழ்ச்சி 3.6 சதவீதம் - 63,000 மெட்ரிக் தொன் - ஆகும். விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சு 1985/86 மகா பருவத்துக்கு விதித்திருந்த இலக்கினை விடவும் உற்பத்தி 11 சதவீதம் (அல்லது 19 லட்சம் மெட்ரிக் தொன்) குறைவாக இருந்தது. எனினும், இப்பருவ அறுவடை 1983/84 மகா பருவ (சமீப ஆண்டுகளில் மிகக்கூடிய உற்பத்தி மட்டம் பதிவு செய்யப்பட்ட பருவம்) அறுவடையை விடவும் கூடுதலாக இருந்தது. சராசரி விளைச்சல் கூடுதலாக இருந்தபோதிலும், பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்ட பரப்பளவிலும், அறுவடை செய்யப்பட்ட பரப்பளவிலும் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக உற்பத்தி குறைவாக இருந்தது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பொறுத்த வரையில் தொடர்ச்சியாக அதிகரித்து வரும் வன்செயல்கள் காரணமாக 1985/86 மகா பருவ உற்பத்தி மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டது. வட மாகாணத்திலுள்ள கிளிநொச்சி மாவட்டத்தில் நெல் உற்பத்தி 37.7 சதவீதத்தால் (15,000 மெட்ரிக் தொன்) வீழ்ச்சியுற்றது. கிழக்கு மாகாணத்திலுள்ள திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்ட உற்பத்தி வீழ்ச்சி முறையே 44% (41,000 மெ. தொ.) 11% (43,000 மெ. தொ.), 18% (30,000 மெ. தொ.) ஆகும். இவ் மாவட்டங்களில் இத்தகையதொரு பாரிய உற்பத்தி வீழ்ச்சி நிகழ்ந்திராவிடின் நாட்டின் மொத்த நெல்லுற்பத்தியில் எல்லை ரீதியிலான ஓர் அதிகரிப்பு பதியப்பட்டிருக்கும். முன்னைய மகா பருவத்தில் போலவே இம்முறையும் குருநாகல் மாவட்டமே மிகக்கூடிய உற்பத்தியை அளித்தது. இம் மாவட்டத்தில் 266,000 மெ. தொன் உற்பத்தி (இது நாட்டின் மொத்த உற்பத்தியின் 16 சதவீதம்) பதியப்பட்டது. இதனையடுத்து முறையே அனுராதபுரம், பொலன்னறுவை, அம்பாறை மாவட்டங்கள் 159,000, 143,000, 135,000 மெ. தொன் உற்பத்தியை வழங்கின. 1982/83 மகா பருவத்தில் 71,000 மெ. தொன் நெல்லை உற்பத்தி செய்த யாழ்ப்பாண மாவட்டம் 1985/86ல் மிகக் குறைந்த மட்டமான 13,000 மெ. தொன்களையே உற்பத்தி செய்தது.

இப்பருவத்தில் ஹெக்டயார் ஒன்றுக்கான சராசரி விளைச்சல் 3555 கி. கிராம் (68.5 புசல்) என மதிப்பிடப்பட்டுள்ளது. மகா 1983/84 பருவ உற்பத்தியுடன் ஒப்பிடும்போது இது 3.6 சதவீத அதிகரிப்பை காட்டுகிறது. எனினும், 1982/83 ல் பதிவு செய்யப்பட்ட மிக உச்ச மட்ட விளைச்சலை விடவும் 1985/86 சராசரி விளைச்சல் 3.8 சதவீதம் குறைவாகவே இருந்தது. உரப்பாவனை அதிகரித்ததும், ஓரளவுக்கு சாதகமான காலநிலை நிலவியதுமே இப்பருவத்தில் சராசரி விளைச்சல் அதிகரிப்புக்கு பங்களிப்புச் செய்த காரணிகளாகும். பிரதானமாக சிறிய நீர்ப்பாசன அமைப்புக்களின் கீழான பகுதிகளில் சராசரி விளைச்சல் 9.9 சதவீதத்தால் அதிகரித்தது. மானாவாரி பிரதேசங்களில் சராசரி விளைச்சல் 2.5 சதவீதம் வீழ்ச்சியுற்றதுடன் பாரிய நீர்ப்பாசனத் திட்டப்பகுதிகளில் அநேகமாக சராசரி விளைச்சல் முன்னைய பருவத்தின் மட்டத்தை ஒத்ததாக இருந்தது. மகாவலி நிலங்களும் பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்குட்பட்டிருக்கும் உடவளவை விவசாய மாவட்டத்தில் மிகக்கூடிய ஹெக்டயாருக்கான சராசரி விளைச்சல் (5093 கிலோ கிராம்) பதிவு செய்யப்பட்டது. முன்னைய மகா பருவத்தின்போது ஆகக் கூடிய சராசரி விளைச்சலைப் பெற்ற பொலன்னறுவை மாவட்டம் இப்பருவத்தின் போது 4876 கி. கிராம் உற்பத்தித்திறனைப் பெற்று இரண்டாவது இடத்தைப் பெற்றது. முன்னைய பருவத்தின் போலவே இம்முறையும் யாழ்ப்பாண மாவட்டமே மிகக்குறைவான சராசரி விளைச்சல் (1792 கி. கி.) மட்டத்தைப் பதிவு செய்தது.

1985/86 மகா பருவத்தில் 827,000 ஹெக்டயார் பரப்பில் அறுவடை மேற்கொள்ளப்பட்டது. முன்னைய பருவத்துடன் ஒப்பிடும்போது இது 5.7 சதவீத வீழ்ச்சியைக் காட்டுகிறது. பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலப்பரப்பு குறைவாக இருந்ததும், பயிர் அழிவு அதிகமாக இருந்ததுமே அறுவடையில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கான காரணங்களாகும். இப்பருவத்தில் 855,000 ஹெக்டயார் நிலத்தில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டதுடன் இது முன்னைய மகா போகத்துடன் ஒப்பிடும்போது 2.5 சதவீத வீழ்ச்சியைக் காட்டுகிறது.

இப்போகத்தில் 28,000 ஹெக்டயார் நிலப்பரப்பில் பயிர் அழிவு நடந்தது. இது விதைக்கப்பட்ட நிலப்பரப்பில் 5.1 சதவீதமாகும். பயிர் அழிவு 1983/84ல் 7 சதவீதமாகவும் 1984/85ல் 1.7 சதவீதமாகவும் இருந்தது. மானாவாரிப் பயிர்ச்செய்கைப் பகுதிகளிலேயே மிகக்கூடிய பயிர் அழிவு வீதம் (6.6 சதவீதம்) காணப்பட்டது.

தேசிய உரச் செயலகத்தின் புள்ளி விவரங்களின்படி நெல் துறையில் 1985/86 மகா பருவத்தில் 126,000 மெ. தொன் உரம் பாவிக்கப்பட்டுள்ளது. முன்னைய பருவத்தை விடவும் இது 6 சதவீதம் அதிகமாகும். நெற்பயிர்த்

(25 - ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

# இலங்கையின் அபிவிருத்தியில் விவசாயப் பதனிடல் கைத்தொழிலின் பங்கு

சி. கே. ஜீ. ரணசிங்க

இலங்கை சுதந்திரம் பெற்ற நேரத்தில், ஆசியாவிலேயே மிகவுயர்ந்த தலா வருமானத்தினைக் கொண்டிருந்தது. காலவோட்டத்தில் இப்பிரதேசத்திலுள்ள ஏனைய நாடுகள் இத்தொகையினைத் தாண்டிச் சென்றதுடன், ஏனைய குறை அபிவிருத்தி நாடுகளைவிட சிறிது உயர்வான நிலைக்கு, இலங்கையின் நிலையானது தள்ளப்பட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதாரமானது, விவசாயத்தில் பெரிதும் தங்கியுள்ளது என்பதும், பொருளாதாரமானது பன்முகப்படுத்தப்பட வேண்டியதாகின்றமை, தொடர்ந்து பல வருடங்களுக்கு விவசாயத்தில் தங்கியிருக்கும் தன்மை நீடிக்கும் என்பதும் தெரிந்த விடயங்களாகும். இலங்கையின் அபிவிருத்தியானது, விவசாயத்தினை விருத்தி செய்வதற்காக உபயோகப்படுத்தப்படும் மூலவளங்களில் பெரிதும் சார்ந்திருக்க வேண்டியுள்ளது. அவ்வமைக்காலமாக இருந்து வேண்டிய உள்ளக அமைப்புகள் அமைக்கப்பட்டு வருவதுடன், இதுவரை காலமும் செலவிடப்பட்ட முதலீட்டுத் தொகைக்கு, விவசாயத்திலூடாகவும், விவசாயச் செயன்முறைக் கைத்தொழில் ஊடாகவும் ஒரு பிரதிபலனை அளிக்கவேண்டிய சமயம் உருவாகிவிட்டது.

விவசாய பதப்படுத்தல் கைத்தொழிலின் அபிவிருத்தியானது, விவசாய அபிவிருத்தியினைப் பூர்த்தி செய்கின்ற ஒன்றாக இருப்பதால், எமது அபிவிருத்தி முயற்சியில் இது முக்கிய பங்கினை வகிக்கின்றது. உற்பத்திப் பொருட்களுக்கு இலாபகரமான விலைகளை உருவாக்குவதன் மூலமும், முன்னைய அறுவடையில் ஏற்பட்ட இழப்புகளைக் குறைப்பதன் மூலமும், தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் ஏற்ற இறக்கம் கொண்ட விவசாய வெளியீடுகளை நன்கைத்தே எடுப்பதன் மூலமும், இது விவசாய உற்பத்திக்கு ஆதரவாக முக்கிய பங்கினை வகிக்கிறது. இது, மேலும், இதனுடன் தொடர்புற்ற வேறுபல நடவடிக்கைகளை முன்னேற்றுவதுடன், கிராமிய பொருளாதாரத்தினை விருத்தி செய்து அதன் மூலம் நகரப் பகுதிகளுக்கு மக்கள் குடிபெயர்வதையும் குறைக்கின்றது.

சனத்தொகை வளர்ச்சி காரணமாக, நிலமளித்த விகிதம் படிப்படியாக வீழ்ச்சி அடைந்து வருவதனால், குறிப்பாக சிற்றுடைமைக் காணிகளில் குடியேறும் இரண்டாவது சந்ததியினருக்கு வேண்டிய தொழில் வாய்ப்புகளை, விவசாயத்தின் மூலம் மாத்திரம் வழங்க முடியாதிருக்கும். விவசாயப் பதப்படுத்தல் கைத்தொழிலும், அவை தொடர்பான நடவடிக்கைகளின் அபிவிருத்தியும் தொடர்ச்சியான முயற்சி இருக்குமாயின், விவசாயத்திற்கு அப்பாற்பட்ட நடவடிக்கைகளிலிருந்து ஊரக வேலைவாய்ப்பினை உருவாக்கமுடியும்.

விவசாய பதப்படுத்தல் கைத்தொழிலானது, உணவுப் பொருட்கள், உணவற்ற பொருட்கள் என்பவற்றின் இறக்குமதிப் பிரதியீட்டினூடாக வெளிநாட்டுச் செலாவணியைச் சேமிப்பதற்குக் கூட உதவுவதுடன், உயர்ந்த பெறுமதி சேர்க்கப்பட்ட பொருட்களின் ஏற்றுமதிகளினூடாக வெளிநாட்டுச் செலாவணி வருமானங்களை அதிகரிப்பதற்கும் உதவுகிறது.

ஏற்றுமதிக்கு முன்பாக, எமது முக்கிய விளைபொருட்கள் ஏதாவது ஒரு வகையில் விவசாயப் பதப்படுத்தலுக்கூடாக செயற்படுத்தப்படுவதால், விவசாயச் செயன்முறையானது, இலங்கைக்குப் புதிதான ஒன்று அல்ல. உள்நாட்டு நுகர்வுப் பொருட்களுக்கும், இக் கூற்று பொருந்தக் கூடியதாகும். வளியும், ஏற்றுமதிகளில் அநேகமானவை, மூதன்மையாக பதப்படுத்தப்பட்ட உற்பத்திகளின் அமைப்பினைக் கொண்டதாக இருக்கிறது. இது, 30 வருடங்களுக்கு முன்பு அல்லது 25 வருடங்களுக்கு முன்பு இருந்ததுபோன்றே இருந்திருக்கும். ஆனால் இன்று நாம் முன்னேற்றமடைந்தவர்களாக இருக்கிறோம். ஏனெனில் நாம் என்ன செய்கிறோம் என்பதும், எப்படிச் செய்கிறோம் என்பதும் நேர அமைப்பிலேறு இசைந்த ஒன்றாகவுள்ளது. இறக்குமதிப் பொருட்களான கார், இயந்திரங்கள், மின்சார, எலக்ரோனிக் உபகரணங்கள், மருந்துவகைகள் என்பவற்றின் உருவமைப்புகளும், செயற்பாடுகளும் ஒரு சீராக பழமையடைந்து கொண்டுவருவதையும், புதிய உற்பத்திகளும், எண்ணக் கருக்களும் எப்போதும் தோற்றுவிக்கப்படுவதையும் போன்றதிற்கு இது ஒப்பாகிறது. பிரிட்டிஷ் கைத்தொழிலின் வீழ்ச்சிக்குக் காரணம், மாற்றமடைகின்ற சந்தை நிலைமைகளுக்கேற்ப மாற்றமடையாமையும், நேரத்தினைச் சார்பாகக் கொண்ட மாற்றமடைகின்றதும் நிலைகளுக்கேற்ப மாற்றமடையாமையும் ஆகும்.

இலங்கையிலிருந்து ஏற்றுமதியாகும் பொருட்களின் கொள்ளவுத் திறனைப்பற்றி ஆராய்கையில், இது ஒவ்வொரு 12 வருடங்களிலும் அரைவாசிக்கு குறைந்துள்ளதை அவதானிக்க முடிகிறது. இதன் கருத்துயாதெனில், உதாரணமாக ஒரு மெட்ரிக் தொன் தும்பு நார் அல்லது மூதன்மையாக பதப்படுத்தப்பட்ட ஏனைய உற்பத்தி ஆகியவற்றை ஏற்றுமதி செய்யும்போது கிடைக்கும் வருமானமானது, ஒவ்வொரு 12 வருடங்களிலும் இறக்குமதி செய்யக்கூடிய கைத்தொழில் ரீதியான உற்பத்திப் பொருட்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரைவாசிக்குச் சமமாக இருந்தது. வேறு வார்த்தையில், இவ்வொரு 10 வருடங்களிலும் மேலதிக பெறுமதியைச் சேர்ப்பதன் மூலம் ஏற்றுமதியின் ஒவ்வொரு அலகு விலையும் இரட்டிப்பாக்கப்பட வேண்டும்; அல்லது எமது ஏற்றுமதி மொத்தக் கனவளவு இரட்டிப்பாகவேண்டும்; அல்லது இறக்குமதி மொத்தக் கனவளவு அரைவாசியாக வேண்டும். இப்படிச் செய்வதன் மூலமே இப்பிரதிகூலத்தை தவிர்த்துக்கொள்ள முடியும். இலங்கையைப் போன்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள், ஏற்றுமதி விலைகளையோ இறக்குமதி விலைகளையோ நிர்ணயிக்க வல்லமையற்றது என்றும், எனவே இவை எமது கட்டுப்பாட்டிற்கப்பாற்பட்ட காரணிகள் என்றும் கூறி என்னால் நாம் ஆறுதல் படுத்திக் கொள்கிறோம். எனினும், விவசாய உற்பத்திகளை மேலும் பதப்படுத்தி பெறுமதி சேர்ப்பதன் மூலம் ஏற்றுமதி விலைகளை அதிகரிக்க முடியும். பெறுமதியைச் சேர்ப்பதற்கு, எமக்கு இதுவரை தெரிந்த ஏனைய எல்லாத் தேவைகள், வசதிகள் என்பவற்றுடன் தொழில் நுட்பமும் தேவையாகவுள்ளது.

இலங்கைக்கு உகந்த விவசாயப் பதப்படுத்தல் கைத்தொழிலை வளர, பல தரப்பட்ட கருத்துரைகளிலிருந்து அநுமானிக்கப்பட வேண்டியுள்ளது. முதலாவதாக, எமது முக்கிய ஏற்றுமதிப் பயிர்களான தேயிலை, றப்பர், தெங்குப் பொருட்கள் என்பவற்றைக் கவனிக்குமிடத்து, இப்பொருட்களில் மேற்கொள்ளப்படும் ஏதாவது தொடர அபிவிருத்தி, அல்லது புதிய உற்பத்திகள் அல்லது செயன்முறைகள் மூலம் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தியானது, இவற்றின் பாரிய அளவு காரணமாக ஒரு கணிசமான ஏற்றுமதி வருவாயைக் கொண்டு வரும். இரண்டாவதாக, நெல்/அரிசி என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட விவசாயக் கைத்தொழிலின் தர அபிவிருத்தியிலும், தொகை அபிவிருத்தியிலும் வாய்ப்புகள் மிக அதிகமாகவிருப்பதால், இக்கைத்தொழிலானது அறுவடைக்காலத்தில் தேவையானவற்றை மாத்திரம் தயாரிக்காது, வீட்டுமனையாளரின் நேரத்தை மிதப்படுத்தும் வகையில் உடனடி உணவுப்பதார்த்தங்களைத் தயாரிக்கக்கூடிய இறுதிக் கட்டத்திற்கு வரவேண்டும். ஏற்றுமதி, இறக்குமதிப் பிரதியீட்டுப் பொருட்களின் அடிப்படையில் ஏனைய பயிர்களும் கூட நல்ல வாய்ப்புகளை அளிக்கின்றன. குறிப்பாக ஏற்றுமதிச் சந்தைக்கு ஊறுகாய்களையும், உணவு ஆலைகளுக்கும், பொதி பண்ணுவோருக்கும் உச்சமட்ட தராதரத் தேவைகளை அங்கீகரிக்கும் அதேவேளையில், பொருத்தமான தொழில் நுட்பமும், முகாமைத்துவமும் உள்நாட்டுச் சுற்றாடல் பற்றியும், ஏனைய அம்சங்களைப்பற்றியும் சிந்திக்க வேண்டியது அவசியமாகும்.

அரசாங்கமானது ஏற்றுமதி நோக்கினைக் கொண்டதும், விவசாய அடிப்படையைக் கொண்ட இறக்குமதிப் பிரதியீடுகளைக் கொண்டதுமான கைத்தொழில்களை விருத்தி செய்வதற்கு பல வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. முதலீட்டு நிவாரணம், இலாபவரி விடுதலை, மொத்த விற்பனை வரிவிலக்கு ஆகியன முதலீட்டாளர்களுக்கு கிடைக்கக்கூடியதாகவுள்ளது. கூட்டு முயற்சியோட்டம், வெளிநாட்டு முதலீடு, தொழில் நுட்ப உட்பாய்ச்சல் போன்றவைக்கு ஊக்கம் அளிக்கப்படுகிறது. திட்ட முயற்சிகளுக்கு வங்கி நிதிவசதிகள் அளிக்கப்படுகின்றன. இத்தகைய முயற்சிகளாவும் சுதேச தொழில் நுட்ப ஆற்றல், முகாமைத்துவ ஆற்றல் என்பவற்றின் அபிவிருத்தியுடன் இணைக்கப்பட வேண்டியது அவசியமாகும். சில கைத்தொழில்களுக்கு அவற்றின் சுதேச தொழில்நுட்பம் விருத்தியடையப்பட வேண்டியதோடு, ஏனைய சில கைத்தொழில்களுக்கு பரீட்சிக்கப்பட்ட பொருத்தமான வெளிநாட்டுத் தொழில் நுட்பங்கள் பாவிக்கப்படலாம். விவசாய பதப்படுத்தல் கைத்தொழிலின் அபிவிருத்தியில் தொழில் நுட்பங்களின் மாற்றங்கள், முகாமைத்துவம் என்பனவற்றின் பங்குபற்றி இதுவரை அழுத்திக் கூறப்படவில்லை. தற்சமயம், விவசாயப் பதப்படுத்தலுக்கும், அதனோடு தொடர்பான விடயங்களுக்கும் பொறுப்பாயுள்ள உயர்கல்வி பெற்ற, பயிற்றப்பட்ட உத்தியோகத்தர்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது.

இதுவரையிலும் என்னால் இங்கு குறிப்பிடப்பட்டவை இலகுவில் கூறக் கூடியவையாயினும், அவற்றை எய்துவது இலகுவானதல்ல. அபிவிருத்தியில் ஒரு கணிசமான மட்டத்தினை அடைய வேண்டுமாயின் எமக்கு புதிய முயற்சிகள் அவசியமாக இருப்பதுடன், எமது தேவைகளுக்கு ஒத்துப்போகக் கூடியவகையில் மாற்றத்தினை ஏற்றுக்கொள்ளும் விருப்பும் இருக்கவேண்டும். இது தொடர்பாக சில குறிப்புகளை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

விவசாய பதப்படுத்தல் கைத் தொழிலின் அபிவிருத்திக்குப் பின்வருவன தேவையாகவுள்ளது.

(1) குறிப்பாக ஏற்றுமதிச் சந்தைமுறைக்கேற்ற சந்தைப் படுத்தக் கூடிய அணுகுமுறை.

(2) உற்பத்தியின் தரம், பொதிபண்ணுதல் என்பவற்றோடு ஒத்துப் போகக்கூடிய கைத் தொழில் தொழில் நுட்பத்தினைத் தெரிதல்.

(3) கூட்டு முயற்சிகள் மூலம் ஏற்படுத்தக் கூடுமாயின், பொருத்தமான தொழில் நுட்பத்தினை இறக்குமதி செய்தல்.

(4) குறிப்பாக சிறிய, நடுத்தர அளவுக் கைத்தொழிலுக்கு வேண்டிய சுதேச தொழில் நுட்பத்தினை அவற்றின் கொள்ளளவு, இயந்திரப்படுத்தல் என்பவற்றைப் பொறுத்து ஆராய்ச்சி செய்தலும், விருத்தி செய்தலும். இந்நோக்கத்திற்கு கீழ் குறிப்பிடப்படுபவை பொருத்தமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4.1 (அ) தொழில்நுட்ப ஏற்பாடுகளுக்கும், வர்த்தக வழிமுறைகளுக்குமிடையிலுள்ள இடைவெளியினைக் குறைத்து, அதன் மூலம் ஆராய்ச்சிச் செலவுகளையும், நேரங்களையும் மீதப்படுத்தக்கூடியவகையில், அரச ஆராய்ச்சி நிறுவனங்கள், தனியார் துறையிலுள்ள கைத்தொழில் மிக அநுபவம் கொண்ட ஆராய்ச்சியாளர்களைப் பயன்படுத்த வேண்டும்.

4.2 (ஆ) தேசிய ரீதியிலான அல்லது ஒரு குறிப்பிட்ட கைத்தொழிலின் பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடியவகையில் எம். எஸ். ஸி. ஆராய்ச்சித் திட்டங்களும், பி. எச். டி. ஆராய்ச்சித் திட்டங்களும் முடுக்கிவிடப்படக்கூடிய வகையில் பல்கலைக் கழகங்களை உபயோகிக்க வேண்டும். விஞ்ஞான பீடம், இயந்திரவியல் பீடம், விவசாய பீடம், வைத்திய பீடம் ஆகியவை இந்த நோக்கத்திற்காக உபயோகிக்கப்படலாம். இங்கும் கைத்தொழில் செயன்முறைகளில் நன்கு அநுபவம் கொண்ட ஆராய்ச்சியாளர்கள் மிக முக்கியமானதாகும்.

4.3 (இ) கைத்தொழிற் செயன்முறை அநுபவங்களைக் கொண்ட ஆராய்ச்சியாளர்கள் மூலம் பல்வேறு தனியார் கைத்தொழில்களிலும் உள்ள ஆராய்ச்சிகளையும், அபிவிருத்திகளையும் மேற்கொள்ளக் கூடியவகையில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். இதற்கு நிதி வசதிகள் அவசியமானதாகும்.

4.4 (ஈ) கைத்தொழிலின் தொழில்நுட்பம், உற்பத்தித் திறன், முகாமைத்துவம் என்பவற்றின் அபிவிருத்திக்கு வேண்டிய விளக்கத் தேவைகளை அளிப்பதன் மூலம் கைத்தொழில் அநுபவம் கொண்டோர்களைச் சேர்த்துக்கொள்ளல். இலங்கையில் கைத்தொழிலின் விருத்தியை முன்னேற்றுவதிலும், ஆலோசனை வழங்குவதிலும் ஈடுபடும் அங்கங்கள், மிகவும் செயற்திறன் அநுபவம் கொண்ட அல்லது அப் பண்பை அற்ற அறிஞர்களாகவே இருக்கின்றனர் என்ற பொதுவான நிலைமையினை வெளிக் காட்டுவதற்காகவே இது தெரிவிக்கப்படுகிறது.

(5) பின்வருவனவற்றை விவசாயச் செயன்முறையினை வலுக்கப் படுத்துவதற்கு, விவசாயத் துறையின் விருத்தி செய்தல்.

(5.1) இயலக்கூடிய இடங்களில், தெங்கு தோட்ட, உப உணவுப் பயிர்களை, உயர் உற்பத்தித் திறன் கொண்ட வர்த்தகப் பயிர்ச் செய்கையாக மாற்றுதல்.

(5.2) குறிப்பாக உலர் வலய, இடைநிலை வலயப் பிரதேசங்களில், இயற்கையான மழையை நம்பியிருக்கும் பயிர்களை, நீர்ப்பாசனச் செய்முறைக்கு மாற்றுதல்.

(5.3) வெளிநாடுகளிலுள்ள நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட விவசாயச் செயன்முறைக் கைத்தொழில்களிலுள்ளது போல் (தேயிலை, றப்பர், தெங்குப் பொருள் ஆகியவற்றைப் போன்று), திட்டமிட்டுச் செயன்முறைப்படுத்தும் நிலையங்கள், மத்திய தோட்டங்கள் போன்றவற்றை அமைப்பதன் மூலம் பிரதேச ரீதியிலான அம்சங்களை முன்னேற்றுதல். எவ்விடத்தும் பல நாடப்பட்ட பயிர்களை பயிரிடுவதற்கான விவசாய பூமிகளை விஸ்தரிக்கக் கூடிய தன்மைகள் உள்ளன. ஆனால் இவை நாட்டின் பல இடங்களிலும் பரந்து இருக்கின்றன. இவற்றைச் சேகரிப்பதிலும், களஞ்சியப்படுத்துவதிலும், செயன்முறைத் தலங்களுக்கு இடமாற்றுவதிலும் கஷ்டங்கள் உண்டு.

5.4 செயன்முறையினை இலாபகரமாக்கக்கூடியதும், உச்ச விளைவினைத் தரக்கூடியதும், செயன்முறைகளை இலகுவாக்கக் கூடியதுமான விசேட வர்க்கங்களை வளர்த்தல்.

இறுதியாக, உற்பத்தித் திறன் கொண்டதும், செல்வத்தினை விருத்தியாக்குவதுமான விவசாயச் செயன்முறைக் கைத்தொழில் போன்ற துறைகளில் செயலாற்றுவதற்கு எனது சகோதர பொறியியலாளர்கள் முன்வரவேண்டும் என நான் விரும்புகிறேன். ஏனெனில் நான் இங்கு கூறியிருக்கும் இயல்புடைமைகளை அடைவதற்கு தராதரமுள்ள பொறியியலாளர்களே தேவையாகவுள்ளனர். கைத்தொழில், தொழில்நுட்பம் என்பவற்றைப் பொறுத்து, இலங்கையானது இன்னும் குழந்தைப் பருவத்திலேயே இருப்பதால், பொறியலாளர்கள் சேவைத் துறைகளிலும், அபிவிருத்தி பன்முக நடவடிக்கைகளிலுமே பயிற்றப்பட்டவர்களாக இருப்பதோடு, மிதியானவற்றை ஏனையோர் செயலாற்றுவதற்கு விடப்படுகிறது. எனவே தங்களின் பயிற்சி நடவடிக்கைகள் மூலம் இலங்கைக்கு செல்வத்தினைப் பெருக்கக் கூடிய வகையில் பொறியியலாளர் இப் பன்முக நடவடிக்கைகளில் தம்மை ஈடுபடுத்தி, முகாமைத்துவத்தில் தீர்மானங்களை மேற்கொள்ளவும், நாட்டின் அபிவிருத்திமுறையில் செயலில் தீவிரமான வழிகாட்டவும் சமயம் ஏற்பட்டுவிட்டது.

(28-ம் பக்கத் தொடர்ச்சி)

துறையில் ஹெக்டயார் ஒன்றுக்கு 227 கி. கிராம் உரம் பாவிக்கப்பட்டுள்ளது. இது முன்னைய பருவத்தின் உரப்பாவனையை விடவும் 8 சதவீதம் அதிகமாகும். உர வகைகளின் விலைகள் 1983 மேயிலிருந்து ஸ்திரமாக இருந்து வருவதே உரப்பாவனை அதிகரிப்புக்கான காரணமாகும்.

நெற் பயிர்த்துறைக்கான நிறுவனரீதியான கொடுகடனிலும் வீழ்ச்சி காணப்பட்டது. குறிப்பாக, பிரதான நிறுவனக் கடன் மூலம் ஒன்றான மக்கள் வங்கி 1984/85 மகா போகத்துக்கு 3 கோடியே 63 லட்சம் ரூபா கடனை வழங்கியிருந்த போதிலும், 1985/86 மகா போகத்துக்கு 3 கோடியே 37 லட்சம் ரூபா கடனையே வழங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச நிதியளிப்பும் மூன்றாம் உலகமும்

ஜில்லஸ் கூட்டர்

பொருளாதார ஒத்துழைப்புக்கும் அபிவிருத்திக்குமான ஸ்தாபனம் வெளியிட்டுள்ள புள்ளி விபரங்களின்படி, 1970ம் ஆண்டிலிருந்து 1977ம் ஆண்டு வரையும், 1977ம் ஆண்டிலிருந்து 1984ம் ஆண்டுவரையுமான இரு காலப் பகுதிகளில் மூன்றாம் உலக நாடுகளின் மொத்த வெளிநாட்டுக் கடன் முதலாவது காலப்பகுதியில் 7,200 கோடி அமெரிக்க டொலர்களிலிருந்து 34,400 கோடி அமெரிக்க டொலர்களுக்கும் இரண்டாவது காலப்பகுதியின் முடிவில் 81,000 கோடி அமெரிக்க டொலர்களுக்கும் அதிகரித்தது;

இத்தசாப்தம் முடிவடையும் போது மூன்றாம் உலக நாடுகளில் சில கொடுக்கவேண்டிய படுகடனின் இலக்கங்கள் முன்னெப்போதும் காணாத உச்சங்களை அடையும். வங்கிகள் வழக்கமாக அவற்றின் முதலீட்டுப் பட்டியல்களின் விபரங்களை வெளியிடுவதில்லை. எனினும், வாஷிங்டனிலுள்ள சர்வதேச பொருளியல் கழகம் 1983ம் ஆண்டில் நடத்திய பரிசீலனையொன்றிலிருந்து, இலத்தீன் அமெரிக்காவிலுள்ள ஐந்து நாடுகளில் (ஆர்ஜென்டினா, மெக்ஸிகோ, பிரேஸில், வெனிசுவேலா, சிலி) அமெரிக்காவிலுள்ள (சுமார் 14,500 வங்கிகளில்) 13 மிகப்பெரிய வங்கிகள் வர்த்தக - கைத்தொழில் கடன்கள் வழங்குவதில் சம்பந்தப்பட்டுள்ளதன் அளவு தெரியவருகிறது:

அந்தப் பதின்மூன்று வங்கிகளின் கூட்டுமொத்த மூலதனத்தில் சதவிகிதமாகக் கூறுவதெனில், சிட்டிகோர்ப் வங்கி அதன் பங்குகளின் பெறுமதியில் 72.6 சதவிகிதம் வரையுள்ள கடன்களை பிரேஸில் நாட்டுக்கு வழங்கியுள்ளது. மொத்தமாக இந்த நாடுகளின் விஷயத்தில் இந்தச் சதவிகிதம் 174 சதவிகிதத்துக்கு உயருகிறது. மற்றும் முக்கிய அமெரிக்க வர்த்தக வங்கிகளுக்கான புள்ளிவிவரங்கள்: அமெரிக்க வங்கி (பாங்க் ஒஃப் அமெரிக்கா) 168 சதவிகிதம்; சேஸ் மன்ஹற்றன் வங்கி 154 சதவிகிதம்; மோர்கன் காரன்டி வங்கி 140 சதவிகிதம்; மனுபெக்சரர்ஸ் ஹனோவர் வங்கி 262 சதவிகிதம்; கெமிகல் வங்கி 170 சதவிகிதம்; கொன்டினென்டல் இல்லினொய்ஸ் வங்கி 107 சதவிகிதம்; பாங்கர்ஸ் டிரஸ்ட் 141 சதவிகிதம்; பஸ்ட் நெஷனல் சிகாகோ 134 சதவிகிதம்; செக்கியூரிட்டி பசிபிக் 83 சதவிகிதம்; வெல்ஸ் பார்கோ 126 சதவிகிதம்; குரோக்கர் நெஷனல் 196 சதவிகிதம்; பஸ்ட் இன்டர்ஸ்டேட் 136 சதவிகிதம்.

இன்னொரு முக்கியமான அசாதாரண சம்பவமும் உண்டு குறிப்பிடத்தக்கது: 1982ம் ஆண்டிலிருந்து 1984ம் ஆண்டு வரை அமெரிக்க வர்த்தக வங்கிகள் வழங்கியுள்ள "செயற்படாத" கடன்கள் 30 சதவிகிதத்துக்கு மேல் அதிகரித்துள்ளன - இந்த அதிகரிப்பு ஆண்டொன்றுக்கு 30 சதவிகிதத்துக்கு மேற்பட்டதாகும். "செயற்படாத" கடன்கள் என்றால், படுகடனாளிகள் திருப்பிச் செலுத்தவேண்டிய திகதிக்குப்பின் 90 நாட்களுக்குள் திருப்பிக் கொடுக்காத மூலதனக் கடன்களையும் வட்டியையும் குறிக்கும்.

## புதிய கடன்கள்

1984ம் வருட வசந்த காலத்தில் ஆர்ஜென்டினாவின் வட்டி நிலுவைகள் தொடர்பாக அந்நாட்டுக்கும் அதன் கொடுகடனாளிகளுக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகள், மூன்றாம் உலக நாடுகளில் படுகடன்களுக்கு மீண்டும் ஒரு கால அட்டவணையைத் தயாரிப்பதில் ஒரு புதிய கட்டத்தைக் குறிக்கின்றன. இதன்படி, செலுத்தவேண்டிய வட்டியில் ஒரு பகுதி செலுத்தப்படுவதற்காக, ஒரு புதிய கடனை வழங்க அமெரிக்க வர்த்தக வங்கிகள் ஒப்புக்கொண்டன. இது, 1984ம் வருடத்தின் மூன்றாம், நாலாம் காலாண்டுகளுக்குரிய அவ்வங்கிகளின் இலாபத் தொகைகள் ஒரு செங்குத்தான வீழ்ச்சியைக் காட்டுவதையும், அத்துடன் அவை வழங்கிய கடன்களில் ஒரு பகுதி "செயற்படாத கடன்களாக" இருக்கின்றன என்று அவை அறிவிக்கவேண்டிய கட்டாயத்தையும் தவிர்க்க அவற்றிற்கு உதவின. அதேசமயத்தில், கனத்த படுகடன் பளுவுள்ள நான்கு லத்தீன் அமெரிக்க நாடுகள் - மெக்ஸிகோ, பிரேஸில், வெனிசுவேலா, கொலம்பியா - வட்டிக்காகக் கொடுபடவேண்டிய தொகையின் இன்னொரு பகுதியை ஆர்ஜென்டினாவுக்குக் கடன் கொடுத்தன. இப்படிச் செய்வதில் அந்நாடுகள் எந்தப் பாரதூரமான அபாயத்தையும் பொறுப்பேற்கவில்லை. ஏனெனில், ஆர்ஜென்டினாவுக்கும் சர்வதேச நாணய நிதியத்துக்குமிடையே ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டதும் அத்தொகையை அந்நாடுகளுக்குக் கொடுக்க அமெரிக்கா உறுதி கூறியது.

மேலும், அமெரிக்க வர்த்தக வங்கிகளின் பேரேட்டுக் கணக்குப் பக்கத்தில் நடுத்தரக் கடன்கள் நீண்டகாலக் கடன்களாக மாறிப் போயிருக்கின்றன. நாணய நிதியிடமிருந்து வாங்கிய கடன்கள் சம்பந்தமாகத் திருப்பிச் செலுத்தவேண்டிய திகதிகளைத் தாமதிப்பதனாலேயே இவ்வாறு செய்யப்படுகிறது. அமெரிக்க வர்த்தக வங்கிகள் சர்வதேச நிதியளிப்பில் சம்பந்தப்பட்டுள்ள அவற்றின் வெளிக்கணக்கு நிலைகளின் சார்பில் நீண்ட காலக் கட்டுப்பாடுகளை வழங்கியுள்ளன. இதன் விளைவாக, சர்வதேச செயற்பாடுகளில் வங்கிகளுடைய இடைவிளைவு நிதியளிப்பு அபாயகரமானதென்று அதிகரித்த அள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் கருதப்படுகிறது. ஏனென்றால், அமெரிக்க வர்த்தக வங்கிகள் தற்சமயம் அமைப்பின் கூறுகளில் ஒரு கடும் ஏற்றத்தாழ்வைக் காட்டுகின்றன. இதை அவை எவ்வளவு விரைவில் சாத்தியமோ அவ்வளவு விரைவில் திருத்தவேண்டும்.

மேலும், அமெரிக்க வர்த்தக வங்கிகள் நடுத்தரகால நிதிகளை அல்லது வைப்புகளைத் தேடும் முயற்சி ஐரோப்பிய டொலர் சந்தைகளிலும், ஐரோப்பிய யென் சந்தைகளிலும் நிலவும் நடுத்தர கால வட்டி விகிதங்கள்மீது தற்போதிருந்து வரும் நெருக்குதல்களை அதிகரிக்கின்றது. வங்கிகளின் தற்போதைய போக்கைக் கவனிக்குமிடத்து, அதிக நீண்ட காலத்திலோ அல்லது குறைந்த நீண்ட காலத்திலோ பணவீக்கம், அமெரிக்க வர்த்தக வங்கிகளின் ஒதுக்கீடுகளில் - நாளடைவில் மூன்றாம் உலக நாடுகளுடைய படுகடன்களின் முக்கியத்துவத்தைக் குறைத்துவிடுமென்று நம்புவது தவறாகும்.

இத்தகைய ஒரு நிலைமையில், முக்கிய அமெரிக்க வர்த்தக வங்கிகளின் பங்குகள் 1982ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலும் 1984ம் வருடத்திலும் நியூயார்க்கில் ஏற்பட்ட பங்குச் சந்தையின் ஏற்றத்துக்கு ஈடாகச் செயற்படாததில் ஆச்சரியமொன்றுமில்லை. அமெரிக்க வர்த்தக வங்கிகளின் இலாபத்தன்மை இப்பொழுது மிகப் பொதுவாகச் சந்தேகிக்கப்படுகிறது. இதற்கு மூன்றாம் உலக நாடுகளுக்கு வழங்கப்பட்ட கடன்களின் கழுத்தை நெரிக்கும் ஆபத்து மட்டும் காரணமல்ல. ஏனென்றால், அமெரிக்க வர்த்தக வங்கிகள் பெற்றோலியம் துறையிலும் விவசாயத் துறையிலும் கூட அறவிட முடியாத கடன்களை எதிர்நோக்கியுள்ளன.

மெக்ஸிகோ வீழ்ச்சியுற்றதும்

1982ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் மெக்ஸிகோ அதன் நிதிக்கடப்பாடுகளை நிறைவேற்ற முடியாத நிலையிலிருந்தபோது, சர்வதேச வங்கித் தொழில் முறைக்கும் குறிப்பாக அமெரிக்க வர்த்தக வங்கிகளுக்கும் அபாயமயமான உருவில் பயமுறுத்தல் உருவாயிற்று. மெக்ஸிகோ கொடுப்பனவுகளை இடைநிறுத்தியுள்ளதென அறிவித்திருந்தால், அது செஸ் மன்ஹட்டன் வங்கியும் சிட்டி வங்கியும் மற்றும் பல வங்கிகளும் உண்மையிலேயே வங்குரோத்தாகிவிட்டனவென்று அறிவிப்பதற்குச் சமமாயிருந்திருக்கும். இதில் இன்னும் அதிக விளைவுகள் தொக்கியிருந்தன. கொன்டினென்டல் இலினோய்ஸ் வங்கி வங்குரோத்து நிலையைத் தவிர்ப்பதற்குப் பின்னர், கடந்த சில மாதங்களையே அமெரிக்க சமஷ்டி ரிசர்வ் வங்கி கடன்களுக்குப் பொறுப்பேற்கும் ஒருவகை உத்தரவாதியாகச் செயலாற்றி வந்துள்ளது; இல்லாமல், ஆட்டங்கண்ட கடன்களுக்கு ஒரு கண்ணியத் தன்மையை வழங்கியதுடன், கொடுகடன்களை வழங்குமாறு வங்கிகளை வற்புறுத்தியும் வந்தது.

1984ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் நடைபெற்ற சர்வதேச நாணய நிதியத்தினதும் உலக வங்கியினதும் 39வது பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களில் ஒரு சிறு தொகையினரே முக்கிய அமெரிக்க வர்த்தக வங்கிகளின் நிலைமை காணும் போக்கைக் குறித்துக் கவலைப்படாதிருந்தனர். ஏனென்றால், அவர்களுடைய கொடுகடன் நிலுவைகள் அமெரிக்க நாணயக் கொள்கையினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுவருகின்றன.

அக்கூட்டத்தில் பிரசன்னமாயிருந்த நிதி நிபுணர்களின் கருத்துப்படி, 1970களின் தசாப்தத்தின் அபிவிருத்திக்காகச் சர்வதேச நிதியமைப்பைத் தொடர்ந்து செய்ததில் ஏற்பட்ட முறிவு குறிப்பிடத்தக்கதாயிருந்தது. சர்வதேச பெற்றோ டொலர் கொடுகடன்களும், நெருக்கடியிலிருந்த பல்தேசிய நிறுவனங்கள் வெளிநாட்டுச் சந்தைகளைத் தேடிய முயற்சிகளும் மூன்றாம் உலக நாடுகளுக்கு வங்கிக்கடன்கள் பெருமளவு அதிகரிப்பதற்கும், மூன்றாம் உலக நாடுகளில் படுகடன்கள் தனியார் மயமாக்கப்படுவதற்கும் அடிகோலியுள்ளன.

1980களின் தொடக்கத்துக்குப் பின்னர், மூன்றாம் உலகுக்குப் பாய்ந்த தனியார் பணத்தில் ஒரு வீழ்ச்சி ஏற்பட்டது. 1982ம் ஆண்டில் வட்டிவீதங்கள் உயர்ந்து, வெளிநாட்டு வர்த்தகம் தேக்கமுற்றபோது பெற்றோ டொலர்கள் கிட்டத்தட்ட மறைந்துவிட்டன. இத்தகைய காரணிகளும், மூன்றாம் உலக நாடுகளில் கடன்தீர்ப்பு முடியா நிலையின் அதிகரிப்பும் அந்நாடுகளுக்கெதிராக வர்த்தக மாற்றுவீதங்களின் வீச்சும் (மிகப் பெரும்பாலான கனிப்பொருள்கள், விவசாயப் பொருள்கள், வன உற்பத்திப் பொருள்கள் ஆகியவற்றின் கொள்வனவுச் சந்தையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி) ஆகிய எல்லாம் மூன்றாம் உலக நாடுகளுக்குத் தனியார் பண மாற்றுகளை மந்தப்படுத்திவிட்டன.

இவ்விதமாக 1970ம் ஆண்டிலிருந்து 1983ம் ஆண்டுவரை எல்லாவற்றுக்கும் மேல் புதிய கைத்தொழில் - பெற்றோலியம் உற்பத்தி நாடுகளே, முக்கியமாக வருமான அடிப்படையில் இடைநடுவிலுள்ள நாடுகளே சர்வதேச வங்கிகளிடமிருந்து அத்தியாவசியக் கொடுகடன்களைப் பெற்றன; அத்துடன் 1974ம் ஆண்டுக்குப் பின்பு, ஒப்படைப்புகளுக்கும் கொடுப்பனவுகள் வந்து சேருவதற்குமிடையேயுள்ள இடைவெளியை நிரப்ப வர்த்தகக் கொடுகடன்களின் தூண்டுதலையும் பெற்றுள்ளன.

இதற்கு நேர் எதிரிடையாக, வறிய நாடுகளின் கடன்களில் 60 சதவீதத்துக்கு மேற்பட்டவை அபிவிருத்திக்கான பொது உதவியிலிருந்தும், பொதுத்துறைகளினால் அளிக்கப்பட்ட அல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பெற்றோலியம் உற்பத்திசெய்யாத வளர்முகநாடுகள்
### குறுங்கால, நெடுங்கால படுகடன்களும் படுகடனடைப்பும் 74–83
(அமெரிக்க டொலர்களில் நூறுகோடிக்கணக்கில் % விகிதங்கள்

| | 1974 | 1975 | 1976 | 1977 | 1978 | 1979 | 1980 | 1981 | 1982 | 1983 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்தப் படுகடன் | 160,1 | 190.8 | 228.0 | 278.5 | 336.3 | 396.9 | 474.0 | 555.0 | 612.4 | 725.7 |
| குறுங்கால படுகடன் | 22.7 | 27.3 | 33.2 | 42.6 | 49.7 | 58.8 | 85.5 | 102.2 | 112.7 | 130.5 |
| நெடுங்கால படுகடன் | 138.1 | 163.5 | 194.9 | 235.9 | 286.6 | 338.1 | 388.5 | 452.8 | 499.6 | 595.2 |
| சரக்குகள் சேவைகளின் ஏற்றுமதிகள் தொடர்பாக வெளிநாட்டுப் படுகடனின் விகிதம் | 104,6 | 122.4 | 125.5 | 126,4 | 130.2 | 119.2 | 112.9 | 124.9 | 143.3 | 155.1 |
| மொத்தத் தேசிய உற்பத்தி தொடர்பாக வெளிநாட்டுப் படுகடனின் விகிதம் | 21.8 | 23.8 | 25.7 | 27.4 | 28.5 | 27.5 | 27.6 | 31.0 | 34.7 | 42,1 |
| படுகடனடைப்புக்கான கொடுப்பனவுகள் | 22.1 | 25,1 | 27.8 | 34.7 | 50.3 | 65.0 | 76.2 | 94.7 | 107.1 | 125,2 |
| படுகடனடைப்பின் விகிதம் | 14.1 | 16,1 | 15,3 | 15.4 | 19.0 | 19.0 | 17.6 | 20.4 | 23.8 | 26.8 |

வழங்கத்தரவாதம் செய்யப்பட்ட ஏற்றுமதிக் கொடுகடன்களிலிருந்தும் வருகின்றன. அபிவிருத்தி உதவிக்கான கமிட்டி, பொருளாதார ஒத்துழைப்புக்கும் அபிவிருத்திக்குமான ஸ்தாபனம் ஆகியவற்றைச் சேர்ந்த அங்கத்தவர்களின் பல்பக்க உதவித் திட்டங்களிலிருந்து வளர்முக நாடுகளில் சுமார் 36 நாடுகளுக்கு அளிக்கப்படும் நேரடியாக உதவியும், மறைமுக உதவியும் 1970ம் ஆண்டிலிருந்து 1981ம் ஆண்டு வரை இரட்டித்துள்ளது - அதாவது அபிவிருத்தி உதவிக்கான கமிட்டியைச் சேர்ந்த அங்கத்தவர் நாடுகளின் மொத்தத் தேசிய உற்பத்தியில் 0,07 சதவிகிதத்திலிருந்து 0.08 சதவிகிதத்துக்கு அதிகரித்து, 202 கோடி அமெரிக்க டொலர்களிலிருந்து 605 கோடி அமெரிக்க டொலர்களுக்கு உயர்ந்துள்ளது. வளர்முக நாடுகளுக்குச் சர்வதேச வங்கிகள் வழங்கியுள்ள கடன்களுடன் ஒப்பிடுகையில் இவ்வுதவி மிகச் சொற்பமாகும். ஏனென்றால் அக்கடன் தொகை 90,000 கோடி அமெரிக்க டொலர்கள் என்று நிபுணர்கள் கூறியுள்ளனர்.

மேலும், 1982ம் ஆண்டில், உலக வங்கி மூன்றாம் உலகநாடுகளுக்குச் சர்வதேச வங்கிகள் வழங்கும் கடன்களில் ஏற்பட்ட வீழ்ச்சியை எதிர்கொள்ளச் செல்லத் போல், அதன் முதன்மை நிலையைத் தயாரித்ததுடன், வறுமையை எதிர்த்துப் போராடும் அதன் நோக்கத்தையும் கைவிட்டது. ஏனென்றால், வளர்முக நாடுகளுக்கு வட்டியில்லாக் கடன்களை வழங்குவதில் விசேட கவனம் செலுத்தும் அதன் பிரிவான சர்வதேச அபிவிருத்திச் சங்கத்துக்கு வழங்கப்படும் நிதிகளை அது வெட்டியதுடன், கிளப்பு கேட் (திட்டக்குழு) கடன்களிலும் கூட்டு நிதியளிப்பிலும் பொதுப்பட நிறைவேற்றத் தக்க நிறுவனங்களையும் விதிமுறைகளையும் வெளியிடுகின்றதும் பற்றி பற்றுவதன் மூலம் தனியார் வங்கிகளுக்கு அதிக இணைப்பாகச் செயற்படவும் தொடங்கியது. சர்வதேச நாணய நிதியத்தின் பங்காற்றலும் மாறிவிட்டது. 1983ம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில், சர்வதேச நிதிகளைக் கடன் கொடுப்போரிடம் மூன்றும் உலக நாடுகளின் நம்பிக்கையை மீண்டும் ஏற்படுத்துவதற்காக, சர்வதேச நாணய நிதியம் நிதிச்சிக்கல்களில் சிக்கிய வளர்முக நாடுகளுக்கு விசேட எடுப்பு உரிமைகளை (எஸ். டி. ஆர்.) அதிகரிக்க உறுதி விட்டது. அதற்குப் பதிலாக, மூன்றும் உலக நாடுகளுக்கு மேலும் கொடுகடன்கள் வழங்குவதற்கு ஏற்புடைய சீரமைப்புத் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டுமெனப் பிடிவாதம் பண்ணியது.

அமெரிக்க, ஜப்பானியப் பொருளாதாரங்கள் சற்று முன்னர் விவரிக்கப்பட்ட நிதி - நாணயக் கொந்தளிப்புகளின் மத்தியில் சம்பந்தப்பட்டுள்ளன என்று சகல வங்கியாளர்களும் ஒப்புக்கொள்கின்றனர்.

இவ்விரு துறைகளிலும் உள்ள நிலைமைகளையும் நடவடிக்கை மட்டங்களையும் பரஸ்பரமாகச் சார்புடுத்துவதால் ஒரு தீர்வு சாத்தியமாகும், அது நெடுங்காலத்தில் ஜப்பானும் அமெரிக்காவும் உலகப் பொருளாதாரத்தின் மீது அதிகாரம் செலுத்துவதற்கு அடிகோலக்கூடும். எனினும், அவ்வாறு முறையாகக் கட்டுப்படுத்தப்பட்ட ஒரு விளைவை விளக்குவது கடினமாகும். இல்லாவிடின் உலகப் பொருளாதாரம் நிலைகுலைந்தும் அமெரிக்க டொலரின் பெறுமதியில் ஒரு கொடிய வீழ்ச்சி ஏற்படுவதற்கும் வழிகோலும்.

இந்நிலைமை ஒரு காட்சியின் பின்னால் நடைபெற்றாலும், இத்தியம் என்னவென்றால், அமெரிக்காவினதும் ஜப்பானினதும் வளர்ச்சியை மறு சீரமைப்பதாகும். இது 1985ம் ஆண்டிலிருந்து ஜப்பானுடன் ஒப்பிடுகையில் அமெரிக்காவின் வளர்ச்சி இடைவிடாது வீழ்ச்சியடைந்து வருவதைப் பிரதிபலிப்பதில் காணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுத்தரமாயிருப்பதையும் எடுத்துக்காட்டும்.

ஒப்பீரால் ரீதியாக, அபிவிருத்தியடைந்த நாடுகளில் வளர்ச்சி விகிதங்கள் உயர்வாயிருந்த போதிலும், சம்பளங்களில் இந்த வகைப் போக்கு மூன்றும் உலக நாடுகளின் பிரச்சினையைத் தீர்க்க உதவாது. இந்தக் காட்சியமைவின் அமெரிக்க வர்த்தக வங்கிகள் இவ்வனைக்கும் 1990ம் ஆண்டுக்குமிடையே கடன்பட்ட நாடுகளின் கடன் தீர் ஆற்றல் விகிதங்களை அவற்றின் 1979ம் வருட மட்டத்துக்குக் குறைக்கமுயலும்.

இவ்விதம் சர்வதேச கொடுகடன்களை நிர்வகிப்பதன் விளைவாக மூன்றும் உலக நாடுகளில் வளர்ச்சி விகிதம் சராசரி விகிதமாயிருக்கும் - அது 1985ம் ஆண்டிலிருந்த 4 சதவிகிதத்திலிருந்து 1987ம் ஆண்டில் 1 சதவிகிதம் வரை வீழ்ச்செல்லவைக் கொண்டிருக்கும். எனினும், இவ்வளர்ச்சி விகிதங்கள் வெவ்வேறு பிரதேசங்களுக்குமிடையே கடுமையாக மாறுபடும். இவ்வேளையிலிருந்து தசாப்தத்தின் முடிவுவரை கறுப்பர்வாழ் ஆபிரிக்கா எதிர்மறையான அல்லது பூச்சிய வளர்ச்சியையே காட்டும். மெக்ஸிகோவைத்தவிர லத்தீன் அமெரிக்க நாடுகள் விஷயத்திலும் அதுவே உண்மையாயிருக்கும். அமெரிக்காவுடனும், ஜப்பானுடனும் நெருங்கிய உறவு கொண்டுள்ள மற்றும் நாடுகளுடனும் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருக்கும் மெக்ஸிகோவினால் அதன் வளர்ச்சி விகிதத்தை நிலையாக 3 சதவிகிதத்துக்குமேல் வைத்திருப்பது சாத்தியமாகலாம்.

இது போன்ற ஓர் உபாயம் புவிக்கான ஒரு புதிய நியாய ஏற்பாட்டுடனோ அல்லது மூன்றும் உலகுக்கான ஒரு மார்ஷல் திட்டத்துடனோ எத்தகைய தொடர்பும் கொண்டதல்ல. அடுத்த இரு வருடங்களுக்குச் சராசரியாக 3.5 சதவிகித வளர்ச்சி விகிதத்தை ஜப்பானும், அமெரிக்காவும் கூட்டாகக் கொண்டிருக்கும் நிலையும், குறைந்த வட்டிவீதமும் கொடுகடனாளிகளுக்கும் படுகடன்காரர்களுக்குமிடையேயான உறவில் இப்போதுள்ள நிலையையே தொடர்ந்து வைத்திருக்குமெனலாம். திண்ணம், மூன்றும் உலக நாடுகளின் சர்வதேச படுகடன்கள் ஆண்டுதோறுமாகக் கால அட்டவணைகள் மீண்டும் தயாரிக்கப்படுவதன் மூலமாகவே தொடர்ந்து நிர்வகிக்கப்பட்டுவரும். நிதிக் கஷ்டங்களில் உழலும் நாடுகள் மீது சர்வதேச நாணய நிதியத்தின் நெருக்குதல்கள் தளர்ந்துவிடா. இது அமெரிக்க வங்கிகளுக்கு நிதிப் பாதுகாப்பு அளித்துவிடாது. ஆனால், இது அமெரிக்க வங்கிகள் தனித்தனி நாடுகளுடன் மட்டும் கொடுக்கல் வாங்கல்களை வைத்திருக்கும்படி கட்டுப்படுத்திவிடும் அல்லவே, கொடுகடன்களின் அளவைப் பன்கீடு செய்வதன் மூலம் நிலைமை சமாளிக்கப்படும்.

1984ம் வருடம் ஜூன் மாதம் லண்டனில் நடைபெற்ற இலத்தீன் அமெரிக்க நாடுகளின் மகாநாடும் 1984ம் வருடம் செப்டம்பர் மாதம் நடைபெற்ற சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி ஆகியவற்றின் கூட்டங்களும், வெளிநாட்டுப் படுகடன்கள் சம்பந்தமாக இவ்வொரு நாட்டுடனும் தனித்தனியாகப் பேச்சுவார்த்தைகள் நடத்தும் விஷயத்தை மீண்டும் திருத்தவில்லை. எனினும், தனித்தனியாகப் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்குரிய ஓர் அடிப்படையாகப் பயன்படுவதற்கு ஓர் ஆதார ஆவணம் தயாரிக்கப்படுவதவசியமென்று முதன் முறையாக அம்மகாநாடுகள் சுட்டிக் காட்டின. இரு அடிப்படைக் கொள்கைகள் விதிக்கப்பட்டன: நிரந்தரமான தீர்வொன்றைக் கண்டுபிடிப்பதற்கான பொறுப்பைச் சகல தரப்பினரும் பகிர்ந்து கொள்ளவேண்டும்; நீட்சிக்குரிய கஷ்ட சாத்தியமான பிரயாசமும் சம அளவில் பகிரப்படவேண்டும்; அம்மகாநாடுகளில் சமுகமளித்தவர்களின் பெருந்தொகையினர் மூன்றும் உலக நாடுகளின் வெளிநாட்டுப் படுகடன் பிரச்சினையை ஓர் அரசியல் பிரச்சினையாகவே கருதினர்.

எனினும், மூன்றும் உலக நாடுகளில் ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவையோ சம்பந்தப்பட்டதும் கடந்த காலத்தில் செலுத்தப்பட்டிருக்க வேண்டிய கடன்களோ அல்லது வட்டியோ சம்பந்தப்பட்டதுமான அமெரிக்க வங்கிகளில் ஒன்றிலோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றிலோ 1985ம் ஆண்டில் அல்லது 1986ம் ஆண்டில் ஒரு பெரிய நெருக்கடி ஏற்பட்டால், அமெரிக்க அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் நடவடிக்கைகளில் தலையிடக்கூடும். அப்பொழுது, சம்பந்தப்பட்ட நாடு ஒரு மீட்சித் திட்டத்தைக் கைக்கொள்ளும் நிபந்தனைமீது அந்நாடு ஒரு கடனைப்பெறும். அத்துடன், இறுதிப் பகுப்பாய்வில் அமெரிக்க அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துக்கு ஆதரவாக நிற்கும் அல்லது அதன் கடன்களுக்கு மறு நிதியளிப்புச் செய்வதற்காகக் கடன்வழங்க அதை அனுமதிக்கும். இதைக் கவனிக்குமிடத்து, சர்வதேச நாணய நிதியத்துக்கு அமெரிக்க "கோட்டா" அதிகரிக்கப்படுவதைப் பகிர்ந்து கொள்ளவேண்டுமென்று அமெரிக்க காங்கிரஸ் (ஜனப்பிரதிநிதி சபை) செய்த முடிவின் அர்த்தபுஷ்டி தெளிவாகும். கொடுப்பனவுகள் இடைநிறுத்தம் செய்யப்படுவதற்கு அரசேவாக்கூடிய ஒரு நிலைமை மூன்றும் உலக நாடுகளில் தோன்றுவதை அனுமதிக்க அமெரிக்க வர்த்தக வங்கிகளைப் போலவே அமெரிக்க அரசாங்கமும் விரும்பவில்லை.

இவ்விதமாக, ஆகக் கூடிய அளவுக்குக் கடன்பட்டுள்ள நாடுகளுக்கு மறு நிதியளிப்புக்கான தேவைகள் கிரமமாகப் பூர்த்தி செய்யப்படுகின்றன. உண்மையில், இச் சூத்திர முறையின் செயற்பாட்டுக்கு எந்த வரையறையுமில்லையென்றால், சர்வதேச நாணய முறைமீது எந்தத் தடுப்பு விசையுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபாற் கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

மக்கள் வங்கி ஒரு சமூகப்பணித் திட்டமாக "பொருளியல் நோக்கை" வெளியிடுகின்றது. பாரபட்சமற்ற பரிசீலனைகள், கருத்தாழமிக்க கலந்துரையாடல்கள் என்பன மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்திப் படிமுறையிலும் ஆர்வத்தினை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதே எமது குறிக்கோளாகும். நாட்டின் மிக முக்கியமான சமூக, கலாசாரத் தேவைகள் குறித்து வங்கியின் வளங்கள் பயன்படுத்தப்படும் பல்வேறுபட்ட திட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.

மேலும், மக்கள் வங்கி, நாடெங்கணும் சிதறிக் காணப்படும் 200 க்கும் அதிகமான அதன் கிளைகள் மூலமும், சுமார் 550 கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் மூலமும், கடற்றொழில் வங்கிகள் மூலமும் விரிவான சகல வங்கிச் சேவைகளையும் வழங்கி வருகின்றது. உலகெங்கணுமிருக்கும் முகவர்கள், பிரதிநிதிகள் என்போரின் உதவியுடன் சர்வதேச வர்த்தகம், கொடுப்பனவுகள் என்பன குறித்த சகல அம்சங்களையும் வங்கி மேற்கொண்டு வருகின்றது.

பிரதி விலை ரூ. 3-50

வருட சந்தா ரூ. 40-00

# பொருளியல் நோக்கு

## மக்கள் வங்கியின் ஆராய்ச்சிப் பகுதி வெளியீடு

283, கே. சிறில் சி. பெரேரா மாவத்தை கொழும்பு-13ல் உள்ள இண்டர் நெஷனல் கிரபிக் மெகசின் லிமிட்டட் அச்சுயந்திரசாலையில் அச்சிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org